# ஆதாரக் கல்வி

2 1-2

மே, ஜூன், 1949.

TN3m211, N48
N49.2.1-2
208719




# ஆதாரக் கல்வி

ஆசிரியர்: அ. கீ. ஜே. சர்மா

ல்வி 2 | விரோதி சித்திரை—மே 1949 | கலை 1


28 MAY 1949

ராம ராஜ்யம், சுயராஜ்யத்[illegible]யாகும். இதன் பொருள் தர்ம ராஜ்யம், நியாயம் அல்லது அன்பாட்சி, அஹிம்சா சுயராஜ்யம் அல்லது மக்களாட்சியாகும்.

மக்களின் சுய ஆட்சியெனில்—ஒவ்வொரு நபரின் சுய ராஜ்யத்திஞல் உண்டாகும் மக்களாட்சியாகும். இத்தகைய ஆட்சி, ஒவ்வொரு மனிதனும், தனது பிரஜா உரிமையின் காரணமாகப் புரியவேண்டிய கடமையைச் செய்வதால் அமைகிறது.

உரிமையை விளைவியாத கடமையே இல்லை. உரிமையென்பது நிறைவேற்றப்பட்ட கடமையினின்றும் உண்டாவதே.

சேவையைக் கடைப்பிடிப்போனுக்கே பிரஜா உரிமை கிடைக்கும்; அவனுலேயே அதைச் சமாளிக்க இயலும்.

காந்திஜி.


## ஆதாரக் கல்வி காரியாலயம்,

நெ. 87, ஆச்சாரப்பன் தெருவு,

ஆண்டுசந்தா ரூ. 3] சென்னை. [தனிப்பிரதி அணு 4

# பொருளடக்கம்


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஆதாரக் கல்வித் திட்டம் | 1 |
| 2. | மாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர் விரிவுரை | 3 |
| 3. | பூஜ்யர் விநோபாபாவே விரிவுரை | 4 |
| 4. | மாநாட்டுத் தீர்மானங்கள் | 5 |
| 5. | சர்வோதயச் சங்கப் ... சிறப்புரை | 7 |
| 6. | உறுதி ... K. G. கிருஷ்ணன் | 8 |
| 7. | புராதன கல்வி | 9 |
| 8. | வார்தாவில் என் வாழ்க்கை—பண்டித வி. நடேசன் | 11 |
| 9. | நம் தேசிய வாழ்க்கை | 13 |
| 10. | ஸ்ரீ பகவத்கீதை —A. S. குருசுப்பிரமணியம் | 15 |
| 11. | ஆசிரியர் தகுதி —ஐ. நடேசன் | 17 |
| 12. | ஆசிரியர் உள்ளம் ... கி | 19 |
| 13. | பணமில்லையா? ... —P. S. சுப்பிரமணியன் | 21 |
| 14. | வழிபாடு —ஆசிரியர் ஆதிரையன் | 24 |
| 15. | உபநிஷதங்கள் —ஆசி | 26 |
| 16. | சர்க்காரும் லோகல்போர்டும்—எஸ். ஸ்ரீநிவாசன் | 28 |
| 17. | செய்திச் சுருள் | அட்டை 3—4 |



# வெங்கட்ராமா அண்டு கோ.,

பிரசுரகர்த்தர்கள் :

**1-C, ஆண்டர்சன் தெரு, சென்னை-1.**

எங்கள் வசம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான கீழ்க்கண்ட எல்லாவித புத்தகங்களும் கல்வியில் தேர்ந்த போதகர்களால் எழுதப்பட்டும் சென்னை அரசாங்கத்தாரால், பாட புத்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது. சீசன் காலத்தில் ஆர்டர்கள் தாமதமாகாமலிருக்க தங்களுக்குத் தேவையானவைகளுக்கு ஆர்டரை முன் கூட்டியே அனுப்பக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

1. புதியமுறைத் தமிழக வாசகம் 1 முதல் 5 வகுப்புவரை.
2. ஆரம்ப கணிதம், 3 முதல் 5 வகுப்புவரை.
3. இயற்கைப் பாடமும், தோட்ட வேலையும், 4, 5 வகுப்புகளுக் குரியது.
4. இந்துதேச சரித்திரம், 4, 5 வகுப்புவரை.
5. இந்துதேச சரித்திரம், 6 முதல் 8 வகுப்புவரை.
6. தமிழ்மொழிப் பயிற்சிகள், 3 முதல் 5 வகுப்புவரை.
7. தமிழ்நீதி கதா வாசகம், 3 முதல 5 வகுப்புவரை.
8. தென்னாட்டுப் பேரரசர், இலக்கிய கதைகள்.
9. புதுமலர் பூகோளம், 4, 5 வகுப்புவரை.



OFFICE OF ... 23 MAY 1949 MADRAS





# ஆதாரக்கல்வி

ஆசிரியர்-அ. கி. க. சர்மா


208919



கல்வி 2 | விரோதி, சித்திரை—மே 1949 | கலை 1


## ஆதாரக்கல்வித் திட்டம்

ஒரு சமுதாயத்தின் வாழ்வு அதிலுள்ள கல்வி முறையையே பொறுத்தது. விதைக்கு ஒத்தவாறுதான் விளைவு இருக்கமுடியும். இதையொட்டி, நம் சமுதாயத்துக்கு உகந்ததோரு கல்வித்திட்டத் தின் அடிப்படையான அம்ஸங்களைக் காந்திஜி தொகுத்துக் கொடுத் தார். ஒவ்வொரு தனி மனிதனும், அதன் மூலம் சமுதாயம் முழுதும் சகல துறைகளிலும் பூர்ண வளர்ச்சி பெற வசதி அளிப்பதே அண்ணல் அளித்த ஆதாரக்கல்வித்திட்டத்தின் முக்கிய நோக்கம்.

நமது சமுதாயம் ஜனநாயகரீதியில் இயங்கவேண்டும்; அது தனி மனிதனது வளர்ச்சிக்குத் தாராளமாக இடமளித்து, அதைச் சமூக க்ஷேமத்துக்கான ஒரு சாதனமாக்கிக்கொள்ளும் வகையில் அமைய வேண்டும், ஆனால் அத்தகைய ஒரு சமுதாய அமைப்பு உருவாவது, அந்நோக்கத்துடன் ஏற்பாடான ஒரு கல்வி முறையைக் கையாள்வ தைப் பொறுத்துளது. சரியான "விவஸ்தை" வளரச் செய்ய வேண்டுமென்பதே இப் புதிய திட்டத்தின் பிரதானமான அம்ஸம். பல நாடுகளில் இதைப் புறக்கணித்ததால் ஏற்பட்ட விபரீதங்களை யும், டாக்டர் சக்கீர் ஹுசேன், தலைமை உரையில், குறிப்பிட்டுள் ளார். வாழ்வை வளப்படுத்துவதற்கு உண்மையில் பயன்படக் கூடியவை யென்பதை நேராக நிதானிக்கத் தெரியாத ஒரு தனி மனிதனுக்கோ, ஒரு சமூகத்துக்கோ வாழ்க்கை சுமையாகவே இருக் கும். அவ்வாறின்றி சிறு பிராயத்திலிருந்தே "வியவஸ்தை" பெருகச் செய்து அதன்மூலம் சமுதாயத்தின் ஒவ்வொருஉறுப்பும், தனிப்பட்ட முறையிலும், அதன்மூலம் பொதுவாக சமூகம் முழுதும் வளர்ச்சி

பெற வழி செய்வதென்ற கருத்துடனேயே இப்புதிய திட்டம் அமைந்துளது.

இதுவரை நம் நாட்டிலிருந்த கல்வி முறையும் ஒரு திட்டமான நோக்கத்துடன் கூடியதே. ஆனால் அந்நோக்கம் நமது சமுதாய க்ஷேமமன்று; அதிகார பீடத்திலிருந்த அந்நியரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத் தோன்றியது. அத்திட்டம் அது உண்மையில் நம் மக்களது வாழ்வுடன் எவ்விதத் தொடர்புமற்ற ஒரு ஏட்டுச் சுரைக்காயா யிருந்தது. இந்த விபரீதத்திற்குப் பதிலாக, நமது சமுதாய நிலைமைக்குப் பொருத்தமான ஒரு பயிற்சியை, போதனையை நமது சிறுவர்களுக்கு அளிக்கவேண்டும். குறிப்பாக அப் பயிற்சி மனத்தைப் பற்றியதாகமட்டுமன்றி, உடலைப் பற்றியதாகவும் அமைந்து அவர்களுடைய இயற்கைத் திறன் பூரணமாக சோபிக்க வசதி செய்யவேணடும் என்ற நோக்கத்துடனேயே ஆதாரக் கல்வித் திட்டம் தோன்றியிருக்கிறது சிறுவர்களின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, பல்வேறு கைத்தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சியளிப்பதும், அதே சமயத்தில் உத்தமமான ஒரு வாழ்வு நடத்துவதற்குத் தேவையான ஒரு உள்ளப்போக்கை அவர்களிடையே வளர்ப்பதும் ஆதாரக் கல்வித் திட்டத்தின் முக்கியமான அம்சங்கள்.

இத்திட்டம் தற்போது எல்லா மாகாணங்களிலும் வெவ்வேறு அளவில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் அடிப்படையான கொள்கைகள் ஒன்ருயிருப்பினும், விவரங்கள் வேறுபடுவது இயற்கையே. இவற்றை உருவாக்குவதில் மாகாண அதிகாரிகள் மிக்க ஜாக்கிரத்தையாக நடந்து கொள்வது அவசியம்.

ஆதாரக்கல்வியின் ஒரு தொடர்ச்சியாகவே அதற்கு மேற்பட்ட கல்லூரிக் கல்வித்திட்டம் அமைபவேண்டும். அதற்கும் சர்க்கார் உடனடியாக ஆவன செய்யவேண்டும்.

ஆதாரக் கல்வித் திட்டம் வெற்றிகரமாக இயங்குவது, இதை நடத்திவைக்க முன்வரும் ஆசிரியர்களின் யோக்கியதையையே பொறுத்தது. ஆனால், ஆசிரியத் தொழிலில் தற்போதுபோன்ற மிகக் கேவலமான ஊதிய விகிதம் நீடிக்கும்வரை, தக்க யோக்கியதை உள்ளவர்கள் வேண்டியவளவு முன் வருவது அருமை என்றே தோன்றுகிறது.

---

3-ஆம் பக்கத் தொடர்ச்சி

வழக்கங்கள் குழக்தைக்குப் புகட்டப்படுகிறது. அடிப்படைக் கல்வியில் குறைபாடுகள் இல்லையென்று நான் கூறவில்லை. அதை எவ்வளவு சீர்திருத்தம் செய்து முன்னேற்றமடையச் செய்ய முடியுமோ அதைச் செய்யவேண்டும். இதற்கு உண்மையான ஊழியர்கள் அவசியம்.

# |ர! ஆவது ஆதாரக் கல்வி மகாநாடு



## வரவேற்புக்கமிட்டி தலைவர் விரிவுரை.

5-ஆவது அகில இந்திய அடிப்படைக் கல்வி மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ டி. எஸ். அவனுசிலிங்கம் செட்டியார் அவர்களின் வரவேற்புப் பிரசங்கத்தில், சென்னை மாகாணத்தில் அடிப்படைக் கல்வியின் முன்னேற்றத்தைப்பற்றிக் குறிப்பிட்டதின் சுருக்கம். இங்கே, 1946 இல் ஆதாரக் கல்வி தீவிரமாகஆரம்பிக்கப்பட்டது. அடிப்படைக் கல்வி பள்ளிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. சென்ற மூன்று வருஷங்களாகக் கவர்மெண்ட் பயிற்சிச்சாலைகள் எல்லாவற்றிலும் அடிப்படைக் கல்வி பயில ஆசிரியர்கள் பலர் சேர்க்கப்பட்டனர். சென்ற வருஷம் 15 அடிப்படைக்கல்வி பயிற்சிப் பள்ளிகள் மாகாணத்தில் வேலை செய்துகொண்டு வந்திருக்கின்றன. இவ்வருஷம் 17 பயிற்சி ஸ்தலங்கள் திறக்கப் பட்ஜட்டில் பணம் ஒதுக்கி வைக்கப்பட்டது. இவைகளில், விவசாயத்திற்காக நிலமும், கைத்தொழில்கள் பயிலவேண்டிய உபகாணங்களும், உபாத்தியாயர்களுக்குக்குடியிருக்க வசதியும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பயிற்சிச்சாலைகளுக்கு ரூபா 10 லக்ஷம் செலவிடப்பட்டிருக்கிறது. மேலும் அடிப்படைக் கல்விப் பாடசாலை புதிய கட்டிடங்களுக்கு, தனிப்பட்ட நபர்களால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு ரூபா 5 லக்ஷமும், கவர்ன்மெண்டாரால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு ரூபா 2 லக்ஷமும், பணம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு கவர்ன்மெண்டு கல்லூரிகளிலும் அடிப்படைக் கல்வி சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஆதரவில், பெரியநாயக்கன் பாளையத்தில் ஒரு ஸ்தாபனமும். தென்னூற்காடு ஜில்லாவில் கீழ மூங்கிலடியில் ஒரு அடிப்படைக் கல்விப் பாடசாலையும் நடந்துவருகின்றன.

மதுரை ஜில்லா காந்தி கிராமத்தில் கஸ்தூரிபா டிரஸ்டார் ஒரு பாடசாலையும், மேற்கு கோதாவரியில் சீதா நகரத்திலும், பாலக்காட்டிலும், வேதாரண்யத்திலும், பேரூர், தாம்பரம், திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் முதலிய இடங்களிலும் பாடசாலைகள் நடந்துவருகின்றன. எல்லாப் பாடசாலைகளுக்கும் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் தான் தேவை. இதற்குச் சரியான இளைஞர்களை வரும்படி செய்யவேண்டும். அவர்களுடைய அந்தஸ்து, சம்பளம் முதலியவை திருப்திகாமாக இருக்க வேண்டும். உபகாணங்களுக்கு, மூலப்பொருள், செய்பொருள்களை எப்படி விநியோகம் செய்வது. கணக்கு வைப்பது, படிப்பையும் தொழிலையும் எப்படி இணைப்பது, சரியான புஸ்தகங்கள் அச்சிடுவது முதலிய நிர்வாக பிரச்னைகளும் கவனிக்கப்படல்வேண்டும். இவைகளுக்கு மேலாகக் குழந்தைகளின் சிரத்தை குறையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இரண்டு தப்பு எண்ணங்கள் இருக்கின்றன. நூல் நூற்பதில் நிபுணராயிருந்தாலும், குழந்தைகளுக்கு ஞானத்தைப் புகட்டத் தெரியாமலிருந்தால், அவருக்கு அடிப்படைக் கல்வி யொன்றுமே தெரியாது. இதுவும் தவறான எண்ணம். அடிப்படைக் கல்வி, குழந்தை, பாடசாலை, வீடு, விளையாடுமிடம், இங்கே எல்லாம் அது செய்யும் எல்லாக் காரியங்களிலும் கலந்திருந்து மிக அனுபவத்தைப் புகட்டுகிறது. மேலும், இந்தக் கல்வி மூலம் நல்ல பழக்க

(2-ஆம் பக்கம் பார்க்க)

ஆதாரக் கல்வி மகாநாடு

# பூஜ்யர் விநோபா பாவே விரிவுரை

5-ஆவது அகில இந்திய அடிப்படைக் கல்வி மகாநாடு 7, 8, 9 தேதிகளில் பெரியநாய்க்கன் பாளையம் ராமகிருஷ்ண வித்யாலயத்தில் கூடிற்று. டாக்டர் சக்கீர் உசேன் தலைமை வகித்தார்.

**பிரதிநிதிகள் :—**இந்தியா முழுவதிலிருந்தும் சுமார் 350 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

**திறப்புரை :—**ஆசார்யர் விநோபாபாவே மகாநாட்டைத் திறந்துவைத்து, பின்வருமாறு கூறினார் ஸர்வோதய ஸமாஜம் ஸ்தாபிக்கப்படுவதற்கு அடிப்படைக் கல்வி முக்கிய சாதனமாகும். நாட்டில் அடிப்படைக் கல்வி அபிவிருத்தி அடைந்து முன்னேறும் என்று எனக்கு நம்பிக்கையுண்டு, இந்த முறை சர்க்காரால் நடத்தப்படக்கூடாது அவ்விதம் நடந்தால் பழய சாராயத்தைப் புதுப் புட்டிகளில் வைப்பதற்குச் சமமாகும்.

**அடிப்படைக் கல்விக் காலம்:-** அடிப்படைக் கல்விக்காலத்தை 7 வருஷங்களுக்குக் குறைவாகச் செய்வதை நான் விரும்பவில்லை. அவ்விதம் செய்வதால் மேற்படி கல்வி ஜீவனற்றுவிடும். நன்கு பரிசீலித்த பின்பே, ஏழு வருஷ காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைக் குறைக்கக்கூடாது.

**கைத்தொழிலும் அறிவும் ;—** கைத்தொழிலுடன் சம்பந்தப்படாத அறிவு பலனற்றது. எதையும் விஞ்ஞான ரீதியில் செய்ய முயற்சிக்கவேண்டும். நடனம், நாட்டியம், சங்கீதம் ஆகியவற்றிற்கு ஒரு வரம்பு உண்டு. அவைகளால் பள்ளிகளில் உண்மை வேலைகள் மறைத்துவிடும்படி விட்டுவிடக்கூடாது.

**அடிப்படைக் கல்வியின் உற்பத்தி அம்சம் :—**உயர்வு, தாழ்வு, இல்லாமல் எல்லா மாணவர்களும் தங்கள் கடமையை உணர்ந்து உற்பத்திக்கு உதவ வேண்டும். சிலர் உழைக்காமலேயே உண்டு களிக்கின்றனர். சிலர் நாள் முழுதும் உழைத்தாலும் அவர்களுக்கு உணவு அகப்படுவது அரிதாக இருக்கிறது. சரீர உழைப்பின்மூலம் ஒவ்வொருவரும் உற்பத்திக்கு உதவுவது என்ற கொள்கையை நாம் ஒப்புக்கொண்டால் நமது சமூகமும் தேசமும் உயர்ந்த நிலையை அடையும். உழைப்பினால் அறிவு ஏற்படும். ஒன்றுக்கொன்று சம்பந்தம் உண்டு. அடிப்படைக் கல்விப் பள்ளிகள் சரியாக நடத்தப்பட்டால் அவைகளை நடத்த அதிகப்பணம்தேவையில்லை. நமது ஏழை நாட்டில், அதிகப் பணச்செலவு இல்லாமல் எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி போதிக்க முடியும் என்று ஆதாரக் கல்விப் பள்ளி நிர்வாகஸ்தர்கள் நிரூபிக்கவேண்டும்.

**டாக்டர் சக்கீர் உசேன் :—** தமது தலைமை உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

மனிதனின் குண விசேஷங்கள் பெருகக்கூடிய ரீதியிலே ஜனநாயக சமூக அமைப்பை ஏற்

(5-ஆம் பக்கம் பார்க்க)

# ஆதாரக் கல்வி மகாநாட்டுத் தீர்மானங்கள்

5-ஆவது அகில இந்திய அடிப்படைக் கல்வி மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின :—

கல்வித் திட்டத்தில் கைவேலைக்கு சரியான ஸ்தானம் அளிக்கப்பட்டபொழுது நல்ல உபயோகமான சாமான்கள் உற்பத்திசெய்யப்படுகின்றனவென்று பல இடங்களிலிருந்து கிடைத்திருக்கும் தகவலைக் கேட்டு மகாநாடு திருப்தி அடைகிறது. இதிலிருந்து கைவேலை கல்வித் திட்டத்தில் ஒரு அம்சமென்று உணரப்பட்டால் பள்ளிகளை நடத்தும் செலவிற்கு உற்பத்திபோதுமான அளவு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 7, 8 வருஷத்திய பூரண அடிப்படைப் பாடசாலைகளில் தான் சாத்யம். ஏனென்றால் கடைசி மூன்று வருஷத்தில்தான் பாடசாலையின் உற்பத்திக்குப் பெரும்பாகம் அளிக்கப்படும். சில மாகாணங்களில் அடிப்படைக் கல்வி காலத்தை பணத்தின் காரணத்தால் 5 வருஷத்திற்குக்குறைக்க உத்தேசிப்பதை கண்டு இம் மகாநாடு வருத்தப்படுகிறது. 8 வருஷம் வரை கல்வியை நடத்திக்கைவேலையைச்சரியாய் அமைத்தால் அதிக செலவு ஒன்றும் ஆகாது. மேலும் ஒரு பிள்ளையின் பூர்ண அபிவிருத்தி 8 வருஷக் கல்வியால்தான் சாத்யம். ஆகையால் எல்லா காரணங்களைக் கொண்டும் அடிப்படைக்கல்வி 8 வருஷங்களுக்குக் குறைந்து இருத்தலாகாது.

முன் அடிப்படைக் கல்வியின் வேலையைத்தேச நிர்மாண வேலையில் முக்ய அம்சமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று மகாநாடு அபிப்பிராயப்படுகிறது. ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் இதற்கு ஒரு பயிற்சி ஸ்தலப் முதலாவதாக ஏற்படுத்தக் கேட்டுக்கொள்கிறது.

அடிப்படைக் கல்வி சம்பரான் (பீஹார்) ஜில்லா குமார்பார்க்கில்

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

படுத்த, காந்திஜி விரும்பினார். விஷயங்களின் சரியான மதிப்பை உணர்தலே அடிப்படைக் கல்வியின் முக்கிய நோக்கம். அடிப்படைக்கல்வி வெற்றிபெறச் சரியான ஆசிரியர்கள் அவசியம். பல ஸ்தாபனங்கள் தாமாகவே விரும்பி, அடிப்படைக் கல்வி வரை, தம்தம் பள்ளிகளை நடத்த வேண்டும். படிப்பு காலமும் 8 வருஷங்களுக்குக் குறையக் கூடாது. இந்திய சர்வகலாசாலைகள், கல்வி முறையைச் சீர்திருத்திக்கொள்ளவேண்டும்.

பீஹார்சர்க்காராலும் சேவா கிராமத்தில் தாலிமி சங்கத்தாராலும் நடத்தப்படுவதையும் கண்டு மகாநாடு திருப்தி அடைகிறது. இந்த ஸ்தலங்களில் நடக்கும் பாடசாலைகளில் ஏற்படும் அனுபவத்தைக்கொண்டு ஒரு கல்வித் திட்டம் தயாரிக்கச் சிபார்சு செய்கிறது!

அடிப்படைக் கல்வித் திட்ட விஷயமாய்ப் புஸ்தகங்கள் தயாரிக்க அடிப்படைக் கல்வி ஊழியர்கள் சகலரையும் மகாநாடு கேட்டுக்கொள்கிறது. இப்புஸ்தகங்கள் உபாத்தியாயர்களுக்கும், பிள்ளைகளுக்கும், உபயோகமுள்ளவைகளாக இருக்கவேண்டும்.

அடிப்படைக் கல்வி ஸ்தாபனங்கள் புதிய கல்வித் திட்டத்தின் லட்சியத்தை அனுசரித்த கட்டடங்களில் அமைக்கப்படவேண்டும்.

அடிப்படைக் கல்விப் பயிற்சிக் கல்லூரிகளும் இருக்க வசதியுள்ள ஜாகைகளுடனிருக்க வேண்டும். இந்தப்பயிற்சிச்சாலைகளுடன் இணைக்கப்படும் பாடசாலைகளில் குழந்தைகளுக்கு மத்தியான சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

முதியோர்க் கல்விக்கு வேண்டிய ஏற்பாடுகள் ஸ்திரமான வேலைகள்மூலம் செய்யப்படவேண்டும்.

8 வருஷத்திய அடிப்படைக் கல்வித் திட்டத்தைத் தேசமுழுவதும் சீக்கிரமாகப் பரவச்செய்ய வேண்டிய ஸ்தலமும் கட்டடங்களும் அளித்து உதவிபுரிய தேச மக்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது. இம்மாதிரி பூமிகளும் கட்டடங்களும் மாற்றிக்கொடுக்க விதிகளைச் சுலபமாகவும் மற்றப்படி உதவி செய்யவும் சர்க்காரை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

அடிப்படைக் கல்வி மூலம் உற்பத்திசெய்யும் பொருள்களைக் கிராம சமூகத்திற்கு வேண்டிய அளவு உபயோகப்படுத்திக்கொள்ளுவதுடன் ஜக்கீர் ஹுசென் கமிட்டியின் சிபார்சுகள்படி சர்க்காரும் இதே உற்பத்திச்சாமான்களைத் தங்கள் உபயோகத்திற்கும் இதர ஸ்தாபனங்கள்மூலம் மற்றவர்களுக்கும் விற்கப் பொறுப்பு எடுத்துக்கொள்ள மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

---

நமது பத்திரிகைக்கு இரண்டாவது யாண்டு பிறந்தது. அவரவர்கள் தங்கள் சந்தாத் தொகையைத் தாமதமின்றி யனுப்பி யுதவ வேண்டுகிறோம்.

**ஆசிரியர்.**

**கட்டுரையாளர்கள்.** மொத்தத்தில் அறுநூறு சொற்களுக்கு அதிகப்படாமல் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் வரைந்தனுப்புக.

**ஆசிரியர்.**

# சர்வோதயக் கண்காக்ஷி

## பிரதமரின் திறப்புரை

சென்னைப் பிரதமர் ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா அடிப்படைக்கல்வி மகாநாட்டின் ஆதரவில் நடைபெற்ற சர்வோதயக் கண்காட்சியைத் திறந்து வைத்தார். ஸ்ரீ ராஜா தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது:—

மகாத்மாகாந்தி நம் நாடு விடுதலையடைந்து முன்னேற எந்தெந்த கொள்கைகளைப் போதித்துத் தாமும் பின்பற்றி வந்தாரோ, அந்தக் கொள்கைகள் உருவாக, சிறிய அளவில் இந்தக்கண்காக்ஷி விளங்குகிறது. நய்து வேலை வெற்றி பெற முதலில் கிராமங்களில் வேலை செய்ய வேண்டுமென்று காந்திஜி கருதினார். கிராமங்களுக்காகச் சேவை செய்வதே புனித வேலையாக மதித்தார். விவசாயமும் கிராமப் பொருளாதாரமும் நாட்டின் முதுகெலும்பாதலால் அந்தத் துறைகளில் கவனம் செலுத்தினார். சர்க்கார் ஆதரவு இன்றியும் இயந்திரப்போட்டியாலும் உள்நாட்டு கைத்தொழில்கள் நசிந்து விட்டன. அத்தொழில்களைப் புனருத்தாரணம் செய்வதே காந்திஜியின் கிராமப் புனருத்தாரணத் திட்டத்தில் முக்கிய அம்சமாகும், கதரே அவருக்கு எல்லாவற்றையும். விட அதிகப் பிரியம். உணவும் உடையும் மக்களின் பிரதமத் தேவைகளாதலால் மக்களின் க்ஷேமத்துக்கு உணவு எப்படி அவசியமோ அதேபோல் உடையும் அவசியம். மில்கள் ஓரளவுக்குத் தொழிலாளருக்கு வேலை கொடுத்து அவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்தாலும் அவைகள் பெரும்பான்மையான கிராம மக்கள் எல்லோருக்கும் எவ்விதம் வேலை கொடுக்கமுடியும்? விவசாயமும் வருஷ முழுவதும் வேலை கொடுப்பதில்லை. சிலமாதங்கள் வேலையின்றி இருக்கவேண்டியிருக்கிறது. ஆகவே தேசத்தின் சக்தியின் பெரும்பகுதி வீணுகிறது. கதர் ஒன்றுதான் அவர்களுக்கு வேலைகொடுத்து அவர்களது ஏழ்மையைப் போக்குமென்று காந்திஜி கருதினார். ஏனெனில் சிறிய பழையசாதனங்களைக்கொண்டு கதரை உற்பத்தி செய்ய முடியும். இம்மாதிரி எல்லாப் பழைய சாதனங்களையும் அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியம்.

இந்தியா சர்க்காரின் விவசாய ஆராய்ச்சிக் கழகம் அபிவிருத்தி செய்யப்பட்ட கலப்பை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறது. இது சாதாரண கலப்பையை விட இரண்டுமடங்கு வேலைசெய்யும் இதனுல் அதிக செலவோ மாடுகளுக்குக் கஷ்டமோ ஏற்படாது. டிராக்டரைப் போன்று அவ்வளவு செய்யாவிட்டாலும் கிராம

8-ஆம் பக்கம் பார்க்க.

# உறுதி

உலகொடு ஓங்கிய உயர்வை உள்ளி
அலகில் கல்வியும் நம்மவர் தடைய
வெள்ளை யுள்ளத்து பச்சிளம் பாலரைப்
பள்ளியிற் பயிற்றிக் கலைகள் கற்பிக்கும்
பெரும்பெயர்த் தொழிலில் புகுந்தவர் யாவரும்
உறுதியும் கொள்வோம் உற்றதைச் செய்யவே
உருபொருள் கொடுத்துக் கற்பதை விரும்பும்
பற்பல மாணவர் பயனுறு முறையில்
வெள்ளித் திரையொடும் வானொலி கொண்டு
உளபநூல் முறையில் தெரிந்த வகையில்
பழிபல வகுத்து வித்தையைக் கொடுப்போம்
அறியாமை பற்ற ஆமைபோல் ஊரும்
வரியவ ருற்ற விரோதியை அழிக்க
விரோதி வருஷச் சித்திரை நாளில்
உறுதியும் கொள்வோம் உற்றதைச் செய்யவே
ஆதாரமின்றி யொரு கட்டிடம் இல்லையாம்
அடிப்படை யெனத்தகும் ஆதாரக் கல்வியை
ஆதரித்து ஆவன ஆனந்தமாய்ச் செய்ய
உறுதியும் கொள்வோம் உற்றதைச் செய்யவே.

கே. ஜி. கிருஷ்ணன், எம். ஏ., பி. டி.

---

7-ஆம் பக்கத் தொடர்ச்சி

மக்களுக்கு இது உதவிகரமாக இருக்கும்.

## கைத்தொழில் அறிவின் முக்கியத்வம்.

மாணவனின் சூழ்நிலையை உபயோகப்படுத்திக்கொண்டு அவனது சக்திகளையும் குணுதிசயங்களையும் மலர வைக்காத எந்தக் கல்வியும் உபயோகமற்றது என்று காந்திஜி உணர்ந்தார். மாணவர்களுக்குக் கைத்தொழில் அறிவு ஏற்படுத்துவதால் குடிசைத் தொழில்களுக்கு ஆக்கம் அளிக்கப்படுவதுடன் பரிசுத்த வாழ்க்கைக்கும் தூண்டுதலாக இருக்கும். இதுவே அடிப்படைக் கல்வியில் அடிப்படை.

காந்திஜியின் கொள்கைகளாலேயே காங்கிரஸ் தேச விடுதலை பெற்று அதிகாரத்தில் அமர்ந்திருக்கிறது.

ஆகவே காந்தீயக் கொள்கைகளின்படி தீவிரமாக நடக்க வேண்டிய பொறுப்பு நமக்கு தற்போது அதிகமாக ஏற்பட்டிருக்கிறது.

# புரட்சிக்கல்வி—9

K. G. கிருஷ்ணன், M.A., B.T.,

4. துணி துவைத்தல்:—துவைத்தலா, தோய்த்தலா என்பது தெரியாமல் கல்லும் பிளந்துபோகும்படி ஆடைகளைக் கல்விலே அறைபவரும் உண்டு. அப்படியெல்லாம் செய்வது சரியல்ல. கந்தையானாலும் கசக்கித்தான் கட்டவேண்டும். கசக்கிக் கட்டவேண்டும் என்ற நிபந்தனை கந்தைக்கு மட்டும் அல்ல. நல்ல உடைகளுக்கும் ஆகும். சோப்பு அல்லது 'சவுக்காரம்' உபயோகப்படுத்துவதிலும் நிதானத்தைக் கற்பிக்கவேண்டும். அழுக்கு ஏறுவதற்கு இடமில்லாதவரையில் அழுக்காக்கிவிட்டுத் துணிகளுக்குச் சோப்பு போடுவதால் கெட்டுவிடுகின்றன. ஆகையால் சிறிது அழுக்கு ஏறினாலும் அதிலே சோப்பைத் தேய்த்துச் சிறிது ஊறவைக்கவேண்டும். பிறகு நுரையோடு அழுக்கு வெளியேறும்படி தேய்க்கவேண்டும் அல்லது கசக்கவேண்டும். கல் சில்லாகும்படி அடிக்கக்கூடாது. அரையை மறைக்கப் போதிய அளவு ஆடைகள் இல்லாதார் மிகுந்த இந்த நாட்டிலே வண்ணானுக்குப் போட்டு மடிப்புக்கலையாத ஆடையை அடைய முயற்சி செய்வது வீண் என்பது எல்லாருக்கும் தெரியும். அரையாடை மேலாடை என்ற இரண்டொடு காந்தியடிகள் காட்டிய வழியில் வாழ்வது மிகவும் நல்லதுதான். அமிதமாக ஆடைக்குச் செலவிடும் நண்பர்கள் அந்த அதிகப்பொருளை ஆக்க வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

5. உறக்கம்:—முகத்தை மூடாமல் உறங்கவேண்டும். தலைமுதல் கால்வரை சவத்தை மூடுவதுபோலப் போர்வையால் மூடிக்கொண்டு உறங்குவது மிகக் கெட்ட வழக்கம். ஒருநாள் இப்படிச் செய்வதால் ஒன்றும் ஆகாது என்று சொல்லித் தினமும் இப்படியே உறங்குபவரை என்ன சொல்வது! அவர்கள் என்றும் உறங்குபவராய் விடுவார்கள்! பெரிய வியாதிகளுக்கு இந்தப் பழக்கம் ஒரு நுட்பமான காரணம் ஆகிவிடுகிறது என்பதை மனதில் பதிய வைக்கவேண்டும்.

6. மூச்சு விடுதல்:—மூச்சு விடுவதற்கு மூக்கு இருக்கும்பொழுது வாயினால் மூச்சு விடுவது தவறு என்பது தெளிவு. வாயினால் மூச்சு விடுவதால் adenoids என்ற நுட்பமான மெல்லிய பஞ்சுபோன்ற பகுதி மூக்கைத் தடைப்படுத்தும் அளவுக்கு வளர்ந்துவிடும். பிறகு காலக்கிரமத்தில் மூக்கால் மூச்சு விடுவதற்கும் ஆபத்து வந்துவிடும்.

இப்பாடத் திட்டத்தில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாவது வகுப்பு வரை வரையப்பட்டிருக்கின்ற ஆரோக்கியம், துப்புரவு, சமூகப் பயிற்சி இவை சம்பந்தமான விவரங்களைப் பார்க்கும்பொழுது, மேல் வகுப்பிற்குச் செல்லச் செல்ல மாணவர்களுக்கு இவற்றின் நிர்வாகத்தில் அதிகமான பயிற்சி அளிக்கப்படுகின்றது என்பது நன்றாக விளங்குகின்றது. நிர்வாகத்திலும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியந்தான். ஒரு இயக்கத்தைச் செம்மையான முறையில் நடத்துவதற்கு நிர்வாகம் என்று சொல்லப்படும். ஒரு இயக்கத்தை அல்லது தனக்கு உட்பட்ட சில மனிதர்களை அடக்கி ஆள்வதில் எந்த மனிதனுக்கும் ஒரு தனித்த தருக்குணர்ச்சி ஏற்படுகின்றது. இப்படியெல்லாம் பயிற்சி அளிப்பதில் ஒரு ஆபத்தும் உண்டு என்பதை நாம் நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும். பெரும்பாலோர் தாம் ஆளப்பிறந்ததாக நினைப்பதுண்டு. இந்தப்

பயிற்சியும் பெற்றால் தாமே வேலை செய்வதற்குப் பதிலாகப் பிறரை வேலையில் ஏவுவதில் கருத்தாய் இருந்துவிடுவார்கள். இப்பொழுது நாட்டிலே வேலை வேட்டையில் இறங்கியிருக்கும் இளைஞர்பால், ஒருவர் கீழிருந்து வேலை செய்வதைக் காட்டிலும் பலரை அடக்கி ஆளும் பதவியையே அதிகமாக விரும்புகின்றனர். ஆகையால் மேல் செல்லச்செல்ல நிர்வாகத்தில் அதிகப் பயிற்சி பெற்றுவரும் ஆதாரக் கல்வி மாணவர்கள் முறை வைத்துக் கொண்டு வேலை செய்துவந்தால், ஒரு தொழிலில் மனிதன் கொள்ள வேண்டிய கௌரவ உணர்ச்சி கடைசிவரையில் அவர்களிடத்தில் சிதையாமல் இருக்கும்.

நிற்க, ஆதாரக் கல்வி சம்பந்தமாகப் பல்கலைக் கழக அங்கத்தினர் டாக்டர் மார்கன் அவர்கள் வெளியிட்ட கருத்துக்களைச் சிறிது ஆராய்ந்து பார்க்கலாம். மார்கன் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களில் பிராஜெக்ட் முறை (Project Method) ஆதாரக் கல்வி முறையைக் காட்டிலும் சிறந்தது என்பது ஒன்றாகும். ஆனால், மார்கன் துரையவர்களே அம்முறையில் பொருள் செலவு அதிகமாயிருக்கிறது என்று சொல்லுகின்றார். டாலர் பெருமான் தாண்டவமாடும் அமெரிக்க நாட்டிலே இச் சிறந்த முறை அதிகப் பொருளை விழுங்கிவிடுகின்றது என்று இந்தப் பிரமுகரே எடுத்துச் சொல்லுகின்றார். இந்த நாட்டில் இருந்துவரும் பழைய கல்வித் திட்டத்தில் நாம் காணும் குறைகளில் இதுவும் ஒன்று. அப்படியிருக்க இக் குறையை நீக்காமல் மேலும் மேலும் பொருளை விழுங்கும் திட்டத்தை மேற்கொண்டால், திட்டத்தின் பொருள் சம்பந்தமான பாரம் கல்வியறிவு தேடும் ஏழை மாணவன் தலையில் விழுந்துவிடும். ஆகையால் பிராஜெக்ட் முறையின் சாரத்தைமட்டும் கிரஹித்துக்கொண்டு கூடியவரை நாம் அதை அனுசரிக்க முயற்சி செய்வதே சரியாகும். அதற்கு ஆதாரக் கல்வித் திட்டத்தைப் பரந்த நோக்கத்தோடு வகுக்க வேண்டும்.

இத் திட்டத்தில் ஒரு தொழிலை மையமாகக் கொண்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, தன் வேலையைத் தானே செய்வதிலும் எந்தத் தொழிலையும் பெருமையோடு மேற்கொள்ளுவதிலும் கௌரவ புத்தியைக் கற்பிப்பது. மற்றொன்று, பொருளாதார ரீதியில் இத்திட்டம் சிறந்த அமைதிகொண்டது. அறிவு பெறவேண்டியவர்களிற் பெரும்பாலார் ஏழைக் கிராமவாசிகள். தம் தொழிலையே தம் மக்கள் மேற்கொள்ளுவதால் எந்தத் தகப்பனும் திட்டத்தை உற்சாகத்தோடு வரவேற்பான். ஆனால், தொழிலை மட்டும் பெறக் கற்பிப்பது ஆசிரியருடைய நோக்கம் அல்லவே! ஒரு தொழிலின் மூலமாக அறிவுபெறும்பொழுது பொது அறிவு சம்பந்தமான சில பாடங்களில் மாணவர்களுக்குத் தொடர்பு ஏற்படாமல் இருந்துவிடலாம். அப்பேர்ப்பட்ட பாடங்களைத் திட்டத்தில் கூடியவரையில் அமைத்துக்கொள்வதற்கு ஆசிரியர்க்கு இடம் பொருள் ஏவல்களுக்கு ஏற்ப சுதந்திரத்தை அளித்துவிட வேண்டும். மேலும் சிறு வகுப்புக்களில் எல்லாப் பாடங்களையும் போதிக்கவேண்டிய அவசியமில்லை. மையமாக எடுத்துக் கொண்ட தொழில் மூலமாக மாணவன், 'இயற்கை முறையில்' எவ்வளவு அறிவு 'அடைய' முடியுமோ அவ்

11ஆம் பக்கம் பார்க்க.

# வார்தாவில் என் வாழ்க்கை

ஆசிரியர்: **பண்டித வி. நடேசன்**

**வா**ழ்க்கையில் முயற்சி வேண்டும்; முயற்சி இயற்கை நேர்வை ஒத்தியங்குதல் மிக்க நலம். அந் நேர்வு வேறு; அதன் பலன் வேறு. விடா முயற்சியற்று விரைவும் நிறைவும் அடைதல் அருமை. தாளாண்மையின்றி இயற்கையால் கிடைக்கும் பலன் தானே விழும் பிஞ்சில் பழுத்த காய் ஒத்தது.

எனவே மாவரைக்கும் பேறு என்னைப்பற்றியதும் நம் நல்வினையே என்று எண்ணி இயந்திரம் சுற்ற முயன்றேன். நாள் செல்லச் செல்ல முயற்சி திருவினை ஈன்றது. அத்திருவினை புண்ணியமன்று; செல்வமும் அன்று. உயிர் வாழும் உடலுக்குரிய சக்தி என்பேன். இஃது அற்றோர் உலகில் இருந்தென் இறந்தென் என்ப. எனவே நாளுக்கு நாள் மாவரைத்தல் ஒரு புதிய தவசக்தியுடன் புத்துணர்ச்சியும் புதுப்பித்துப் பூத்தது. சக்தியிலார் பூத்தலிற் பூவாமை நன்று எனலாம்.

---

10ஆம் பக்கத் தொடர்ச்சி.

வளவு அடையச் செய்வதே ஆசிரியரின் நோக்கமாக இருக்கவேண்டும். இயற்கை முறையில் அறிவு அடைய வேண்டும் என்பதை மார்கன் அவர்கள் வற்புறுத்தி யிருக்கின்றார்கள். உற்றுப் பார்த்து நன்றாக மனதிலே வாங்கிக்கொண்டு சிந்தனைசெய்தலே இயற்கை முறை ஆகும். மான்டெஸோரிக் கல்வி முறையும் இந்த இயற்கை வழியை அடிப்படையாகக் கொண்டது. பண்டைக் குருகுலங்களிலும் அறிவை மாணவர்கள் அடைந்தார்களேயன்றி அவர்களுக்கு அறிவு புகட்டப்படவில்லை. அறிவு கொளுத்துவதுதான் ஆசிரியர் வேலையாக இருந்துவந்தது. ஆதாரக் கல்வித் திட்டத்திலும் அதுவே ஆசிரியர் வேலையாக இருக்கும். தாமாகவே கருத்துக்களை விருப்பு வெறுப்பு இல்லாமல் ஆராயக்கூடிய அளவிற்கு அறிவு நிலையை வளர்த்து விடவேண்டும். ஆசிரியர் ஊக்கப்படுத்தும் வழிகாட்டியாக இருப்பார்.

மார்கன் அவர்கள் மாணவர்களை இரண்டு பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிற்கும் வாரத்தில் மூன்றுநாள் விடுமுறை அளித்து மாற்றிக்கொள்ளலாம் என்று ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். பிரிவினையோ என்று அஞ்சவேண்டாம். ஆனால் கருத்து கவர்ச்சிகரமாக இருக்கின்றது. கிராமத்தில் உள்ள ஏழைப் பெற்றோர் தம்மக்கள் மூன்று நாட்களுக்குத் தம் தொழிலில் உதவி செய்வதை வரவேற்பார்கள். ஆசிரியர்களும் அதை வரவேற்கலாம். ஏனென்றால் மூன்று நாள் ஆசிரியரிடம் கற்றதை மூன்று நாள் பெற்றோரோடு செய்துகாட்டலாம் அல்லவா? இதனால் தம் போதனையின் தரத்தை ஆசிரியர் அறிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பமும் வாய்க்கின்றது. இந்தியச் சூழ்நிலையை அறிந்துகொண்டுதான் ஆசிரியர் மார்கன் இந்தக்கருத்தை வெளியிட்டிருக்கின்றார். மாணவர்கள் விடுமுறை நாட்களில் மறந்துவிடுவார்களோ என்று அஞ்சுவார்க்கு, அஞ்சேல் என்று ஆசிரியர்கள் அபயம் அளிக்க முடியும்.

உடல் வன்மை வேண்டும். நல்லுடல் நல்லறிவின் கால்கோள். 'உடலார் அழியின் உயிரார் அழிவர்' என்பர் திருமூலர். 'காயமே கோயிலாகக் கடிமனம் இலிங்கமாக' என்றார் அப்பர். 'உன் உடல் இறைவனது ஆலயம்' என்றார் இயேசு. என்றும்மென்மையைக் காக்குமாறு வன்மை உள்ளது. மென்மை வன்மையுடன் வாழ்ந்திலகுவது. மக்களிடத்தும் மாக்களிடத்தும் பல பருப்பொருள்களிடத்தும் இவ்விரு பண்புகள் உள்ளன; பல்வேறு முறையில் இயங்குகின்றன.

வன்மையும் மென்மையும் கூடின் இன்பம். இப்பண்பில் விளைவது இனிய இன்பம். அஃதாவது அறமுறைமையுற்ற பண்பில் விளைவது; இக்குணத்தையும் பலனையும் அடைந்தோருடைய வாழ்வு இன்பத்தின் கருவூலம். ஆண்மையும் பெண்மையும் இப்பண்பால் எழும். இன்பம் விரும்புவோர் இவற்றை எய்தல் வேண்டும். அவற்றின் ஒழுங்கே பயனும்; அறனும். அன்பும் அறனும் அணையும் இடத்தையும் ஆண்மையும் பெண்மையும் ஒன்றி வாழும் இடத்தையும் இன்பம் விளைநிலங்கள் எனலாகும்.

ஆடவர்க்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடித்தல் என்பன ஆணியல்புகள். மகளிர்க்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன பெண்ணியல்புகள். ஆண் பெண் இருபாலர்க்கும் இன்றியமையாதன சக்திகளே. உடல் வலியிலார்க்கு இவ்வுலகமில்லை; உயிர்வலி இலார்க்கு அவ்வுலகமில்லை என்பனவாம். காரணம்; மனிதனது உடலே இருவினைக்கும் மூலம். ஒவ்வொருவனுக்கும் பிணி மூப்பு சாக்காடு உண்டு. பிணிக்கும் துன்பத்திற்கும் காரணம் ஒருவனது உணவும் செயலும் என்பேன்.

நோய் வருவதற்குக் காரணம் உழைப்பின்மையும் மீதூண் விரும்பலும் சிற்றின்ப வெறியும் ஆம். நோய் மூலம் உணவும் செயலும் எனவும் கூறுப. நோய் எல்லோர்க்கும் கூடவே பிறந்துளது. 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' அன்றோ! இந்நோய் போன்றிருந்தாள் சூர்ப்பனகை இராவணனுக்கு என்று காட்டக் கம்பர் 'கடிய நோயனாள்' என்றாரன்றோ? எனவே, நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம். இச்செல்வம் பெற நல்லுடல் வேண்டும். நல்லுடல் விரும்பின் நல் வாழ்வு வரும்.

நல் வாழ்விற்கு நல்லுடல் மூலம். நல்லுடல் நல்லுணவாலும் நற்செய்கையாலும் பெறலாம். நல்லுணவுண்டு நல்வினையாற்றி நல்லுடல் பெறினும் ஒருவனுக்கு நல்லுழைப்பும் அவசியம். நல்லுழைப்பு நல்லெண்ணம் காணும். உழைப்பற்றவனுக்கு ஊக்கம் குறையும்; புல்லறிவு பூண்பான். சுருங்கக் கூறின் சோம்பித்திரிவோர் சுகங் காணமுடியாது. அற்ப சுகங் காணினும் வீணே அழிவர். இஃது உண்மை. அனுபவத்திற் கண்டது.

# நம் தேசிய வாழ்க்கை

## நோய்க்கிருமிகள்

ராஜீய, சமூக, கல்வித்துறைகளில் ஏற்படும் குறைகளாகிய நோய்க்கிருமிகள் நம் சமுதாயத்தில் நுழைந்து பாதிக்க ஆரம்பிக்கின்றன. இதைக் குணப்படுத்துவதற்காக நோயின் அடிப்படையான காரணத்தை அறிந்து அதன் ரத்தத்திலிருக்கும் அசுத்தங்களை நீக்கவேண்டும்.

நம்முடைய பலமும், சக்தியும், என், நமது தேகத்தின் உயிர்நாடியே ஆத்மீக ஞானம். ஆத்மீக வாழ்வில் நம்பிக்கை வைக்கவேண்டும். அது நம் இயற்கையுடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருக்கிறது. அதை உணராவிடின் அழிவை நோக்கியே செல்லுகின்றவர்களாவோம். அதுதான் நமது மக்களின் ஜீவாதாரம். எனவே அதை நாம் பலப்படுத்த வேண்டும். அதுதான் நம் உயிர்நாடியாக விருந்து வந்திருக்கிறது.

ஆத்மீக வாழ்க்கைக்கு அவசியமான ஞானத்தைப் புகட்டும் மணிமொழிகள் பல நமது இலக்கியங்களில் நிறைந்திருக்கின்றன; வேதாந்த நூல் ஒளிர்கின்றன. இவ்வரிய கருத்துக்கள் எல்லோருக்கும் கிட்டும்படி செய்யவேண்டும். இவ்வெண்ணங்கள் பொது ஜனங்களுடைய தாய்மொழியில் நன்கு மொழிபெயர்க்கப்படவேண்டும்.

ஞானத்துடன் கண்ணியமும் பண்பும் உண்டாகவேண்டும். வரக்கூடிய எதிர்ப்புகளைத் தாங்கும் சக்தி பண்புக்குத்தான் இருக்கிறது. வெறும் கல்விக்கு அவ்வளவு வலிமையில்லை. உலகத்திற்கு வெறும் அறிவுரைகளைப் புகட்டல் மாத்திரம் அதிகப் பயனை அளிக்காது. இரத்தத்தில் பண்பும் இருக்கவேண்டும். கல்வியறிவு உடம்பின் தோல் ஆழத்திற்கு மேல் செல்லுவதில்லை. நாம் தற்காலம் பெற்றிருக்கும் நாகரிகமும் அவ்வளவுதூரந் தான் எட்டியிருக்கிறது. ஒரு சிறு கீறல்கூட உள்ளிருக்கும் மிருகத் தன்மையை வெளிப்படுத்தி விடுகிறது. இதுதான் வெறும் புகட்டுவதிலுள்ள ஆபத்து. எனவே, கல்வியறிவையும் பண்பையும் மேற்கொள்வதே பலவித வித்தியாசத்தையொழிப்பதற்குச் சரியான வழி.

மனிதன் தன் எண்ணங்களினாலேயே கட்டுண்டிருக்கிறான். உலகம் முழுதும் அத்தகைய சக்தியால்தான் கட்டுண்டிருக்கிறது. மனத்திட்டந்தான் மனிதனிடமிருக்கும் அருஞ்

---

12-ஆம் பக்கத் தொடர்ச்சி.

நல்லெண்ணமற்ற நல்லுடல் நாளாவட்டத்தில் நாசமுறும். இறைவனையடைய எடுத்த பிறவி மானிடம். 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்' என்றார் கபிலர். மானிடம் பெற்றோன் நல்வினையால் நல்லுலகும் அவவினையால் அருநரகும் அடைகின்றான். நல்லறத்திற்கும் அல்லறத்திற்கும் காரணமான உடலை ஓம்பாது விடுதல் பேதைமை. உடலுக்கு உழைப்பும் தேகப் பயிற்சியும் கட்டாயம் வேண்டும். தேகப் பயிற்சியின் கூராகவே மாவரைத்தலை மாணவர்களுக்குத் தந்தார் காந்தியார்.

(தொடரும்)

சக்தியாகும். மனத்திட்டம் இருப்பவனிடம் ஓர் ஒளியுண்டாகிறது. அவன் மற்றவர்களைத் தன் வயப்படுத்தி, தன்னைப்போலவே அவர்களையும் நினைக்கச்செய்கிறான். இம்மாதிரி மகத்தான சக்தி வாய்ந்தவர்கள் உலகில் பல சந்தர்ப்பங்களில் தோன்றுகிறார்கள். சக்தி நிறைந்த புருஷர்கள் தோன்றும் போது, அவர்கள் தங்கள் எண்ணங்களை நம் மனத்தில் புகுத்துகிறார்கள். அதன் காரணமாக நாமும் அவ்வெண்ணங்களை நினைத்து சக்தியுடையவர்களாகிறோம். ஏன்! ஸ்தாபனங்கள் அல்லது சங்கங்கள் தனி மனிதர்களைவிட அதிகம் சக்திவாய்ந்தவைகளாக இருக்கின்றன? மனோதத்துவ சாஸ்திரத்தின்படி இதன் காரணமென்ன?

“நீங்கள் எல்லோரும் ஒரு மனதினராக விருங்கள்; நீங்கள் எல்லோரும் ஓர் எண்ணத்துடன்வாழுங்கள்” என்று வேத வாக்கியம் ஆணையிடுகிறது. ஒரு மனத்துடனிருந்த காரணத்தால்தான் தெய்வங்கள் தங்கள் தெய்வத்தன்மையைப் பெற்றன. ஒரு மனத்தினராக விருத்தல்தான் தனி மனிதர்களும், சமூகங்களும் வெற்றிபெறும் ரகசியம். எனவே, எதிர்கால இந்தியா இவ்வொற்றுமை உணர்ச்சியையே முற்றிலும் சார்ந்ததாக விருக்கிறதென்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒருமை மனதும், ஒற்றுமை உணர்ச்சியும் ஒன்றாகக் காரியங்களைச் செய்தலும்தான் வாழ்க்கையில் வெற்றிக்கு வழி. எனவே சில்லரைச் சண்டைகளை நிறுத்தி ஒற்றுமைப்படவேண்டும்.

ஞானத்துடன் கலந்த பண்பைப் பெற, ஆத்மீகக் கல்வி, லௌகீகக் கல்வி இவ்விரண்டையும் நாம் சரியான முறையில் திருத்தியமைக்க வேண்டும். அவைகளை இயன்றவரை தேசீய முறையில் நிர்மாணம் செய்யப்பட்டு, காந்தியடிகளால் அளிக்கப்பட்ட தேசீயக் கல்வியே ஆதாரக் கல்வி. இத்திட்டத்தை யொட்டி இளைஞர்களுக்குக் கல்வி புகட்டப்படவேண்டும். ஆண்மையும்: ஆரோக்கியமும், அறிவும், ஆற்றலும் படைத்த இளைஞர்களாக திகழுவார்கள். தங்கள் ஆத்மாவில் அளவற்ற சக்தி யிருக்கிறதென்றும், இந்நாடு முழுதையும் தட்டி எழுப்பக் கூடிய ஆற்றல் தங்களிடம் இருக்கிறதென்றும் ஒவ்வொருவரும் திடமான நம்பிக்கைக் கொள்வார்கள். இத்தகைய இளைஞர்களே முன்னைவிட சிறப்பானதொரு இந்தியாவை உருவாக்க இயலும்.

ஆசிரியர்களே! சற்று சிந்தியுங்கள். பிள்ளைகளுக்கு நல்ல கருத்துக்களைக் கற்பியுங்கள். அவை உயிர் ஊட்டுவனவாய், ஊக்கம் அளிப்பனவாய், மனிதத்தன்மை தருவனவாய், ஒழுக்கம் அமைப்பனவாய் இருக்க வேண்டும். கருத்துக்களை நன்றாகக் கிரகித்து, அவற்றைப்பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையிலும் நடத்தையிலும் ஊன்றி நிற்கும்படி செய்வீர்களாக. இத்துறையில் முயற்சி செய்வதே நம் முதல் வேலை.

# ஸ்ரீ பகவத் கீதை

A. S. குருசுப்பிரமணியம்.

அறநிலமான குருநிலத்தில் அமர் புரியத் திரண்டுள்ள பாண்டவரும் கௌரவரும் யாது செய்கின்றனர் எனத் திருதராட்டிரன் ஸஞ்சயனை வினவ, ஸஞ்சயன்! தண்ணிய தன் இனிய சொல்லால் கூறலுற்றான். அஞ்ஞான்று அணிவகுத்து நிற்கும் அறம்புரி பாண்டவர் படையை துரியோதனன் துளங்கறக்கண்டு துரோணரை அணுகி துரிதமுடன்;

அணிதிகழ் ஆசிரிய! துருபதன் மகனும் தங்களின் தண்ணளிபெற்ற மாணவனுமாகிய த்ருஷ்டத்யும்னன் வகுத்த இம் மகாபெரும் பாண்டவப் படையில்; பெருவில்லர், வீமார்ஜுனரை நிகர்த்த வீரர் யுயாதனன், விராடன், தேர்மிகு துருபதன், திறல்மிகு திருஷ்டகேது சேகிதானன், வீர காசிராஜன், புருஜித், குவலயம் புகழ் குந்திபோஜன், மனிதரேறுகிய சைப்யன், வன்மை மிக்க யுதாமன்யு, வீறுபெற்ற உத்தமௌஜன், சூரர் புகழ் ஸுபத்திரை மகன், பாஞ்சாலியின் மக்கள் முதலியோர் மஹாரதர்கள்; அந்தணர்க்கரசே! இனி நம் படையில் தங்களின் குறிப்பிற்காக சிறந்தோரை அறிவீர், நம் படையில் தாங்கள், பீஷ்மர், கர்ணன், தெவ்வர் கூட்டத்தைத் தெருளுறச் செய்யும் கிருபன், அமர் வெல்லும் அசுவத்தாமன், விறல்மிகு விகர்ணன். ஸோமதத்தன் மகன், மற்றும் பல்வேறு வீரர்கள், என் பொருளை ஆவி துறப்போர், பல்வித வில்லாளிகள் எல்லோரும் போர்வெல்லும் திறனுடையோர்; பீஷ்மரால் பாதுகாக்கப்படும் நம் படை வெற்றிகொளற்கெளிது, வீமன் காக்கும் சேனை வீறுபெற்றது, நீங்களனைவரும் அவ்வவரின் அணிகளிலே நின்று இறுதிவரை உறுதியாக பீஷ்மரையே காப்பீர்களாக என்று கூறினான்.

இத்தருணத்தில் துரியோதனன் மகிழ்ச்சி கொள்ளுமாறு கௌரவரின் முதுபெருங் கிழவன் சிங்க கர்ஜனைபோன்று சங்கொலித்தான். தொடர்ந்து சங்குகளும் பேரிகைகளும், தம்பட்டங்களும், பறைகளும் கொம்புகளும் ஒருங்கு சேர்ந்தொலித்தன.

பின்பு வெள்ளைப் புரவி பூட்டிய தேரில் இவர்ந்துவந்த மாதவனும் பார்த்தனும் தத்தம் சங்குகளை யொலித்தனர். கண்ணன் பாஞ்சஜன்யத்தை பாரதிரூத; தேவதத்தத்தை தனஞ்சயன் தாரணியாட ஒலிக்க, ஓநாய் வயிற்று வீமன் பௌண்டரத்தை முழக்கினான். குந்தியின் குலம் வளர்க்கும் தருமன் அநந்த விஜயத்தையும், நகுலன் சுகோஷத்தையும், ஸஹாதேவன் மணி புஷ்பகத்தையும் முறையே முழக்கினர்.

வில்லேருழவன் காசிக்கோமானும் தேர்வன்மைமிகு சீர் சிகண்டியும், த்ருஷ்டத்யும்னனும், விராடனும், சமரில் சலியாத ஸாத்யகியும், துருபதனும், திரௌபதியின் மக்களும், தடந்தோளுடைய அபிமன்யுவும், தத்தம் சங்குகளை ஒலித்தனர். முரசறைந்தன, முருடதிர்ந்தன, முழக்கம் மண்ணையும் விண்ணையும் முட்டி எதிரொலித்து தெவ்வர்களின் தெருளுரும் உள்ளங்களை ஊடுருவிச் சென்றது. பின் இருதிறத்தும் அம்புகள் தூது சென்றன.

அவ்வமயம் அநுமக்கொடி யுயர்த்திய அர்ஜுனன் கௌரவரை நோக்கி, வில்லேந்தி, கண்ணனிடம், அச்சுதா! என்தேரைப்படைகளிரண்டிற்கும் நடுவே நிறுத்துக; என்னோடு போர் செய்வோர் எவரெவர் என்பதைப் பார்க்கிறேன். செஞ்சோற்றுக் கடன் நன்றியைத் தெரிவிக்கும் வண்ணம் கெடுமதி துரியோதனின் பக்கத்தில் திரண்டுள்ளோரை நான் காணட்டும் என்றான்.

இவையனைத்தையும் திருதராட்டிரனுக்கு அறிவித்த ஸஞ்சயன் தொடர்ந்து திருதராட்டிரனிடம்,

பாரதநாட்டரசே! பார்த்தன் பகர்ந்ததை எண்ணி மாதவனும் படைகள் நடுவே பீஷ்மர், துரோணர், பிற மன்னர்கள் முன்னிலையில் தேரைக் கொண்டுசென்று "பார்த்தா கௌரவக் கூட்டத்தைக் காண் என்று" கூறினான்.

அங்குப் பார்த்தன் தன் தந்தையரும் தந்தையர் தம் தந்தையரும், மெய்ஞ்ஞான மளித்தாரும், உடன் பிறந்தோரும், மக்களும் பேரரும் நண்பர்களும், மாமன்மாரும், உற்றாருறவினர்களும், இருபடைகளிலும் நிற்றலைப் பார்த்து மிகவும் இரக்கமுற்றுக்கலங்கிய நெஞ்சினனாய்க் கண்ணனை நோக்கி,

"கார்முகில் வண்ணனாகிய கண்ணா! அமர் செய்யவேண்டி ஈங்கு திரண்டு நிற்கும் அனைவரையும் கண்டு, என் உறுப்புக்கள் சோர்வடைகின்றன, வாய் வற்றுகிறது; உடல் உதறுகின்றது, மயிர் சிலிர்க்கின்றது, கைக் காண்டீவம் நழுவுகின்றது. தீபோல் உடம்பு எரிகின்றது. மனம் கறங்கெனச் சுழல்கின்றது, நிற்க முடியவில்லை, கேசவா! கொடிய தீக்குறிகளைக் காண்கின்றேன். என் உற்றார் உறவினரைக் கொல்வதில் நன்மை காண்கிலேன். கண்ணா! வெற்றியும் கொற்றமும் வேண்டேன், இன்பம் விழையேன், கோவிந்தா! நமக்குக் கொற்றத்தாலும், இன்பத்தாலும், உயிர் வாழ்க்கையாலு மாவதென்? எவரை முன்னிட்டு அரசையும், கொற்றத்தவிசையும், இன்பங்களையும் விழைகின்றோமோ அவர்கள் உடல், உயிர், செல்வம், யாவும் துறந்து போர்முனையில் காட்சியளிக்கின்றார்கள். மெய்ஞ்ஞானமளித்தோர், தந்தையர், தனயர், மூதாதையர், மாதுலர், மாமன்மார், மைத்துனர், பேரன்மார் உறவினர் முதலியோர் இங்குளர். மதுசூதனா! என்னை மாய்த்தாலும் யான் மூவுலகாட்சி யடைதற்கெனினும் அவர்களைக் கொல்ல விரும்பேன். மண்ணரசிற்காகவா அவர்களை மாய்ப்பேன்? ஜனார்த்தன! கௌரவரைக் கொன்று இன்பமடைவதெப்படி? இத்தீயோரைக் கொல்வதால் நம்மைத் தீமையே சாரும். ஆகையால் சுற்றத்தாரை மாய்த்தல் தகாத செயல், சுற்றத்தைக் கொன்றபின் இன்புற்றிருப்பதெங்ஙனம். பேராசையால் மதியிழந்த இவர்கள் குடிமையை யழித்தால் ஏற்படும் தீமையையும், நண்பர்களுக்கு வஞ்சனை செய்யும் தீங்கையும் அறிகிலராயினும் ஜனார்த்தனா; குடிமையை யழித்தால் ஏற்படும் தீமையையறிந்த நாம் இம்மறத்தினின்றும் உய்ய என் அறியவில்லை! குடிமை யழிந்தால் அறங்கள் அழிகின்றன; அறமழிவதால் குடிமையை மலம் சுற்றிக் கொள்ளுகின்றது. கண்ணா! மறம் பெருகுவதால் மாதர்கள் வாழ்க்கை கெட்டுவிடுகிறது. வ்ருஷ்ணிகுலக் கொழுந்தே! மாதர் கெடுவதால் சாதிக் குழப்பம் ஏற்படுகின்றது. குடிமையை யழித்தோர் நரகத்தை அடைவர். இவரின் தென்புலத்தோர் பிண்டமும் நீருமின்றிக் கேடடைவர்! குல நசித்தோரால் ஜாதி அறங்கள், குடிமையறங்கள், வழக்கிழந்து விடுகின்றன. குடிமையறங்கள் செய்யா மானிடர் மீளா நரகத்தை யடைவர் எனக் கூறப்படுகிறது. ஆட்சியை அவாவி உற்றாருறவினரை அழிக்க முற்படும் நாம் பெரும் பாவம் செய்ய முற்பட்டோம். போர்க்கருவிகளில்லாது போர் முனையில் நிற்கு மென்னைக் கௌரவர் ஆயுதங்களுடன் என்னைக் கொன்றாலும். அது எனக்கு மகிழ்ச்சியுடைத்தாகும்" எனக் கூறினான்.

இவைகளைக் கண்டு தொடர்ந்து திருதாட்டிரனிடம் அரசே! அர்ஜுனன் மேற் கூறியவற்றைக் கூறி வருத்த மேலீட்டால் கலுழ்ந்த நெஞ்சினனாய்த் தேர்த்தட்டின்மேல் அமர்ந்தான் எனக் கூறினான் ஸஞ்சயன்.

**ஆசிரியர் பகுதி**

# தகுதி

புலவர் ஐ. நடேசன், செயின்ட் ஆன்ஸ், இராயபுரம்.

காலம் நாளுக்கு நாள் நாகரிக முதிர்ச்சியுற்றுத் திகழ்கிறது. என்றால் என்ன? மக்கள் அறிவால் திகழ்கின்றார்கள் என்பதே பொருள். இதற்குக் காரணம் கல்வி; கல்விக்குக் காரணம் பள்ளிகள்; பள்ளியில் பணியாற்றுவோர் ஆசிரியர். ஆதலால் காலச்சிறப்போ மக்கட் சிறப்போ தோன்றுவது ஆசிரியர்களால் என்றாயிற்று. இப்படிக் கூறுவதனால் ஆசிரியர்கள் தம்மைத் தாமே புகழ்ந்துகொள்வதாகாது. தற்பெருமை கூடாது ஆயினும் இலக்கண நூலாசிரியர் "தம்முடை ஆற்றல் உணராரிடை... தம்மைப் புகழ்தலும் தகும்" என்றார். இன்றைய உலகம் (சிலகாலமாக) ஆசிரியர் முதன்மையையும் தொண்டையும் உலகம் புறக்கணிக்கிறது. ஆதலால் இது சொல்லவேண்டியதாயிற்று.

ஆனால், உலகம் ஆசிரியர் கையில் இருக்கிறது என்றால் எப்படிப்பட்ட ஆசிரியர் கையில்? தகுதி வாய்ந்த ஆசிரியர் கையில் உலகம்தோன்றி, வளர்ந்து, சிறந்து, பெருமை யடைகிறது. இதை எவரும் மறுக்க முடியாது. இனி ஆசிரியர் தகுதி கூறுவோம்.

பவணந்தி முனிவர் ஒரு ஆசிரியரை உருப்படுத்துகிறார். எப்படி "உயர்குடிப் பிறப்பு, உயிர்க் கருணை, கடவுள் நம்பிக்கை என்னும் மூன்று மேன்மையுடையவராயும் பல நூல்களைப் பயின்று ஐயமற்ற தேர்ச்சியும் தாம்கற்றதைக் கேட்போர் எளிதில் உணர எடுத்துரைக்கும் மொழித்திறனும் நிலத்தைப் போலப் பெருமை, பொறுமை, மனவலிமையும் காலத்தில் முயற்சிக்கேற்ற பயனளிக்கும் பண்பும் உடையவரா யிருத்தல்வேண்டும்.

மேலும் மலைபோல தம்மைப் பிறர் அளந்தறிய முடியாத அளவு கல்வி, உலக ஞானம், எப்படிப்பட்டவராலும் அசைக்க முடியாத நிலைப்பட்ட உணர்ச்சி, எங்குள்ள வரும் அறியுமாறு புகழ், பொருள் வருவாயில்லா தொழியினும் கற்பித்தலில் தளராத கொடை ஆகிய பண்புகள் உடையவராதல் வேண்டும்.

ஐயமுற்று வருவார்க்குத் துணிந்து இதுதான் பொருள் எனத் தெளிவிக்கும் ஆற்றலும் நூற்பொருளை ஆராய்வதில் நடுநிலையும் உடையவராதல் வேண்டும் துலாக்கோல்போல.

மலரைப்போல எப்போதும் எதிலும் தான் இருந்தேயாக வேண்டுமெனப் பிறர் கொள்ளும் மேல் நிலையும் மிக எளிமையும் மேன்மையும் கண்டோரை

மகிழ்விக்கும் முக மலர்ச்சியும் உடையவராதல் வேண்டும்.

இப்படி நன்னூலாசிரியரால் உருவாக்கப்பட்ட ஆசிரியர் கையில்தான் உலக மக்கள் கைப்பொம்மையாயிருக்கிறார்கள்.

இத்துணைச் சிறப்பும் ஓராசிரியர்பெறுதல் இயலுவதா? பண்டையாசிரியர்கள் பெற்றுத்தானிருந்தார்களா? என்ற கேள்விகள் ஒரு சிலர் உள்ளத்தில் பிறக்கும். ஆம் ஒரு சிறிதும் ஐயமில்லை. நம் நாட்டில் பவணந்தியார் கண்ட ஆசிரியர்களே தாம் இருந்தார்கள். ஆதலால்தான் “ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்”, “கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்” என்ற பழமொழிகளை ஒட்டி,

“கணக்காயரில்லாத ஊர் நன்மைபயத்தலின்று” எனத் திரிகடுகம் தீர்ப்பு கூறுகிறது. என்றால் ஆசிரியர் (கணக்காயர்) முதன்மை விளங்க உணருவதோடு அவர் தம் பயனும் உணரலாம்.

ஆசிரியர் பெரும் பயனளிப்பவர் என்றால் மாத்திரம் போதாது. பயனளிக்கும் பண்பும் பொருளுடைமையும் அவரிடமிருத்தல்வேண்டும். அப்பொருள்தான் கல்வி. “சட்டியிலிருந்தால்தானே அகப்பைக்கு வரும்” என்ற பழமொழி எங்கும் வழங்குவது. பொருளிலாதவன் கொடைபுரிதல் எங்ஙனம்?

ஆதலால், கலையில் பயின்று தெளிந்த அறிவு என்னும் பொருளும் அதைப் பிறர்க்குக் கருணையுடன் சொல்லும் ஈகைக் குணமும் எளிதில் விளங்கச் சொல்லும் ஆற்றலும் வேண்டும் என்றால், இவையமைந்தால் பிற சிறப்புக்கள் தாமே அமையுமன்றோ!

அங்ஙனமின்றி அறியாமை, சோம்பல் ஆகியவை நிறைந்தமையால் பிறர்க்குச் சொல்லும் பண்பில்லாதவரும் இழிந்த மனப்பான்மையும் பொறாமை, பேராசை, வஞ்சம் பிறரஞ்சப் பேசும் வன்மொழி ஆகியவை பொருந்தியும் முறையறிந்து கூறாமலும் எளிதில் பிறர்க்குப் பயன்படாமலும் பிறருளமறிந்து கற்பிக்காமல் சிறிது சிறிதாகப் புகட்டுவதால் காலம் போக்கி வாழும் ஆசிரியர் அப்பெயர்க்கும் தகுதியாகார். இவர்களை நம்பியடையும் இளைஞர்களும் “மண் குதிரையை நம்பி ஆற்று வெள்ளத்திலிறங்கியவரேபோல் இடருற்று வருந்துவர்.

ஆதலால் உலகம் ஆசிரியரை எதிர்பார்க்குமளவு ஆசிரியர் கல்வி, அறிவு, திறன்களால் தகுதியுடையவராயிருந்தாக வேண்டும்.

---

# ஆசிரியர் உள்ளம்

**சிகி**

**வாருங்கள்!** வணக்கம்; பத்திரிகைப் பார்த்தீர்களா, மந்திரி சபை அமைப்பைப்பற்றி?

நன்றாகப்பார்த்தேன்; திறமையுள்ள மந்திரி சபை வேண்டுமென்கின்றனர் அனைவரும். ஆனால்...

ஆனால் என்ன? உயர்ந்த லக்ஷியத்தையடைய ஒரு திட்டத்தை முன்வைத்து திறம்பட உழைத்தவருக்கு அங்கு இடமில்லையே.

என்ன அப்படிச் சொல்லுகின்றீர்கள்?

நீங்கள்தான் எண்ணிப்பாருங்கள். மகாத்துமா வகுத்த திட்டத்தை குரங்குப்பிடியாகப்பிடித்து உழைத்த ஸ்ரீ அவினாசிலிங்கம் அவர்களுக்கு இடமில்லாமற் போய்விட்டது!

அதைச் சொல்லுகின்றீர்களா? எல்லாம் சரிதான், திறமை இருந்தாலும்சரி, இல்லாமற்போனாலும்சரி அதிருஷ்டம் மாத்திரம் இருக்க வேண்டும்!

சரியான வார்த்தை. அந்தப் பாழாய்ப்போன அதிருஷ்டம்திறனுடைய ஆட்கள் அருகில் கூட போகக் கூடாதா?

இன்னும் கொஞ்சகாலம் போனால் அதிருஷ்டம் திறனுடையவர் தோளிலேயே தொங்கிக் கொண்டிருக்கும்! எவர்கண்டார் எதிர்கால நிகழ்ச்சியை?

எவராவது சொன்னாரா டிப்யூடி இனிஸ்பெக்டர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமென்று?

முன்பு 90 பள்ளிகளுக்கு ஒரு டிப்யூடி இனிஸ்பெக்டர். இப்பொழுது 60 பள்ளிகளுக்கு ஒரு டிப்யூடி.

எதற்காக டிப்யூடி இனிஸ்பெக்டர்களின் சங்கியை அதிகரிக்க வேண்டும்?

எதற்காகவா? பேஷ்! நல்லகேள்வி இது! பள்ளிகளை அடிக்கடி பார்வையிடவும், பரிக்ஷை செய்யவும் அதிகாரிகள் அடிக்கடி வருகிறார்களென்றால், பள்ளிக்கூடத்தில் வேலை ஒழுங்காக நடைபெறுமென்று எண்ணுகிறது அரசாங்கம்.

சரிதான் ஆரம்பக்கல்வி அபிவிருத்தி டிப்யூடி இனிஸ்பெக்டர்களை அதிகமாக்குவதில்தான் இருக்கிறதென்று எண்ணப்பட்டுவிட்டது! அட ராமசந்திரா! அது உண்மையானால் ஒரு பள்ளிக்கு ஒரு டிப்யூடி இனிஸ்பெக்டர் வீதம் நியமிக்கட்டுமே, நமக்கென்ன? நாம் விரும்புவதும் கல்வி அபிவிருத்திதானே?

அதிகாரிகளின் எண்ணிக்கை ஏறும்போது ஆசிரியர் சம்பளமும் அதிகமாகுமா?

அதிகமாகும் என்று யார் சொல்லமுடியும்? கடவுளுக்குத்தான் தெரியும்?

என்ன அப்படிச் சொல்லுகின்றீர்கள்? மந்திரிகளின் சம்பளம் உயருமென்று எவருக்குத்தெரியும். இப்போது உயர்த்தப்படவில்லையா?

காரணம்? வாழ்க்கைச் செலவு உயர்வு காரணமாக இப்போதும் மந்திரிகளின் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

அந்தக்காரணம் ஆசிரியர் சம்பளவுயர்வுக்கும் பொருந்தாதா?

எல்லாம் பொருந்தும். மந்திரிகள் அடிக்கடி ஒன்று சேர்ந்து பேசு

கிறார்கள். ஒற்றுமையாகவும் சம்பள வுயர்வு கேட்டிருக்கலாம்!

என் நம் ஆசிரியர் கூட்டமும் அனேக மகாநாடுகள் கூட்டி கேட்டிருக்கின்றதே. இப்பொழுதுகூட இந்த மாதத்தில் முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் கூட்டம், அடுத்த மாதத்தில் தமிழ் நாடு ஆரம்ப ஆசிரியர் மகாநாடு, இன்னும் எத்தனையோ மகாநாடுகள் தாலூக்கா வாரியாக நடைபெற்றிருக்கின்றனவே! ஆசிரியர்கள் ஒன்று கூடவில்லை என்று சொல்லுகிறீர்களே?

பொறுமையாகப் பேசுங்கள். ஆரம்ப ஆசிரியர்கள் அனைவரும் ஒரே லக்ஷியம், கொள்கைக்காகத் தொண்டு செய்கின்றவர்கள். சட்ட திட்டங்களும் ஒன்றே. இப்படியிருக்க எல்லா ஆரம்ப ஆசிரியர்களும் எங்கு வேலை செய்தால் என்ன? ஒன்றாகச்சேர்ந்து முறையிடக்கூடாதா? எத்தனைப் பிரிவுகள் நம் ஆசிரியர் சமூகத்தில்!

நாம் எல்லோரும் ஆதாரக்கல்வித் திட்டத்திற்குத்தான் உழைக்கப் போகிறோம்.

"ஆதாரக்கல்வித் திட்டம்" என்று சொன்னீர்களே பெரிய நாயக்கன் பாளையத்துக்குப் போனீர்களா!

நான் போயிருந்தேன். ஆதாரக் கல்வி, ஆதாரமற்ற தென்று சொல்லும் பேர்வழிகள் போயிருந்தால் "ஆதாரக்கல்வி" வாழ்க்கைக்கு வெற்றி கொடுக்கும் ஆதாரமானவைகளைப் புகட்டும் உயர்ந்த லக்ஷியமுள்ள திட்டமென்பதை ஒப்புக் கொள்ளுவார்கள்.

உண்மையான வார்த்தை. பூஜ்யர். விநோபாபாவே, ஜக்கீர்ஹுசேன் அவினாசி இக் கல்வியாளரின் பிரசங்கத்தையாவது ஊன்றிப் படிப்பதுமில்லை. அல்லது நம் தமிழ் நாடு மு. அருணாசலம் எழுதிய "ஆதாரக் கல்வி என்றால் என்ன" என்ற புத்தகத்தையும் படிப்பதில்லை. ஒன்றும் படிக்காமல் உளறிக்கொட்டுதல் சர்வசாதாரணமாகி விட்டது இப்போது.

ஆமாம். தெரியாத விஷயங்களைத் தெரிந்து கொள்ள முற்படாமல் "ஆதாரக்கல்வி" ஆதாரமற்ற கல்வி என்பது முதல் தரமான பேத்தலல்லவா?

நாழிகையாகிறது. பேத்தல் நமக்கு வேண்டாம்.

---

வாழ்வின் பொருளையும், வாழ்வின் நோக்கத்தையும், வாழும் வகையையும், அதற்கான வழியையும் காட்டுவதே ஆதாரக் கல்வி. அது தனி மனிதனுக்கு ஒருமித்த பூரண வளர்ச்சி தருவதோடு நில்லாமல், அந்த மனிதன் வாழ்கிற சமூகம் முழுமையிலும் ஒருமித்த பூரண வளர்ச்சியைத் தந்து, உண்மையான மனித தருமம் நிலைபெறச் செய்து, "இல்லாநும் இல்லை, உடையார்களும் இல்லை" என்ற நிலைமையைப் பிறப்பிக்கும்.

"ஒருபொழுதும் வாழ்வது அறியார்
கருதுப கோடியும் அல்ல, பல"

—குறள்

# பணமில்லையா? மனமில்லையா?

P. S. சுப்பிரமணியன் அரியனூர், சேலம் ஜில்லா.

நாடு விடுதலை பெற்றது. நாட்டிலுள்ளோர் அனைவரும் சுதந்திர நாட்டில் சுதந்திரவாழ்வு பெறவிரும்பினர். பிச்சை எடுப்போன் சட்டி நிறைய சாதம் கிடைக்கும் என்றெண்ணினான். உழைப்பவன் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்குமென்று எண்ணினான். மக்களின் தேவைப் பொருளைப் பதுக்கிக் கொள்ளை லாபமடித்துக் கொம்மாளம் போடும் கூட்டம் தன் கொள்ளை உயரும் என்று கனவுகண்டது. இவ்வாறு சுதந்திரம் என்ற சொல்லைத் தங்கள் தங்கள் தரத்திற்கேற்ப பொருள் கொண்டனர். எல்லோரையும் போன்றே ஏழை ஆசானும் தன்னுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சி காண கனவுகண்டான். பிரித்தாளும் ஆட்சி தொலைந்ததும் தன் வர்க்கத்தைப் பிரிக்கும் முறையும் தொலையும் என்று எண்ணினான். சுதந்திர நாட்டிலே தன் குறை தீர்ந்து தாய் நாட்டின் கல்வித்தரம் உயரும் என்று எண்ணினான். கண்ட கனவு பலியாமல் மேலும் மேலும் தன் தொல்லைகளே நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் மிளிர்வதைக் கண்டான்.

'ஆரம்ப ஆசிரியரின்குறை', 'ஆரம்பக் கல்வி' என்றாலே அரசியலாருக்கு வேதனை தரும் வியாபாரமாக எண்ணும் காலம் அன்றிருந்தது. அந்த நிலை இன்றும் மாறவில்லை என்பது இன்றைய அரசியலாரின் போக்கும் நிரூபிக்கிறது. கல்விக்குச் செலவிடுவதை லாப நஷ்டக் கணக்கில் ஆராய முற்படுகின்றனர். இந்த நிலை நீடித்தால் இந்த நாட்டில் குழந்தைகளின் அறியாமை தொலையுமா? அல்லல்கள் நீங்குமா? எல்லாவற்றிற்கும் பல்லவி பாடுவது போல் 'பணமில்லை' என்ற பல்லவி கல்விச் சீர்திருத்தத்திலும் பாடப்படுகிறது. இது பொருக்கும் ... கனம் கல்வி அமைச்சர் அவர்கள் சென்னை சட்ட சபையிலே கல்வி இலாகாவிற்கு ரூ.9,40,29,800 அனுமதிக்கக் கோரிச்செய்தபிரசங்கத்தில் கட்டாய ஆரம்பக் கல்வியை 15 வருடங்களில் அமுல் நடத்த முடிவு செய்திருப்பதாயும், அடிப்படைக்கல்விப் பள்ளிக்கூடங்கட்கு ரூ 445 லட்சமும் ஆசிரியர் பயிற்சிக்காக ரூ 24 லட்சமும் இறுதியாக இதற்குச் செலவாகும் என்றும் 16000 ஆசியர்கள் தேவை என்றும், இப்பொழுதுள்ள 167 பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் தவிர இன்னும் 100 பள்ளிக்கூடங்கள் தேவை என்றும், ஸினிமாப்படம் மூலம் கல்வி போதனைக்கு ரூ 40,000 ஒதுக்கப்பட்டுளது என்றும் பேசியுள்ளார்கள். அப்பிரசங்கமனைத்தும் கேட்டோரைப் பிணிக்கும் தகையதாயும் கேளாரும் விரும்பிப் படிக்குமாறும் பத்திரிகையில் வெளிவந்துளது. கடந்த ஆண்டில் பட்ஜெட் காலத்தில் செய்யப்பட்ட பிரசங்கமும் இவ்வளவு அழகாகவே இருந்தது. ஆனால்,ஓரிரு இடங்களில் ஆதாரக் கல்வி முறைகள் ஜில்லா போர்டு பள்ளிகளில் ஆரம்பிக்க அரசியலாரின் திட்டம் தீட்டப்பட்டு அதற்கென பள்ளியின் சங்கியைக்கேற்ப ரூ 600 முதல் ரூ 1600வரை ஒவ்வொரு பள்ளிக்கும் அளிக்கும் முயற்சி கடந்த ஓராண்டாக நடைபெற்றுவருகிறது. ஆனால், உருப்படியான முயற்சி ஒன்றும் இன்றிப் பழைய முறையையே அங்குள்ள ஆசிரியர்கள் ஓராண்டாகக் கையாண்டுவருகின்றனர். பத்திரிகையிலும் மேடையிலும் திட்டத்தைப்பற்றி உளங் கவரும் முறையில் செய்திகள் வெளியாவதுடன் ...

உயர் திட்டமாகிய ஆதாரக் கல்வித் திட்டத்தைப் பரிபூரணமாக நிறைவேற்ற அரசாங்கம் தன் பொறுப்பில் பள்ளிகள் ஏன் நிறைவேற்றலாகாது. அத்திட்டம் வெற்றிகரமாய்ப் பரவ அரசாங்கம் அதற்கென ஏன் ஒரு பத்திரிகை நடத்தலாகாது. செகண்டரி கல்வித்திட்டம் வானளாவப் பேசப்படுகிறது. தன் பொறுப்பில் நடத்தப்படும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பள்ளிகளில்மட்டும் அத்திட்டத்தை ஆரம்பிப்பது என்? பழைய முறையில் செலவிடுவது பாழ் என அறிந்தும் அதை நீட்டிப்பது ஏன். பாழாக்கும் திட்டத்தை ஒரு சில ஆண்டுகட்கு ஏன் நிறுத்தலாகாது? அரசாங்கமே தன் திட்டத்திற்கு விரிந்த அளவில் ஆதரவளியாமல் வியாபாரிகளிடம் ஒப்படைப்பது ஏன்? ஆகையினால் இந்த நாட்டு கல்வித்தரம் உயர அரசாங்கம் தன் நேரான பொறுப்பில் கல்விக் கூடங்களை எடுத்து நடத்த வேண்டும்.

அடுத்தது பிரஜா உரிமை. எண்ணிக்கையில் மிக உயர்ந்த ஆசிரியக் கூட்டத்தார் ஒன்றுபட்டு உள்ளக் கருத்தை வெளியிடவும், உருப்படியான திட்டங்களைப்பற்றி அரசியலாருக்கு ஆலோசனைகூறவும் ஒன்றுபட்ட சங்கங்கள் இன்றியமையாதன. இதை மறுப்பது ஏன்? பணச்செலவில்லையே. மனம்தானே வேண்டும். தங்கள் பிரதிநிதிகளை சட்டசபை ஸ்தல ஸ்தாபனங்கள் இவற்றிற்கு அனுப்பும் உரிமை கோரப்படுகிறது. ஜனநாயகத்தைப் பற்றி போதிக்கும் ஆசானுக்கு ஜனநாயக பூர்வமான உரிமைகள் மறுக்கப்படுவது ஏன்? ஆசிரியர்களின் குறைகளும், கல்வியிலாகாவில் நடைபெறும் ஊழல்களும் அரசியலாருக்கு அவ்வப்போது எட்டிவிடுமென்ற எண்ணமோ? அதைக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்ற பயமா? எல்லோரின் பிரதிநிதிகளையும் ஏகாதிபத்திய அமைப்பில்கூட ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடிமை நாட்டிற்கேற்ற கல்வியை உருவாக்க விரும்பிய அன்னிய அரசு ஆசிரியப் பிரதிநிதிகளை ஏற்க மறுத்ததில் வியப்பில்லை. ஆனால் ஜனநாயக சர்க்காரும் அதே அடிச்சுவட்டைப் பின்பற்றலாமா?

இனத்தால் வேற்றுமை இல்லை. புகட்டும் கல்வியில் வேற்றுமை இல்லை. படித்த படிப்பில் வேற்றுமை இல்லை. வாழும் வாழ்க்கையில் வேற்றுமை இல்லை. இயற்கை நிகழ்ச்சிகளிலும் வேற்றுமை இல்லை ஆனால் சட்டத்தால் ஆசிரியர்கள் வேற்றுமை. ஒரு ஆசிரியைக்கு பிரசவ லீவு நிர்வாகந்தோறும் ஒவ்வொரு மாதிரியாக சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. இது ஆண்டவனும் அறிய முடியாத புதிராக உளது. மேனேஜ்மெண்டில் வேலை செய்யும் ஆசிரியை இரு திங்களிலும் அரசியலார் பள்ளி ஆசிரியை வேறு ஒருவிதமாயும் தங்கள் பிரசவலீவைக் கொண்டு சரிக்கட்டிக்கொள்ள அந்த இயற்கைதான் என்னவழி செய்துளதோ? யார் அறிவார்? மேலும் ஆரம்பப்பள்ளி ஆசிரியை என்றும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியை என்றும் கூட அந்தக் குருட்டு இயற்கை மாறுபாடு காண்பிக்காவிடினும், ஏகாதிபத்திய அரசு வகுத்த சட்டத்தின்படி ஜனநாயக சர்க்காரில் மாறுபாடு காண்பிப்பதேன்? இது நீதியாகுமா? ஒத்த படிப்பு, ஒத்த உத்தியோகம், ஒத்த பழக்க வழக்கங்கள் உடையவருக்காவது ஒருமித்த லீவு வசதிகள் அளிப்பதற்கு அரசியலார் தயங்குவதேன். இதில் வேண்டுவது பணமா? மனமா?



மேலும் புதுப்புது கல்வித் திட்டங்களை அரசாங்கத்தாரும் பணக்காரக் கூட்டத்தாரும் பட்டணங்களிலேயே நிறைவேற்ற முற்படுகின்றனர். அம்முறை ஒழிந்து கிராமங்களில் நிறைவேற்ற முற்படுமாறு அரசாங்கம் ஆவன செய்தல்வேண்டும். ஒரு பணக்காரர் ஓர் உயர்நிலைப்பள்ளி கட்டச் செலவிடும் பணத்தை ஒரு சில கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகள் ஏற்படுத்த உதவுமாறு செய்யலாம்.

ஆசிரியர் அந்தஸ்து அவர்களைப் பட்டமிட்டு அழைப்பதனாலும், சபையின் முன் வரிசையில் அமர இடம் அளிப்பதனாலும் வந்துவிடாது. கும்பி நிறையக் கூழ் குடிக்க வகையற்ற ஆசிரியரை குருஜியென்று அழைப்பது வெந்த புண்ணில் வேல் கொண்டு குத்துவதைத்தான் ஒக்கும். அரையில் உடுக்க ஆடையற்ற ஆசிரியர் கூட்டத்தை அவையின்முன் அமரச்செய்ய சட்டமியற்றுவது அவர்களை அவமானமுறச்செய்யவே பயன்படும். வறுமையால் வாடிச் சிறுமையால் சீரழியும் ஆசிரியர் கூட்டத்தின் அந்தஸ்தை உயர்த்த இவை ஒரு சிறிதும் பயன்படா. தன் பொது அறிவை அதிகப்படுத்தி அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள இன்று எத்தனை ஆசிரியர்கட்கு பொருளாதார வசதி இடங்கொடுக்கிறது. நல்ல நூல்களைப்பற்றியும் நல்ல ஆராய்ச்சிகளைப்பற்றியும் அறிய விரும்பும் ஆசிரியருக்கு இன்று நாட்டில் எத்தனை நல்ல நூல்களும் செய்தித் தாள்களும் உள? எல்லாம் பணம்பறிக்கும் கொள்ளைக் கூட்டமாகவன்றோ உள. அவ்வாறு ஒரு சில இருப்பினும் அவற்றினை ஆசிரியர் கனவிலும் கருத முடியாதே. அவர்களின் குறைந்த கூலியை சம்பளம் என்று பெயரிடுவதே அகௌரவம் என்று ஒரு அறிஞர் சட்ட சபையில் கூறியது எவ்வளவு பொருத்தம்.

ஆசிரியர்களின் தொகை அதிகம் என்பதற்காக மயங்குவது நாட்டு முன்னேற்றத்தில் அக்கறை கொண்டோரின் கருத்தாக இருக்க இயலாது. மாகாணம் முழுதும் அதிருப்தியைத் தெரிவித்த அன்று அரசாங்கம் அடுத்த பட்ஜெட்டில் ஆவன செய்வதாக அபயமளித்து ஒரு சிறிது உயர்வைக் காட்டாமல் காட்டி அதிருப்தித் தீயைத் தற்காலிகமாக அணைத்தது. ஆனால் வாக்குறுதிகளெல்லாம் காற்றுவாக்கில் தொலைந்தன. பட்ஜெட்டில் செப்புக்காசுகூட ஆசிரியர் ஊதியத்தை உயர்த்த வழி செய்யப்படவில்லை. தற்காலிகமாக அணைந்த தீக்கு விலைவாசி உயர்வென்னும் காற்று வீச, வறுமை நெருப்பு வகையுடன் பற்றி எரிகிறது. குமுறும் எரிமலை வெடிப்பதற்குள் அரசியலார் வறுமை போக்க வகை செய்தல் நலம். அமைதிக்குப் பின் புயல் என்னும் முதுமொழியின்படி ஆசிரியர்களின் அமைதிக்கும் ஓர் எல்லையுண்டு. விலைவாசி உயர்வால் சட்டசபை உறுப்பினர்கள் மட்டும் பாதிக்கப்படுவதில்லையன்றோ? வேதனை என்பது யாவருக்கும் ஒன்றே ஆதலின் அன்புருக்கொண்ட அரசியலார் ஆவன செய்வார்களென நம்புகின்றோம்.

# வழிபாடு

ஆசிரியர் : "ஆதிரையன்"

குழந்தைகளே, வழிபாடு என்றசொல்லை நீங்கள்கேட்டிருக்கிறீர்களா? கேட்டிருப்பீர்கள். ஆனால் அச்சொல்லின் கருத்தை ஊன்றிக் கவனித்திருக்கமாட்டீர்கள்.

வழிபாடு என்னும் சொல்லைச் சில தொடர்களில் அமைத்துப் பார்க்கலாமே!

ஆலய வழிபாடு, கடவுள் வழிபாடு, பெரியோர் வழிபாடு எனச் சொல்லிப்பாருங்கள். இந்த வழிபாடு என்னும் சொல்தான் பூசை என்று வழங்குகிறது.

பூசை - பூசித்தல்-வழிபடுதல்- தெரிந்ததா? இனி இச்சொல்லை விட்டு அதனால் அடையவேண்டிய பொருளைப் பார்ப்போம்.

வழிபாடு என்றால் பின்பற்றுதல் என்றும் சொல்லலாம்.

ஆலய வழிபாடு என்றால் கோவிலில் போய் கடவுளை வழிபடுதல் (பின்பற்றுதல்) என்றும், கடவுள் வழிபாடு என்றால் கடவுளின் கொள்கையைப் பின்பற்றுதல் என்றும், பெரியோர் வழிபாடு என்றால் மூத்தோர் குணங்களையும் பழக்கங்களையும் பின்பற்றுதல் என்றும் பொருள் கொள்ளவேண்டும்.

நாம் எவரைச் சிறப்பாக மதிக்கின்றோமோ அவருடைய எண்ணத்தையும் குணத்தையும் நடத்தையையும் கட்டாயம் மதிப்போம். அப்படி மதிக்கப்பட்ட எண்ணம், குணம், நடத்தைகளை நாமும் மேற்கொண்டுவிடுவோம். இப்படி மேற்கொள்வதுதான் பின்பற்றுதல்; வழிபடுதல்.

இங்கே முதன் முதல் நாம் கடவுள் வழிபாட்டைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

கடவுள் வழிபாட்டுக்கு முன்னே கடவுள் எங்கே? எப்படி? இருக்கிறார் என்பதைச் சிறிது விளக்கலாம்.

கடவுள் எங்கும் இருக்கிறார். எள்ளுக்குள் எண்ணெய்போல என்பதுதான் முடிவு. ஆனால் கடவுள் நம்பிக்கையில் தெளிந்த அறிவுவேண்டுமானால் ஒரே தெய்வந்தான் எங்கும் எவர்க்கும் எப்போதும் உண்டு என்கிற உறுதி கொள்ளவேண்டும்.

அவர் எப்போது தோன்றினார்? என்னும் கேள்வி பிறக்குமல்லவா? கடவுள் எப்போது தோன்றினார் என்பதை எவரும் கண்டறிந்து சொல்ல முடியாது. கடவுள் என்றும் இருக்கிறவர்.

அவருக்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை. அவரில்லாமல் எந்தக் காரியமும் நடப்பதில்லை. என்பதை "எல்லாம் தெய்வச் செயல்" என்கிற பழமொழி ஒன்றே விளக்கும். ஆதலால் நாம் அவரை நம்பி வழிபடவேண்டும்.



கடவுளுடைய கருத்தும் குணமும் நடத்தையும் நமக்குத் தெரிந்தால்தானே நாம் பின்பற்றி நடக்க முடியும். அவற்றையும் சொல்லுவேன்.

கடவுள் எந்த உயிரிடத்தும் ஒரே அளவான அன்பை உடையவர். உயிர்களிடத்தில் வேற்றுமை கருதாதவர். ஆகையால் அவரை வழிபடுகிற நாமும் அதே கொள்கையையுடையவராயிருக்கவேண்டும். அக் கொள்கையை விளக்கினால் மற்றும் சில கருத்துக்கள் தோன்றும்.

உலகமும் உலகில் உள்ள பொருள்களும், அழியும் தன்மையையுடையவை. என்றால் செல்வம் நிலையில்லாதது. ஆதலால் நாம் செல்வம் பெற்றவுடனே பசி என்று வந்தவர்களுக்கு இட்டு மகிழவேண்டும். இது மக்களுடைய முதற்கடமை. இனி இதை ஒட்டிப் பல கடமைகளும் உண்டு. நமது பொருளை நல்வழியில் செலவிடவேண்டும். நம் வாழ்நாளை நல்ல நண்பருடன் கூடிக் கழிக்கவேண்டும். நல்லவர் நட்பு நன்மையையே தரும். ஆனால் தீயவருடைய நட்போ தீமையையே தரும். "நல்லாரைக் காண்பதுவும் நன்று", "தீயாரைக் காண்பதுவும் தீது" என்று நாம் படித்திருக்கிறோம் அல்லவா!

முடிவாக மற்றொன்று நம்மிடம் கட்டாயமாக இருக்கவேண்டும். அதுதான் நடு நிலைமை. "ஓரம் சொல்லேல்" என்று ஆத்திசூடியில் படித்தோமே! அதே கருத்துத்தான் நடு நிலையாய் இரு என்பது. எந்த வகையிலும் நாம் நடுநிலை தவறி நடக்கக்கூடாது. இங்கே கூறிய நல்லொழுக்கங்களை யார் கைவிடாமல் கொண்டு இருக்கிறார்களோ அவர்களே கடவுள் வழிபாடு தவறாமல் செய்கிறவர்கள் ஆவார்கள். இதை ஒரு பெரியார்.

"ஒன்றென்றிரு தெய்வம்
  உண்டென்றிரு
  உயர் செல்வமெல்லாம்
அன்றென்றிரு
  பசித்தோர் முகம் பார்
  நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு
  நடு நீங்காமலே நமக்கு
  இட்டபடி
என்றென்றிரு
  மனமே உனக்குஉபதேசமிதே"

என்று மனதுக்குப் பாடம் கற்பிக்கிறார். நீங்களும் இந்த வழிபாட்டைக் கைக்கொ[illegible]ளுவீர்களா?

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்கு உவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது" —(குறள்.)

# உபநிஷதங்கள் உண்மையறிவின் உறைவிடமே

'ஆசி'

(முன் தொடர்ச்சி.)

உபநிஷதங்கள் உயரிய கருத்துக்களை உரியவர் உணரும்வகையில் அமையப்பெற்றுள்ளன. அடிகளென்றும், அண்ணல்களென்றும், மேதாவிகளென்றும், மஹான்களென்றும் போற்றப்படுவோரின் அறிவின் அடிப்படைக் காரணம் ஆன்ம அறிவைப் புகட்டும் அரிய உபநிஷதக் கொள்கைகளேயாகும்.

'உபநிஷத்' என்ற சொல்லே, அகந்தை முதலிய அறிவிலித்தன்மையை அறவேயகற்றி, இறைவனில் உறையச்செய்வது என்ற கருத்தை வெளியிடுகிறது. அன்றி நான்மறைகள் புகட்டும் கருமநெறி, ஞானநெறி யென்ற இருவகை நெறிகளுள் ஞானநெறியை முற்றும் புகட்டுவது உபநிஷதங்களே. நான்மறைத் தொகுப்புகளின் (ஸம்ஹிதைகளின்) விரிவுரைபோன்றமைந்து மறைகளின் பகுதிகளாகவே விளங்குகின்ற பிராம்மணங்களெனப் படுவனவற்றின் இறுதிப் பகுதிகளாகவே இவ்வுபநிஷதங்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன. இக்காரணங்கொண்டே உபநிஷத உண்மைகள் வேதாந்தம் (வேதத்தின் முடிவான உண்மைகள் எனப்படுகின்றன.

பிராம்மணங்களெனப்படும் வேதக்கிளைகள் (சாகைகள்) எண்ணிறந்தனவாம். ஆகவே, உபநிஷதங்களும் எண்ணிறந்தனவாக இருந்தனவாம். எனினும், வழக்கிலுள்ளன 108 என்று அவற்றுள் ஒன்றாகிய முக்திகோபநிஷதங் கூறுகின்றது. இவற்றுள்ளும் சிறந்து விளங்குவன பத்து அல்லது பன்னிரண்டேயாகும். இவைகட்கே ஸ்ரீ சங்கரர், இராமானுஜர், மத்வரென்ற மூன்று முக்கிய சமயாசாரியர்களும் மற்ற ஆசாரியர்களும் மொழியுரை (பாஷ்யம்) செய்துள்ளனர்.

உபநிஷதங்கள் பலவகைப்படுவதால் அவற்றின் உண்மைகளும் முரணுற்றவையோ என்று ஐயங்கொள்ள இடமுண்டென்பதை மனதிற்கொண்டு, அவ்வையப்பாடுகளை நீக்கி, உபநிஷத உண்மைகள் உரியவர்கட்கு உகந்த வகையிலே அமையப்பெற்றுள்ளனவென்று நுண்ணறிஞர் போற்றும் வகையில் சூத்திர வடிவாகச் சுருங்கக் கூறினர். பாதராயண முனிவர் இந்நூல் பிரம்மஸூத்ரம் அல்லது வேதாந்த ஸூத்திரமென்ற பெயரால் வழங்கப்படுகிறது. ஸூத்திர வடிவாக அமையப் பெற்றுள்ளமையால், சமயாசாரியர்கள் தமது வழியே விளக்க மொழியுரை (பாஷ்யம்) செய்தனர்.

உபநிஷத உண்மைகளைப் பலரும் எளிதில் உணரும் வகையில் நிகழ்ச்சி வடிவாகப் புகட்டுவது பகவத்கீதை. கீதைக்கும் சமயாசாரியர்கள் மொழியுரை (பாஷ்யம்) செய்துள்ளனர்.

உபநிஷதம், பிரம்மஸூத்திரம், கீதை, என்ற மூவகை நூல்களும் பிரஸ்தானத்ரயம் (முவ்வுயர்நிலை)என்ற பெயரால் வழங்கப்படுகின்றன. இம் மூவகை நூல்களும், ஒவ்வொன்றும் ஒருங்கே யமைந்த உண்மைகளை யுடையனவென்பது மாத்திரமன்றி, மூன்றுமே ஒருவகை உண்மைகளையே உபதேசிக்கின்றன.

இவற்றுள் முதல் நூலாக விளங்குவன—உபநிஷதங்களே. உபநிஷதங்களில் முக்கியமானவை பத்து அல்லது பன்னிரண்டெனக் கூறினோம்.

அவையாவன :—

(1) ஈச அல்லது ஈசாவாஸ்ய உபநிஷதம்.
(2) கேன அல்லது தலவகார உபநிஷதம்.
(3) கட உபநிஷதம்.
(4) பிரசின உபநிஷதம்.
(5) முண்டக உபநிஷதம்.
(6) மாண்டூக்ய உபநிஷதம்
(7) ஐதரேய உபநிஷதம்.
(8) தைத்திரீய உபநிஷதம்.
(9) சாந்தோக்ய உபநிஷதம்.
(10) பிருஹதாரண்யக உபநிஷதம்.
(11) சுவேதாச்வதர உபநிஷதம்.
(12) கௌஷீதக உபநிஷதம்.

இவற்றுள் முதலாறு உபநிஷதங்கள் மிகச் சிறியன; எனவே. வெகுவாகப் பலரால் முதலில் கற்கப்படுவன. சாந்தோக்கியமும், பிருஹதாரண்யகமும் மிகப் பெரியன.

## ஈச அல்லது ஈசாவாஸ்யோபநிஷதம்

ஈசனே எல்லோருக்கும் எல்லாவற்றிற்கும் முதலோன் என்பதை விளக்க அவன் பெயரால் தொடங்கும் உபநிஷதம் பெயர் முறையில் முதற்கண்ணே கூறப்பட்டதுபோலும். 'ஈச' என்ற சொல்லைக் கொண்டே இவ்வுபநிஷதம் தொடங்குவதும் குறித்தற்பாலது. ஈச அல்லது ஈசாவாஸ்யமென்ற சொல்லைக் கொண்டு தொடங்குவதன் காரணத்தாலேதான் இவ்வுபநிஷதம் இப்பெயர்பெற்றது. இது யஜுர் வேதத்தின் பிரிவாகிய சுக்லயஜுர் வேதத்தைச் சார்ந்தது. ஏனைய உபநிஷதங்களைப்போலல்லாது, ஸம்ஹிதைப் பகுதியிலேயே காணப்படுதலால் இது ஸம்ஹிதோபநிஷதமென்ற சிறப்புப்பெயர் கொண்டது கீதையின் 18 அத்தியாயங்கள் போன்று 18 மந்திரங்களில் வேதாந்த மணிக் கருத்துகளை விளக்குவதாக உளது.

முதல் மந்திரத்தில் இறைவன் எங்கும் எல்லாவற்றுள்ளும் குடிகொண்டுளாரென்றும், ஆதலின் ஒருவனும் தானென்றும் தனதென்றும் எதையும் கூறுவதற்கில்லையென்றும், ஆகவே அறிஞர் துறவில் வாழ்வு காணவேண்டுமென்றும் போதிக்கப்படுகிறது.

இரண்டாவது மந்திரத்தில் துறவில் வாழ்வு மேற்கொள்ள இயலாதவர் வாழ்விலே துறவு காணவேண்டுமென்று உபதேசிக்கப்படுகிறது. அதாவது, குறுகிய தன் நலத்தை மேற்கொள்ளாது, பரந்த நோக்குடன் பணி செய்துவரவேண்டுமென்பதை இம்மந்திரம் புகட்டுகின்றது.

மூன்று முதல் 8 வரையுள்ள மந்திரங்கள், ஆன்மாவின் உண்மை இயல்புகளை விளக்கி, ஆன்ம உணர்வு பெறுவதால் ஏற்படுவது யாதென்றும், உணராததால் ஆவது யாதென்றும் தெளிவுறுத்துகின்றன.

ஒன்பது முதல் 18 வரையுள்ள மந்திரங்கள், ஆன்ம உணர்வுபெற இயலாத நிலையிலுள்ளோர் பணி செய்துவருவதுடன், ஆன்ம உணர்வு பெறுதற்கான உபாஸனையையும் தொடர்ந்து செய்துவரவேண்டுமென்பதையும் புகட்டிப் புகழ்கின்றன.

ஒவ்வொரு மந்திரமும் உணர்த்தும் உண்மைகளை அடுத்த இதழில் விவரிப்பாம்.

# சர்க்காரும் லோகல் போர்டும்

**எஸ். ஸ்ரீநிவாசன்**

[மாவட்டக் கழகப்பள்ளி-அய்யங்கார் குளம்]

சுதந்திரம் கோரியிருந்த இந்தியர்களுக்கு முதற்படியாக ஸ்தல சுய ஆட்சிப் பொறுப்பு (Local Board Admission) வழங்கப்பட்டது. இதன்மூலம் ஸ்தல சுய தேவைகளைத் தாங்களே தேடிக்கொள்ளவும், அதற்கான நிதி, வரவு, செலவு இவைகளுக்கான திட்டங்களைத் தாங்களே வகுத்துக்கொள்ளவும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. நிர்வாகச் செலவின் ஒரு பகுதிக்காகச் சர்க்கார் என்று நம்மை ஆண்டுவந்த அந்நிய வருக்கத்தினர் மான்யம் என்ற முறையில் சிறு தொகையை அளித்துவந்தனர்.

உள்நாட்டுக் கழகங்கள் பரிபாலன சட்ட திட்டங்கள் ஏற்பட்டன. அதிகாரம் கொடுக்கப்பட்ட போதிலும் எடுத்ததற்கெல்லாம் இவர்கள் சர்க்காரைக் கலந்தாலோசித்தே எதையும் செய்யவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது.

உள்நாட்டுக் கழகங்கள் என்ற தலைப்பின்கீழ் வரும் நகராட்சி மன்றங்களும், ஜில்லா, தாலூகா வட்ட போர்டுகளும், பலவிதமான ஊழல் நிறைந்த பரிபாலனம் செய்யத் தலைப்பட்டன. இம்மாதிரியான காலங்களில் சர்க்காரே நேரடியாக அவைகளின் பொறுப்பை மேற்கொண்டு நடத்தவும் வேண்டிவந்தது! பிரித்தாளும் கொள்கை என்ற ஒரு கொள்கை ஆட்சிமுறையில் காணப்பட்டதுபோல, ஷை கழகங்களின்கீழ் பணியாற்றிய சிப்பந்திகளுக்கும் அந்நிய அரசாங்கத்தின்கீழ் வேலை செய்துவந்த சிப்பந்திகளுக்கும் பல்வேறு அம்சங்களில் வித்தியாசம் காட்டப்பட்டது. அதாவது சம்பளத் திட்டங்கள் விடுதி சம்பந்தமான சலுகைகளில் வித்தியாசம் காட்டப்பட்டது. பரிபாலனமோ அரசாங்கம் வேறு லோகல் போர்டு என்ற கழக பரிபாலனம் வேறு என்று சொல்லப்பட்டது.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் இம்மாதிரியாக நடைபெற்றுவந்ததென்றால் இதில் ஆச்சரியமில்லை. நாடு சுதந்திரம் அடைந்தபிறகும் பொதுஜன அரசாங்கம் பீடத்தில் அமர்ந்தபிறகும் அதே மாதிரி கொள்கையே அனுஷ்டானத்தில் இருக்கிறது என்றால் அதைக்காட்டிலும் வருந்தத்தக்க விஷயம் வேறு இருக்க முடியாது

இதனால் சர்க்கார் என்ற பரிபாலனத்தின்கீழ் வேலைபார்க்கும் சிப்பந்திகளுக்கும், ஷை மன்றங்களின்கீழ் வேலைபார்க்கும் சிப்பந்திகளுக்கும், மனக்கசப்பு அதிருப்தி, வித்தியாசம் இவைகள் தாண்டவமாடுகின்றன என்றால் இதில் என்ன தப்பிதம்?

நாடு முழுவதும் நம்முடைய நேர் பரிபாலனத்தின் கீழ் வந்த பிறகு இம்மாதிரியான வித்தியாசங்களுக்கு இடமே இருக்க நியாயமில்லை.

இவ்வித வித்தியாசங்களை ஒழிக்க எவ்வளவு சீக்கிரம் முடி-

(அட்டை3-ஆம் பக்கம் பார்க்க)

# செய்திச் சுருள்

## ஆண்டு நிறைவு விழா

போர்டு பள்ளி ஆரம்ப ஆசிரியர் யூனியன்,

சைதாப்பேட்டை தாலுகா, பல்லாவரம், 23-4-49.

ஷை விழா திரு. S. K. கோவிந்தராஜ் நாயகர், M. L. A., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திறப்பாளர் திரு. T. புருஷோத்தம் அவர்கள், திரு. R. ஆதிகேசவன் தலைவரை வரவேற்றார். திரு. A. ராதாகிருஷ்ணன் திறப்பாளரை வரவேற்றார். திரு. S. V. துரைசாமி முதலியார் B. A., L. T., முதியோர் கல்விபற்றிப் பேசினார். முடிவில் செயலாளர் நன்றிகூறக் கூட்டம் கலைந்தது

## பெற்றோர் கழக விழா

தொடக்கப்பள்ளி, தின்னனூர், 2-4-49.

ஷை விழா திரு. K. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல பெற்றோர்கள் மற்றவருடன் வந்திருந்தனர். தலைமையாசிரியர் திரு. T. V. சுந்தரராஜன் "பெற்றோர்ச் சங்கமும் பள்ளியும்" என்பது பற்றிப் பேசினார். பின் மாணவிகள் கும்மி, கோலாட்டம் நடத்தினர். குருளையர் பரிசு பெற்றனர். முடிவில் நன்றிகூறலுடன் கூட்டம் கலைந்தது.

## 9-ஆவது மகாநாடு.

தாலூகா கழகப்பள்ளி ஆசிரியர் கழகம், ஸ்ரீபெரும்பூதூர்.

ஷை கழக மகாநாடு குன்றத்தூரில் (30-4-49 & 1-5-49) திரு ஒ. வி. அ...கேசனவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. மதன்லால்ஜி ...ர்த்மா படத்தைத் திறந்துவைத்தார். திரு. கி. ல. பழனிச்சாமி யவர்கள் (கழகக் கல்வி யதிகாரி) கல்விப் பொருட்காட்சியைத் திறந்துவைத்தார். திரு. பண்டித வி. நடேசனவர்கள் ஆசிரியர் நிலையுயர அரசியலார் கடமை என்பதைப்பற்றியும் திரு. சங்கு. கணேசனவர்கள் கிராம முன்னேற்றமும் ஆசிரியர் பொறுப்பும் என்பதுபற்றியும் திறம்படப் பேசினார்கள். 'ஆரம்பக் கல்வி' ஆசிரியர் திரு. பி. வீரராகவனவர்கள் பேசினார். அதன்பின் ...சிய "ஆதாரக் கல்வி" யாசிரியர் திரு. A. K. S. சர்மா அவர்களும் ...வறு சிலரும் காந்தியடிகளின் ஆக்க வேலைகள், அவற்றில் ஆசிரியர் ...பொறுப்பு, ஆதாரக் கல்வித் திட்டம், சமூகமும் ஆசிரியரும் ஒன்றிவாழ்தல், ...த்திரிகைகளின் பண்பு அறிந்து பயன்படுத்தல் ஆகியவற்றைப் பேசினர். ...செயலாளர் நன்றிகூறக் கூட்டம் கலைந்தது.

---

28-ஆம் பக்கத் தொடர்ச்சி

...மோ அவ்வளவு சீக்கிரத்தில் முயலவேண்டும். சர்க்கார் நேரடியாக எடுத்து இந்த ஸ்தாபனங்களை நடத்துவதனால் அதிக செலவு ஏற்படும் என்றும் நிதிநிலைமை சரியாக இல்லை என்றும் ...ார்க்கு, போக்குகள் சொல்வது ...ற்றும் பொருத்தமற்ற விஷயம். அதிருப்தியை வளரவிடுவது அரசாங்கத்தின் நோக்காக இருப்பது அழகல்ல. இதை அரசாங்கம் உடனே கவனிக்குமா?

குறிப்பு:—1947ஆ சம்பளத்திட்டத்தின்படியும் இவ்வித்தியாசம் காட்டப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆண்டு நிறைவு விழா

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆரம்ப உயர்பள்ளி
ஆசாரப்பன் தெரு, சென்னை, 7-5-'49.

ஷை விழா சௌந்தர மகாலில் பெற்றோர் திரு. ஜலகம் சுப்பிரமணிய நாயுடுகாரு தலைமையில் நடைபெற்றது. "ஜயந்தி ஜயபால்" என்னும் நாடகம் தெலுங்கில் பெருஞ் சிறப்பாக நடந்தது. திரு. A. K. S. சர்மா (ஆசிரியர் ஆதாரக் கல்வி) அவர்களும், தலைவரும் சொற்பொழிவு நிகழ்த்தினர். முடிவில் தலைவர் சொந்தச் செலவில் அனைவர்க்கும் சிறந்த பரிசுகள் வழங்கினர். பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர்.

---

## ஆண்டு நிறைவு விழா

5, சாரதா பெண் பாடசாலை, பவழக்காரத் தெரு, 8-5-'49.

ஷை விழா கோகலே ஹாலில் பெற்றோர் Y. M. I. A. அங்கத்தினர் திரு. இராமமூர்த்தியவர்கள் தலைமையில் நடைபெற்றது. "மன்னிப்பு" என்னும் நாடகமும் பலவகை ஆடல் பாடல்களும் தமிழில் நடந்தன. மானேஜர் செலவில் திரு. தேவநாயகலு நாயுடு பரிசு வழங்கினர். பெற்றோரும் மற்றோரும் பெருந்திரளாக வந்திருந்தனர். முடிவில் மானேஜர் திரு. A. K. S. சர்மா அவர்கள் நன்றிகூறிக் கூட்டத்தைக் கலைத்தார்.

---

## ஆண்டு நிறைவு விழா

ஆசிரியச் சங்கம் 9-5-'49.

ஷை விழா சென்னை ஆசாரப்பன் தெரு ஸ்ரீ ராமகிருஷ்ண பள்ளியில் ஆதாரக் கல்வி ஆசிரியர் திரு. A. K. S. சர்மா அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. சேவாசங்கப் பள்ளித் தலைமை யாசிரியரும் சாரதா பள்ளி தலைமையாசிரியையும் பெருமாள்பேட்டை ஸ்ரீ ராமகிருஷ்ண பள்ளி தலைமையாசிரியரும் சொற்பொழிவாற்றினர். பின்பு சிற்றுணவிருந்து செய்து நன்றிகூறலுடன் கூட்டம் கலைந்தது.

---

## ஆண்டு நிறைவு விழா

ஸ்ரீ ராமகிருஷ்ண பள்ளி, பெருமாள்பேட்டை, 11-5-'49

ஷை விழா ஷை பள்ளியில் நடைபெற்றது. குழந்தைகள் தேவாரம், தேசியம் முதலிய பாடல்களை மிக அழகாகப் பாடினார்கள். தலைமையாசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தியவர்கள் பேசினபின்பு "உலகம்" ஆசிரியர் திரு. ஐ. நடேசன் 'விடுமுறையில் மாணவர் செய் கடமை' என்பதுபற்றிப் பேசினர்.

நன்றி கூறலுடன் கூட்டம் கலைந்தது.

Edited and Published by Sri A. K. S. Sarma, 87. Acharappan St., Madras.
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint St Madras—1



25 JUN 1949
MADRAS

# ஆதாரக்கல்வி

ஆசிரியர்: அ.கி.ஜே.சர்மா

மலர் 2 | விரோதி, வைகாசி—ஜூன் 1949 | இதழ் 2

ஒருவர், பொய்யாமை (சத்தியம்), அடி தடி புரியாமை (அஹிம்ஸை) என்ற தர்மங்களைப் பின்பற்றுவதால் கிடைக்கும் சிறப்பிலிருந்தும், எத்தனையோ உரிமைகள் கிடைக்கின்றன; அவர் தமக்குக் கிடைத்துள்ள உரிமைகளையும், பணியில் செலவு செய்கிறாரே யல்லாமல், தனக்கென ஒரு பொழுதும் உபயோகிப்பதில்லை.

ராம ராஜ்யத்தில் ஒருபுறம் அளவற்ற செல்வமும், ஒருபக்கம் பரிதாபகரமான ஏழ்மையும் இருக்க வியலாது. ஒருவனும் பசியால் வாடி இறக்கமாட்டான். அந்த ராஜ்யத்துக்கு ஆதாரம் மிருக பலமல்ல, அது மக்கள் அன்புடன் அறிந்து அச்சமின்றி அளிக்கும் உதவியையே ஆதாரமாகக் கொண்டது.

காந்திஜி.

ஆதாரக் கல்வி காரியாலயம்,
நெ. 87, ஆச்சாரப்பன் தெரு,
சந்தா ரூ. 3]    சென்னை.    [தனிப்பிரதி அணா 4

# பொருளடக்கம்


பக்கம்

1. கல்வி படும்பாடு ... 1
2. E. S. L. C. பரீட்சையா? ... 3
3. ஆதாரக் கல்வியின் எதிர்காலம்—வினோபா பாவே ... 6
4. மூலாதார..........உண்மைகள்—"ஆசி" ... 6
5. வார்தாவில் என் வாழ்க்கை —ஆசிரியர் ப[illegible] வி. நடேசன் ... 4
6. தொழிற்கல்வி ... 11
7. அனுபவக் கனிகள்—P. N. [illegible]யாணசுந்தரன் ... 12
8. கல்வித்தரம் உயருமா? —ஆசிரியர் ப[illegible] சுப்பிரமணியன் ... 14
9. கடமை—ஐ. ந[illegible] ... 17
10. கடவுள் நம்பிக்கை—"ஆதிரையன்" ... 19
11. பகவத்கீதை—A. S. குருசுப்பிரமணியன் ... 21



## ஸ்கூல் ரிக்விஸைட்ஸ்

வெளியிட்டோர்:

**34,** ரெட்டிராமன் தெருவு, மதராஸ்.

ஆரம்ப பாடசாலைகளுக்குத் தேவையான அடியில்கண்ட பாரங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் கிடைக்கும். தேவைக்கு மேல் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மாதாந்திரக் கணக்கு பாரம் 100-க்கு | ரூ. | 2 | 8 | 0 |
| ரெகார்டு ஷீட் 100-க்கு | ரூ. | 2 | 0 | 0 |
| பிராவிடெண்டு பண்ட் பாரம் 100-க்கு | ரூ. | 2 | 0 | 0 |
| அட்மிஷன் பாரம் 100-க்கு | ரூ. | 1 | 0 | 0 |
| தினசரி ஆஜர்பட்டி 12-பக்கம் கொண்டது ஒன்று | ரூ. | 0 | 6 | 0 |

மற்ற விபரங்களுக்கு மேலே கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

School Requisites



5 JUN 1949






கல்வி 2 | விரோதி, வைகாசி—ஜூன் 1949 | கலை 2


# கல்வி படும் பாடு

## பழைய குருடி, கதவைத்திறவடி

தனக்கும் தெரியாது; பிறர் கூறினாலும் தெரியாது. என்பது ஓர் பழமொழி. இந்தக் கொள்கையைத்தான் நம் சென்னை அரசாங்கம் கல்வி முறையில் நடத்திக்கொண்டு வருகின்றது. நம் மந்திரிகளின் சுற்றுப் பிரயாணச் சொற்பொழிவுகளைக் கூர்ந்து கவனித்தால் அவர்களின் கல்வி முறையைப் பற்றிய கருத்துக்கள் தெளிவுற விளங்கும்.

இளைஞர்கள் பிற்காலத்தில் எவ்வித சமுதாயத்தில் வாழப் போகிறார்களோ அச்சமுதாய அமைப்பை அடிப்படையாகக்கொண்டு அவர்களுக்குக் கல்விமுறை வழங்கவேண்டுமென்பது ஒரு கருத்து. தாங்கள் எந்த அரசியலின்கீழ் வாழ்கிறார்களோ அந்த அரசியலமைப்புக்கு வேண்டிய கல்வி அளிக்கவேண்டுமென்பது மற்றொரு கருத்து. எல்லாவித அரசியலையும் அறிவையும் போதிக்கவேண்டுமென்பதும் ஒரு கருத்து. பல மொழிகளையும் இளமையிலேதான் கற்க முடியும். எனவே இளைஞர்களுக்குப் பல மொழிப் படிப்பு தேவை என்பதும் மற்றொரு கருத்து.

இத்தகைய வேறுபாடு மிக்க கருத்துக்களடங்கிய மந்திரிகளின் சொற்பொழிவுகளை நோக்கின் நம் அரசாங்கத்தார் கல்வி முறையைப் பற்றி எவ்வளவு குழப்பமான நிலையில் இருக்கின்றார்களென்பதை வெளிக் காட்டுகிறது. இதற்கு அடிப்படையான காரணம் கல்விமுறை அரசியல் வாதிகளின் கையிலிருப்பதே யாகும். கல்விமுறை தங்கள் கையிலிருப்பதனால் தங்கள் நோக்கத்தைப் பிரசாரம் செய்வதற்குக்

கல்வியைக் கருவியாக்கிக் கொள்ளுகிறார்கள். அதுவுமன்றி கல்விமுறையையே சின்னாபின்ன மாக்குகின்றனர். இதற்கு எடுத்துக் காட்டாக சென்ற இரு வருடங்களில் கல்விமுறை தலைகீழாக மாற்றப்பட்டிருக்கிறது. இரண்டாவது பாரத்திலிருந்து ஆங்கிலத்தை கற்பிக்கவேண்டுமென சட்டமியற்றி செயலாற்றிச் சென்றது ஒரு மந்திரி சபை. முதல் பாரத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படவேண்டுமென்று கூறுகிறது மற்றொரு மந்திரிசபை; ஏன்! மற்றொரு மந்திரி சபை வந்தால் ஐந்தாம் வகுப்பிலிருந்தே (அல்லது) கீழ் வகுப்புகளிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்படல்வேண்டுமென்று கூறுவார்கள்போலிருக்கிறது. இதற்கு "பழைய குருடி கதவைத்திறடி" என்பதை நினைவுபடுத்திக் கொள்ளாது வேறென்ன செய்ய முடியும்? அரசியல் வாதிகளா யிருப்பதால்தானே இவ்வளவு குழப்பமும்.

பணக்காரர்கள் கல்வி இலாகாவில் இருந்தாலோ வருமானத்தையே பெரிதெனக் கருதி செலவைக் கட்டுப்படுத்துகின்றனர். இந்நிலையிலே ஒவ்வொரு பள்ளியும் தன் சொந்த வருமானத்திலேயே நடக்கச் செய்கின்றனர். இதன்மூலம் கல்விக்கு உயிர் நிலையாய் விளங்கும் ஆசிரியர்களின் ஊதியமும் அந்தஸ்தும் மதிப்பும் குறைக்கப்படுகின்றன. ஆசிரியர்களின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தடை செய்கின்றபொழுது கல்வி நிலை எங்ஙனம் உயரும்?

சமயவாதிகள் கல்வி இலாகாவில் இருந்தாலோ தங்கள் தங்கள் சமயத்தைப் பரப்ப கல்வியைத் துணையாகக் கொள்கிறார்கள்.

இங்ஙனமாக மனப்பாங்கிற்கேற்ப கல்வி முறை மாற்றப்பட்டால் கல்விநிலை உயருமா? செழிக்குமா? இவைகளுக்குக் காரணம் கல்வி இலாகாவை கிள்ளுக்கீரையாக நினைப்பதால்தான். மூன்று நான்கு இலாக்காக்களுடைய மந்திரியின் கையில் கல்வி இலாக்காவையும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருப்பதால்தான். கல்வியைக் கவனிக்க ஒரு மந்திரியும் இருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுவதனால்தான். இதைப் போக்க வழியாது? கல்வி இலாகாவை கல்விக்கே உழைக்கும்படி பூரண பொறுப்பையும் ஒரு மந்திரியிடத்தில் ஒப்படைக்க வேண்டும். அவர் கல்வியிலே உரமும், உறுதியும், ஊட்டமும், ஊக்கமும் பெற்றவராகத் திகழ்தல் வேண்டும், அரசியல் புயலிலே புல்லுருவியாக மாறாது அதற்குப் புறம்பாக எதிர் நின்று கல்விக்கே உழைப்பவராக இருத்தல்வேண்டும். மேலும் நெடுங்காலமாகக் கல்வித் துறையிலே உழைத்து அதில் பூரண தேர்ச்சி பெற்றிருக்கும் கல்வி நிபுணர்களைக் கல்வியிலாகா மந்திரிகளாக நியமிக்கவேண்டும். அவர்களின் கொள்கைகளும், கருத்துக்களும் கல்வியிலே ஊறி உறம் பெற்றவை. அவர்களாலன்றி கல்வி முறையிலே ஊக்கங்காண இயலாது.

3ஆம் பக்கம் பார்க்க

# E. S. L. C. பரீட்சையா? படுகொலையா?

இப் பரீட்சை எட்டாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு அரசாங்கத்தாரால் நடத்தப்படுவது. உயர்தர ஆரம்பப்பள்ளிகளுக்குண்டே தவிர உயர் நிலைப்பள்ளியில் அதே எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இப்பரீட்சையில்லை. தமிழுக்கும் கணக்கிற்கும் தனித் தனியான வினாத்தாட்கள். ஆனால் சரித்திரம், பூகோளம், சிவிக்ஸ் இம் மூன்றையும் சேர்த்து ஓர் வினாத்தாள். ஆங்கிலம் அவரவர்களின் இஷ்டபாடம். இப்பாடத் திட்டத்தைக் கூர்ந்து கவனித்தால் உயர்நிலைப்பள்ளியின் பாட திட்டத்தைவிட மிகவும் உயர்ந்தே காணப்படுகிறது. இவையெல்லாம் அறிவு ஆரம்பமாகும் வயதையுடைய மாணவ மாணவிகளின் மூளையில் திணிப்பதென்றால் மிகவும் கடினமான காரியம். ஆங்கிலம் எடுத்து, தேர்ச்சி பெற்றவர்களே உயர்நிலைப்பள்ளியில் சேரமுடியும். மூன்றில் மட்டும் தேர்ச்சி பெற்றோர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கே செல்லவேண்டும், இம்முறை நியாயமானதா? ஒரே வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகளிடை வேற்றுமை ஏற்படுத்துவது அரசாங்கத்தார்க்கு முறையா? இளம் மாணவ மாணவிகள் பல்லாயிரக்கணக்காக இதற்குப் படையெடுக்கின்றார்கள். என்னே! வெற்றி பெற்றுத் திரும்புவோர் மிகச் சிலர். இதனால் இளம்வயதுடைய சிறுவர் சிறுமியரின் வாழ்க்கை கொலை செய்யப்படுகிறதென்றே கூறலாம்.

அதிகமாகத் தேர்ச்சி பெறாத காரணம் பெரும்பாலும் உயர்தர ஆரம்பப் பாடசாலைகள் கிராமங்களிலிருப்பதே. அப்பாடசாலை

2ஆம் பக்கத் தொடர்ச்சி

இனி, கல்விமுறையைக் குறித்து ஒரு மந்திரி சபையும் கவலைப் படவேண்டியதில்லை, அகில இந்தியா ஒத்துக்கொண்ட, அண்ணல் அளித்த ஆதாரக் கல்வித் திட்டம் இருக்கும்பொழுது கல்விமுறையிலே குழப்பம் ஏன் ஏற்படவேண்டும்? ஆதாரக் கல்வியை நன்கு சரிவர, செயலாற்ற கல்வி நிபுணர்களே வேண்டும் அரசாங்கத்தார் இலாகாவைக் கல்வி நிபுணர்களின் வசம் ஒப்புவித்தலே ஒழுங்கு. கல்வி நிபுணர்களே, முன்னேறுங்கள். அரசாங்கத்தார் மதிக்காவிட்டால், அதிகாரத்தைச் செலுத்தி அடக்குமுறை செய்துவிட்டால், பொது மக்கள் சார்பாக 'வோட்' பெற்று கல்வி முறையிலே சீர்திருத்தம் காணுங்கள். அண்ணல் அளித்த அமுதமாம் ஆதாரக் கல்வித் திட்டத்தை அமுல் நடத்துங்கள். அன்றே காண்போம் ராம ராஜ்யத்தை. எழுமின்! விழிமின்!

களில் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் உயர்தர ஆரம்பப் பாடசாலைக்கு வர மறுக்கின்றார்கள். காரணம் ஒரே இனத்தவரால் நடத்தப்படும் பல வகைப் பள்ளிக்கூடங்களில் ஒரே கிரேடுடைய ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் சம்பள வேறுபாடேயாகும். உயர்தர ஆரம்பப் பாடசாலையிலிருக்கும் செகண்டரி கிரேட் ஆசிரியருக்கும் உயர்நிலைப் பள்ளியிலிருக்கும் செகண்டரிகிரேட் ஆசிரியர்க்கும் சம்பளத்திலே வேறுபாடென்றால் அவர்கள் உயர்நிலைப் பள்ளியைவிட்டு வருவார்களா? அரசாங்கத்தார் நடத்தும் பள்ளிகளிலேயே செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இல்லையென்றால் சாதாரண பள்ளிகளில் அவர்களை எங்ஙனம் காண முடியும்?

மற்றொரு காரணம். எட்டாம் வகுப்புப் பரீட்சை வினாத்தாட்களை, அம்மாணவ மாணவிகளின் தராதரத்தையும் பண்பையும் அறியாத உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும், கல்வி இலாகா அதிகாரிகளும், எட்டாம் வகுப்பிற்கு ஒருவித தொடர்பில்லாத மற்றோரும் தயார் செய்கிறார்கள். அவர்கள் பாடதிட்டத்தைப் பார்த்து தங்களுக்குத் தோன்றியதைக் கேட்டால் பிள்ளைகள் விடையளிக்க முடியுமா?

மற்றொன்று இதனால் பள்ளிகளுக்கு வேலையில்லாமலே போகின்றது. உயர்நிலைப்பள்ளி எட்டாம்வகுப்புக்கு இப்பரிட்சை இல்லாததால், காலத்தையும், வயதையும் யறிந்து ஆறாவது வகுப்பிலிருந்தே உயர்நிலைப் பள்ளிகளில் மாணவ மாணவிகள் சேர்க்கப் பெறுகிறார்கள். இதனால் ஆரம்பப் பாடசாலைகளே வேண்டியதில்லை என்ற அளவிற்குக்கூட வந்துவிடலாம்.

எனவே கல்வியின் பெயரால் நடக்கும் படுகொலை என்றே இதனைக் கூறலாம். அரசாங்கத்தார் நடுநிலை வாதிகளாயிருந்தால் எட்டாம் வகுப்பு மாணவ மாணவிகட்கு உயர்தர ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி என வேறு படுத்தாது எல்லோருக்கும் பொதுவாகப் பரீட்சை வைக்கவேண்டும். இல்லையேல் இப் பரீட்சையை அறவே ஒழிக்கவேண்டும். அப்பொழுது தான் இளம் மாணவ மாணவிகளின் மனதில் பரீட்சை பயமும் அடங்கும்.

இவைகள் யாவற்றையும் ஒழுங்குபடுத்தும் கருவியாயிருக்கின்ற ஆதாரக்கல்வி முறையை விட்டுவிட்டு மற்றவைகளில் கவனம் செலுத்துவது ஏன்? ஆதாரக் கல்வியிலே பரீட்சையில்லை. பழக்கமும், பயிற்சியும், ஒழுக்கமுமே தேவை. அதன்படி மாணவ மாணவிகள் வாழ்க்கை அடிப்படையிலிருந்தே இன்பம் பெற முடியும். இத்தொல்லை ஒழிந்து ஆதாரக் கல்வி அமுலில் வருவது எந்நாளோ?

---

# ஆதாரக் கல்வியின் எதிர்காலம்

வினோபா பாவே

ஆதாரக் கல்வியை கல்வி சாஸ்திர நிபுணர்கள் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். மாகாண சர்க்கார்கள் இதை ஏற்றும் இருக்கின்றனர். சில மாகாணங்கள் இதில் அதிக கவனம் செலுத்தியிருக்க வேறு சிலவற்றில் அவ்வளவு செலுத்தப்படவில்லை. ஆனால், முன்போ பின்னரோ எல்லோரும் இதை அனுசரித்தேதான் ஆகவேண்டும்.

ஆனால் அரசாங்கத்தின் நிர்வாகத்தின்கீழ் இது நடைபெறும்பொழுது இதன் உருவம் எப்படியாகுமோ என்ற கவலை இருக்கக்கூடும். இதில் யாரையும் குறை கூறுவதற்கில்லை. அரசாங்கத்தின் யந்திரம் பழயது, பழய சீசாவில் புதிய சாராயத்தை ஊற்றுவதற்கு முயற்சிப்பது போன்ற நடவடிக்கை நடந்துவருவதால் இவ்விஷயத்தில் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும். அரசாங்கமோ, மக்களோ அதைச் சுலபமாக ஏற்கவேண்டுமென்ற கருத்தினால் பாலில் நீரைக்கலந்து அதன் தன்மையைக் கெடுப்பதுபோல் இதைக் கெடுத்துவிடக்கூடாது.

ஆதாரக் கல்வியில் ஏழு வருஷப் படிப்புக்கு ஏற்பாடு இருக்கிறது. அதை நான்கு வருஷ மாக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஏழு வருஷ திட்டமென்பது ஒரு பூர்ணமான திட்டமாகையால் அதைத் துண்டிக்க முடியாது.

எந்த போதனையை ஒரு தொழிலோடும், பிள்ளைகளின் வாழ்க்கையோடும் சமமாய் இணைக்க முடியாதோ அதைவிட்டே யாகவேண்டும். பண ஆசையைப் போல தேவைக்கதிகமான அறிவைப்பெற

த்தை

ஆசைக்கொள்வதனாலும் வா தூய, பாழ்படவேதான் செய்யும். பாருஷ்டியிலுள்ள விஷபங்கள் அனைத்தையும் நாம் அறிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. எந்த அறிவு நமக்குத் தேவையில்லையோ அதை அறியாதிருப்பதும் அவசியமே. நாம் மாணவர்களுக்கு அளிக்கும் போதனையைக் கொண்டு அவர்கள் எவற்றையெல்லாம் கற்பது அவசியம் என்று கருதுகிறார்களோ, அவற்றைக் கற்க வேண்டும். அறிவு பெறுவதற்கான ஆற்றலை நாம் அவர்களுக்கு அதிகமாக அளிக்க வேண்டும்.

கிராமக் கைத்தொழில்களுக்கும் விஞ்ஞானம் வேண்டியதே. விஞ்ஞானத்தினால் கிராமக் கைத்தொழில்களும், கிராமக் கைத்தொழில்களினால் விஞ்ஞானமும் வளம் பெறும். எனவே, ஆதாரக் கல்வித் திட்டம், விஞ்ஞான நோக்குடன் நடைபெறவேண்டும்.

ஆதாரக் கல்வி முறையில், பொருள் உற்பத்தி முக்கிய அம்சம். அது ஒரு புரட்சிகரமான செயல், தொழில், அறிவு ஆகியஇரண்டிற்கு முள்ள வேற்றுமையை இந்தபுரட்சி போக்குகிறது.

ஸ்ரீ கிருஷ்ணரும், குசேலரும் ஒரு ஆசிரமத்தில் படித்துவந்தனர். இருவரும் ஒன்றாகவே, குருவுக்கு சேவை செய்தார்கள். பணக்காரன் ஏழை என்கிற வித்தியாசம் இன்றி, குருவுக்காக விறகு வெட்டிக்கொண்டு வருவார்களாம். ஏனைய தொண்டும் செய்வார்களாம். இத்தகைய உழைப்புப்பற்றை ஆதாரக் கல்விப் பள்ளிகளில் புகுத்த விரும்புகிறோம்.

(கதர் மலர்.]

# மூலாதாரக் கல்வியே முனிவருளிய உபநிஷத உண்மைகள்

## ஈ. சாவாஸ்ய உபநிஷதம்.

### "ஆசி"

**தண்மை வாழ்த்து:**

*ஓம் அது நிறைவு: இது(வும்) நிறைவு; (அந்)நிறைவினின்று (இந்) நிறைவு தோற்றங்கொண்டது, (அந்)நிறைவினின்று எஞ்சி நிற்கின்றது.*

[ஒரு நூலையோ, நூலின் படலங்களையோ தோடங்குகையில் வாழ்த்துக் கூறுவது ஆன்றோர் மரபு; அவ்வாறே ஒடுவிலுங் கூறுவர். நான் மறைகள் இதற்குச் சான்றாக விளங்குகின்றன.

சுக்ல யஜுர்வேதத்தின் இவ்வாழ்த்து (சாந்தி பாடம்) அறிவின்திறனை அளவிடுதற்கிட்ட புதிரே போன்று விளங்குகிறது. அதுவென்றது பிரம்ம மெனும் பரம்பொருளையும் இதுவென்றது அவன் படைப்பையும் அல்லது உயிர் நிலையாம் ஜீவனையும் குறிக்கும். ஆதலின், அதுவென்ற இறைவன் பூரணன்; அவன் படைத்த உலகும் அளவளாவி நிறைவுற்றதாக விளங்குகிறது (அல்லது ஜீவனும் உண்மை நிலையில் பூரணனே). நிறைவுற்ற பரம்பொருளினின்று பாருலகம் தோன்றிடினும் இறைவனது பூரணத் தண்மை, வெளி (ஆகாசம்) போன்று நிறை பொருளாகவே நிற்கின்றது. (ஜீவன் பரம் பொருளினின்று வேறுபட்டதாகக் காணப்படுவதால், அப் பரம்பொருளினின்று தோற்றங்கொண்டதெனலாம். உண்மை நிலையுணர்ந்ததும் அது ஆன்மாவென்றறியப் பெறுமாதலின் அவ்வான்மாவெனும் நிறைவுற்ற பரம் பொருளே எஞ்சி நிற்கிறது).

எண்களில் சுழி அல்லது சூன்யம் (Zero) இவ்வகைத்தென்று கணித நூலறிஞர் கூறுவர். சூன்யத்தினின்று சூன்யத்தை எடுத்த (கழித்த) பின்னும் எஞ்சி நிற்பது சூன்யமென்பர். இவ்வெண்ணின் பெருமை உரைக்க வொண்ணாதது; ஆதலின் 'பூஜ்யம்' பரம்பொருளை நிகர்த்து வழிபடுதற்குரியது. என்றே இவ்வெண் பெரும்பாலும் வழங்கப்படுவது குறித்தற்பாலது,]

**துறவில் வாழ்வு:**

*உலகிலிருப்பனவாகிய இவையாவும், உயிர்ப்பனவும், இறைவனிடம் உறைவனவுமாக இருத்தல் வேண்டும். அத்துறவு வழி காப்பீர்; அவாதவிர்வீர்; எவாது செல்வம்? (என்பதையுணர்வீர்).*

[அறிவிற்கு இலக்காக வாழ விரும்பும் அறிஞனுக்கு ஆன்மவுணர்வு பெறுதலினும் சிறந்த நிலை வேறில்லையென அறிவுறுத்துகிறது உலகிலுள்ள பொருள்கள், உயிர்கள் யாவற்றையும் இறைவன் கவர்ந்துளான். அவன் உறைதலாலே எல்லாம் நிகழ்கின்றனவென முதலில் அறியவேண்டும். பின்பு, எல்லாம் அவன் செயலாதலால் உலகப் பொருள்களில் அவாக்



கொள்ளாது, துறவு வழியில் வாழ்தல் இவ்வுண்மையை உணர்ந்து அதனால் தன்னைக்காக்க வேண்டும். அதாவது வாழ்க்கை லக்ஷ்யத்தை அடையவேண்டும். ஏனெனில் அவாவே அடிமைக்குக் காரணம். தூய வாழ்வின் துணை துறவில் வாழ்தலே அன்றி, அவாக்கொள்ளும் பொருள்கள் யாவும் இறைவனிடம் உறைவனவாகக் கொண்டுளோமாதலின் உறைவிடஞ் சென்றாலன்றி உறுதி நன்மை கிட்டாது. இவ்வுண்மையையுணர்ந்து, உரியவர் உலகப்பொருள்களில் அவாக்கொள்ளாது, ஆன்மவுணர்விலே நாட்டங் கொண்டு, நரநிலையினின்று நாராயண நிலையை யடைதலாகிய சாவா நிலையை யடைய துறவின் வாழ்வை ஏற்கவேண்டுமென்ற உத்தம ஞான வழியுபதேசத்தைக் கொண்டுளது].

**வாழ்வில் துறவு**

*(தனக்குரிய) வினைப்பணி செய்துகொண்டே இங்கு (உலகின்கண்) நூறாண்டு வாழ விரும்புக. இத்தகைய (உலக வாழ்வில் விருப்பமுள்ள) நரனாகிய உனக்கு, வினை தொடராதிருக்க இதனினும் வேறு வழியில்லை.*

[இப்போது ஞானவழியாம் துறவின் வாழ்வை ஏற்கத் தகுதியற்ற ஸமூக வுலக வாழ்வில் விருப்பமுள்ள மக்கள் உய்யும் வகை கூறப்படுகிறது.

ஞானம் (துறவு வழி) கருமம் (இல்வழி) என்ற இறைவனை யடைவதற்கான இருவகை வழிகளிலும் ஞானமே நேரும் சூழுற்றதெனினும் பேரும்பான்மையோர் இதற்குப் பெரிதும் தகுதியற்றோராக இருக்கின்றனர். அவர்கள் கருமத்தையே ஏற்கவேண்டி ஆகிறது. கருமமோ தொடர்ந்து பிறவியைத்தந்து சாவாநிலைக்கு இடராகநிற்பது. இதனினின்று நீங்க ஓர் உபாயம் இங்கு கூறப்பட்டுள்ளது. எதிலும் பற்று மிகக்கொள்ளாமல் பரந்த நோக்குடன் தனக்குரிய வினைகளையேற்று உலக நன்மைக்காக (ஏழ்நாள் முழுதும்) உழைத்துவருவதில் ஊக்கங்கொள்வதே. அதாவது வாழ்வில் துறவு காணலே என்று உபதேசிக்கிறது.

நான் என்ற சொல், கொண்டதை ஈயாப் பேரவாவுடையனென்றும், மனிதனென்ற சொல், நினைந்து, அறிந்து, நன்மையை யேற்போனென்றும் பொருள்படும். நரநிலையை நீக்க முற்படவேண்டுமென்பதைக் குறிக்கவே 'நரனாகிய உனக்கு வேறுவழியில்லை' யெனப்பட்டது. நரநிலையினின்று நேரே நாராயண நிலையையடையத் தகுதியற்றோராயினும் நரநிலை கடந்து, மனிதநிலை யடைந்து, நாராயண நிலையைக் கோரி நிற்கவேண்டுமென்றறிவிக்கிறது. 'நரநிலை நீங்கிடுக' என்றதன் பொருளையே 'அவா தவிர்வீர்' என முதற் செய்யுளில் கூறியுள்ளது கவனித்தக்கது.]

**அவாவாழ்வை இகழல்:**

*இழிந்தனவெனும் உலகுகள் அந்தகார இருள் சூழ்ந்தன, (இழிந்தவரெனும் மாந்தர் அந்தகார இருள் சூழ்ந்தவர்). ஆன்மக் கொலை செய்யும் மாந்தர் இறந்தபின் அவற்றை (அவர்களை) யடைகின்றனர்.*

[ஆன்ம வுணர்வுக்காகவே துறவு வாழ்க்கை ஏற்பதன் உயர்வைக்கூறி, அதற்குத் தகுதியற்று ஸமூக வுலக வாழ்க்கை ஏற்போர் உய்யும் உபாயக்

தையும் எடுத்துரைத்து, இப்போது ஆன்மாவின் இருப்பைப் புறக்கணித்துக் கண்டதே காட்சியென, அவாவி லாழ்ந்து, இந்திரிய சுகங்களில் இன்புற்று வாழ்வது இழிந்ததென்று இகழ்வதால் ஆன்ம வுணர்வின் மேன்மை விளக்கப்படுகிறது.

இந்திரிய ஸுகங்களில் இன்புற்று பிறவிச் சுழலில் உழல்வோரே இங்கு இழிந்தவரென்றும், பிறவிச் சுழலில் உழலச்செய்யும் உலகுகளே இழிந்தனவென்றும் இங்கு கூறப்பட்டது. ஆன்ம வொளிவீச்சு இன்மையால் இருள் சூழ்ந்தவ(ர்) எனப்பட்டது. இவர்கள் மடமைப் பேழைகளே ஆவர்; நரகநிலையில் நிலைகொண்டவர்.

ஆன்மா அழிவற்றதாகையால் அது கொல்லப்படாதது; ஆன்ம வுணர்விலே நாட்டமில்லாது அதை மறந்தவர்களே இங்கு ஆன்மக் கொலை செய்யும் மாந்தரெனப்பட்டனர். இவர்கள் இறந்தபின் புற்பூண்டு ஈறாகவுள்ள இழி உலகில் (இழி உடல்களில்) பிறவியை ஏற்றுத் துன்புறுகின்றனர். ஆன்ம வுணர்வு நோக்கங்கொண்டு அதனை யடையாதவரையில் பிறவித்துன்பம் நீங்காது. ஆதலின், ஆன்ம வுணர்வு பெறுவதற்கான சாதனங்களை விரைவிலே நாடவேண்டியதன் அவசியத்தைக் குறித்து நிற்கின்றது.]

**ஆன்ம இயல்பு:**

ஆன்மா அசைவற்றதொன்று; (எனினும்) மனதினும் விரைவுடையது;
மனதிற்கும் முன் செல்வதால் பொறிகள் அதனையடைவதில்லை;
இருந்த நிலையினின்றே ஓடுமவற்றை வெற்றி கொள்வது; அதன்
இருப்பாலேயே உயிர்ச்சக்தி, வினைகளை நிகழச் செய்கின்றது.

[அறிஞர் அறியவேண்டி ஆன்மாவின் தன்மை உணர்த்தப்படுகிறது.

ஆன்மா, நிலைபிறழாது ஒரே நிலையிலிருப்பதால் அசைவற்றது. எங்குமளாவி எல்லாருள்ளத்தும் ஒளிரும் ஆன்மா ஒன்றே. கணப்பொழுதில் காண்பதற்கரிய காட்சி யிடங்களைக் காணவல்லதென்று மனம் எங்குச்சென்றாலும் அளாவிய இயல்புடைய ஆன்மா அங்கு அதன்முன் இருக்கக் காண்கிறது; ஆதலால் ஆன்மா மனதினும் விரைவுடையதெனப் பட்டது. எனவே, ஆன்மா அசைவற்றதெனக் கூறி, விரைவுடையதென்றது முரணாகாது. பொறிகளினும் நுண்ணிய மனது இடையே இருத்தலால், அதனினும் நுண்ணிய ஆன்மாவை அப்பொறிகள் எறிட்டுக் காணவு மியலாது. எங்குமளாவி நிற்றலால் ஓடித்திரிவன வெல்லாவற்றையும் வென்று நிற்பது ஆன்மாவெனப்பட்டது. ஆன்மா உயிருக்குயிராக இருந்து காற்று முதலிய உயிர்ச் சக்தியினைக்கொண்டு வினைகளை நிகழச் செய்கிறது; ஆனால் தான் தொழிலற்றதாகி எல்லாவற்றின் ஸாக்ஷியாக விளங்குகிறது. ஆதலால், ஆன்மாவின் இருப்பால், உயிர்ச்சக்தி வினைகளை நிகழச் செய்கின்றதெனப்பட்டது.]

(தொடரும்.)

# வார்தாவில் என் வாழ்க்கை

ஆசிரியர்: **பண்டித வி. நடேசன்**

ஆஸ்ரமத்திலும் எம் விடுதியிலும் வாழ்வோர் மாவரைக்கும் கட்டுப்பாடு மிக்க நலம் கண்டது. காந்தியார் ஆய்ந்தறிந்து அனுபவங்கண்டு எக்காரியத்தையும் செய்தவர். மாணவர்கட்கும் ஆஸ்ரமவாசிகளுக்கும் இவ்வுடலுழைப்பு தருவானேன் என்பதைச் சிறிது ஆய்வோம். உடலுழைப்பே உலகின்பம் தரும்; சுகத்தின் அடிப்படையாம்; நற்புத்திக்கும் மூலமாம். வல்லுடலில் நல்ஞானம் திகழும் 'A Sound mind in a sound body'. சுக தேகத்தில் சுபுத்திகாணும். 'A healthy body and a mind at case'. திட சரீரத்தில் திறமும் தெளிவும் எழும் 'ut sit mens Sana in corpore Sana'.

உடலுழைப்பு இருவகைத்தே. உடற்கொண்டு உழைக்கின்றோம். உடற்கொண்டு உலாவுகின்றோம். சில வேளைகளில் பசிப்பிணி நீக்க வேலை செய்கிறோம். சில காலங்களில் இன்பங்காண விளையாடுகின்றோம். ஆகையால் முன்னர் கூறியதைத் தொழில் என்கிறோம். பின்னதைப் பொழுது போக்கு என்கிறோம். சரீரக் கஷ்டமும் இன்பமும் ஒருவர் அடையவேண்டும். இவ்விரண்டும் கலந்த வாழ்வு கிராமங்களில் உண்டு. எனவே ஆண்டுள்ளோர் நோயற்றும் சந்தோஷமுற்றும் வாழ்கின்றனர்.

மனுஷ சரீரம் குழாய்களும் வடிகட்டுவனவும் சேர்ந்துள்ள ஒரு விறகு கட்டுப் போன்றது. அவை ஒன்றோடொன்று சேர்ந்துள்ளதைக் கூர்ந்து ஆயுங்கால் இறைவன், உழைப்புக்கே மனுஷனுடலை உண்டாக்கி யுள்ளான் எனத் தெரியும். உடலை நல்ல முறையில் வைக்கவே உழைப்பு அவசியம். உழைப்பும் விளையாட்டும் உடலையும் மூளையையும் ஒழுங்காக்குகின்றன. இரத்தவோட்டம் தட்டுத் தடங்கலின்றி ஓடுகிறது. கழிநீரும் வியர்வையும் உடலைவிட்டு விலகுகின்றன. அதனால் உடல் வலிவையும் சுகத்தையும் பெறுகின்றது. உயிரும் உடலிலிருக்க விழைகின்றது. நீண்ட காலம் இருக்கத் துணிகின்றது.

தடைபடாக் குருதியோட்டம் தேகத்தில் வனப்பையும் சக்தியையும் தோற்றுவிக்கின்றது. இச்சக்தி உடலுக்கு மிக்க அவசியமானது. சக்தியற்று சிவம் உலாவுவதில்லை. 'சக்தியாய்ச் சிவமாகித் திகழ்வதன்றோ நம்மிறை! உண்மையில் ஊக்கம் உற்சாகம் உழைப்பால் உடலில் உண்டாவன. அறியும் சக்தி சுத்தமாகிறது. கற்பனா சக்தி துலங்குகிறது. பெரு வயிறு வியாபாரிகளும் சிறு வயிறு குமாஸ்தாக்களும் குடல்வாத நோயால் வருந்தக் காரணம் உழைப்பின்மையேயாம். தேகாப்பியாசக் குறைவுமேயாம். எந்நேரமும் வேலைசெய்து விளையாட்டை ஒழித்தவன் சுடுமூஞ்சியாகவே வாழ்வான்- All Work and no play makes Jack an irritable boy. உழைப்பின்றி ஒருவன் ஞானியாகான். 'No man becomes a saint in his sleep'.

உடலமைப்பே உழைப்புக்குரியதாகும். எப்பொருளும் உழைப்பின்றி வாரா. உலகில் யாவையும் உழைப்பால் அடைகின்றோம். 'சிறுமை நோனாதான் பெருமை

வேண்டல் பொய்' என்ப. உண்ணும் உணவும் உடுக்க உடையும் நாம் பெறுவது நம் உழைப்பாலன்றோ. மண்ணிலிருந்து சோறும் துணியும் பெறுகின்றோம். இது விந்தையன்றோ? அத்தியாவசியமான பொருள்களை உலகில் உழைப்பால் அடைகின்றோம். உலகில் இறைவன் விளை பொருள்களையும் மூலப் பொருள்களையும் தருகிறார். ஆனால் அவைகளை வேண்டிய பொருள்களாகவும் உபயோகத்திற் குரியனவாகவும் செய்வது மனுஷர் கடமை. அக்கடமையை நிறைவேற்றுவது உழைப்பன்றோ?

சில பேர்வழிகள் உழைக்கக் காரணமே இல்லை. அவர்கள் உழவேண்டிய காரணமும் இல்லை, வீணாக உடல் வளர்த்து வாழலாம். காரணம் அவர்தம் செல்வநிலை. இவ்வுழவித்துண்போர் வீணர்களே என்பர். அவர்கள் உலகில் இன்பம் பெறுதல் சொற்பகாலமே. நோயுற்று வாழ்வர். நடைப்பிணமாய் இலகுவர். நோய்களின் வாஸஸ்தலமாய் வாழ்வர். இன்பத்திற்கு உழைப்பு மிக அவசியம். சுகமின்றி இருநிதிக் குப்பையும் ஒருவர்க்கு வீணே. பணத்தின் இன்பங்காண சுகம் வேண்டும். சுகத்திற்கு உழைப்புவேண்டும்.

ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப்
பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு
உறைப்பப்
படைத்தோன் மன்ற அப்பண்பிலா
இன்னாது அம்மஇவ் வுலகம் [ளன்

"இனிய காண்கிதன்" இயல்புணர்ந்
தோரே—புறம்

உலகம் துன்ப இன்பம் உள்ள நிலையம். அது மக்கள் வாழ்வோடு புணர்ந்துள்ளது. எனவே உலகம் உழைப்பால் மிளிர்வது. "இனிய காண்கு" எனப் புலவர் பக்குடுக்கை நன்கணியார் கூறக் காரணம், மக்கள் கூடும்வரை உழைப்பால் நற்செயலைத் தெளிந்து செயலே கடனும் என்பதே. மனம் வாக்கு காயங்களாலும் நல்லன செய்துவருவோர் உழைப்பினருமை யுணர்ந்து துன்பங்களையும் இனியவாகக் கொள்ளும் திறம் காண்பர். உழைப்பில் வாரா ஒன்றும் உண்டோ!

ஒவ்வொரு மாணவனும் ஒருபடி கோதுமை காலை மாலை அரைக்க வேண்டும். மாவினை விடுதிப் பண்டாரத்தில் சேர்க்கவேண்டும். மாவினை நன்கு அரைக்கவேண்டும். கப்பியாக இருக்கக்கூடாது. ஒன்றும் பாதியுமாகக் கோதுமை உடைத்தும் அரைத்துமிருந்தால் மேலதிகாரி மாணவனை மறுபடியும் மாவரைக்கத் திருப்பிவிடுவார். எனவே மாணவர்கள் மிக உழைத்து மாவை வேண்டிய அளவு நுண்மையாக அரைப்பர். அரைத்த மாவை பரிசோதித்து அளவிட்டு ஒரு மாணவர் பண்டாரத்தில் சேர்ப்பர். 80 பேரும் 80-படி கோதுமை அரைத்ததும் மடப்பள்ளியில் சமையல்செய்ய கடனேற்றுள்ள எட்டு மாணவர்கள் 80 பேருக்கு வேண்டிய கோதுமை மாவினை எடுத்து 'ரொட்டி' செய்ய ஆரம்பிப்பார்கள்.

(தொடரும்.)

# தொழிற் கல்வி

"என் தாய் தந்தையருக்கு நான் ஒத்தாசை செய்யாவிட்டால், அவர்கள் உண்ணும் சோற்றுக்கு வழி ஏது? எனக்கு எப்படி அவர்கள் சோறுபோடமுடியும்?" என்ற எண்ணமே ஒவ்வொரு பிள்ளையின் உள்ளத்திலும் எழுந்திருக்கிறது. ஏழை மக்களின் குழந்தைகள் தங்கள் பெற்றோர் செய்யும் வேலையில் அவர்களுக்கு உதவி செய்வது இயற்கையாகிவிட்டது. இப்படி உழைத்துங்கூட, நாட்டுப்புற மக்கள் நம் நாட்டில் எந்த இடத்திலும் மணிக்கு ஒரு அணு வீதங்கூடச் சம்பாதிப்பதில்லை. எனவே, இத்தகைய நிலைமையை மாற்ற, ஆதாரக் கல்வித் திட்டத்தை நம் நாட்டிற்கு வரப்பிரசாதமாக காந்தியடிகள் அளித்துள்ளார்.

கல்வி என்று சொல்லும்போது, குழந்தையினிடத்திலும் வயதுவந்த மனிதனிடத்திலும், உடல், உள்ளம், உயிர் ஆகிய மூன்றிலும் உள்ள சிறந்த அம்சங்களையாவும் மலர்ந்து விளக்கம்பெறச் செய்வதே. வெறும் எழுத்தறிவு என்பது கல்வியின் நோக்கமுமன்று. ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி பயிற்றக்கூடிய பல முறைகளில் எழுத்தறிவும் ஒன்று. எழுத்தறிவே கல்வியாகிவிடாது. ஆதலால் ஒரு குழந்தைக்குக் கல்வி பயிற்றுவதென்றால், முதலாவதாக, பயனுள்ள ஒரு கைத்தொழிலை அதற்குக் கற்பித்து, கல்விப் பயிற்சி தொடங்கிய நேரம்முதல் ஏதேனும் ஒரு பொருள் உற்பத்தி செய்ய வல்லதாக அக்குழந்தையை ஆக்கவே நாம் முயலவேண்டும்.

ஒரு கைத்தொழில் கற்பிக்கும்போது அறிவைப்பயிற்றாது, யந்திரம்போலக் கற்பிப்பது தவறு. அறிவியலை ஒட்டியே கைத்தொழிலைக் கற்பிக்கவேண்டும். அதாவது, கற்பிக்கும் போது இது என்ன? இது ஏன்? இது எப்படி? என்பதைக் குழந்தை செவ்வையாக உணர்தல்வேண்டும். இத்தகைய முறையே குழந்தையின் உள்ளத்தை விரிவடையச் செய்யும்.

தொழிற் பயிற்சியையும், வெறும் எழுத்துப் படிப்பையும் நாம் வெவ்வேறாகப் பிரித்து ஒன்றோடொன்று எவ்விதத் தொடர்பும் அற்றதாகச் செய்துவிட்டோம். இது காரணமாக கிராமக் கைத்தொழில் என்றாலே நமக்கு ஏனனம் உண்டாகிறது. உடலுழைப்பு என்றால் தாழ்வு என்ற அபிப்பிராயம் நம்மிடையே இருக்கிறது. வருணாசிரமம் என்பதைத் திரித்துத் தப்பாகப் பொருள் செய்துகொண்டமையால் தச்சர், நெசவாளர், சக்கிலியர் முதலியோர் கீழான ஜாதியினர் என்ற எண்ணம் வலுத்துவிட்டது. இத் தொழில்கள் தாழ்ந்தவை என்று கருதி அறி

12 ஆம் பக்கம் பார்க்க

# அனுபவக் கனிகள்-4

## "சார்ட்டுகள்"

### P. N. கல்யாண சுந்தரம்

ஓர் வளர்ச்சியடைந்த பள்ளியின் சிறப்பை எடுத்துக் காட்டும் பல அம்சங்களில், "சார்ட்டுகள்" முதலிடம் வகிப்பது கண்கூடு. ஆதலின் ஒவ்வொரு பள்ளியிலும் "சார்ட்டுகள்" அவசியத்திலும் அவசியம்.

இனி "சார்ட்டுகள்" என்பன எவை? என ஆராய்வோம். பள்ளியின் பொது விவரங்களை அறிவிக்கும் புள்ளி விவரங்கள், கண்காணிப்பாளர்களுக்கு அறிவிக்கும் புள்ளி விவரங்கள், வகுப்பு வாரி பாட போதனைகளுக்கு உதவும் குறிப்புக்கள் இவைகளை அச்சுப்போன்று பெரிய எழுத்துக்களில் எழுதி அட்டைகளில் ஒட்டித் தொங்க விடுகிறோம். இவைகள் நிரந்தரமாக ஒவ்வொரு பள்ளியிலும் எப்போதும் காட்சிக்கு வைக்கப்படவேண்டிய "சார்ட்டுகள்" ஆகும். Name Board பள்ளியின் பெயர் தாங்கும் பலகையும் அப்படிப்பார்த்தால் ஒரு சார்ட்டுதானே? ஆம் விளம்பரம் செய்யவேண்டிய எதுவும் "சார்ட்டு தான்"

எப்போதும் காட்சி யளிக்கப் படவேண்டிய நிரந்தர சார்ட்டுகள்- பள்ளியின் முன் அல்லது கூடச் சுவற்றில் காணப்படாவிடில் அப்பள்ளியைப் பற்றிய அபிப்ராயம் சற்று மட்டமாகவே தான் கொள்ளப்படும்.

**சார்ட்டுகளைப் பற்றிச் சாந்த போக்குகள்.**

மண்டையை உடைத்துக் கொண்டு கற்றுக்கொடுத்தாலும் இக்குழந்தைகளுக்கு வரவில்லை. சார்ட்டுகள் போட்டால் பிரமாதமாக வந்து விடுமோ?

"காகிதப் பஞ்ச காலத்தில் எப்படி சார்! இதெல்லாம் போடமுடியும்? ஏதோ ட்ரெயினிங் ஸ்கூலில் போட்டவைகளை வைத்துக் கொண்டே காலந் தள்ளி வருகிறேன்"

"இன்ஸ்பெக்ஷனுக்கு . இன்ஸ்பெக்ஷன் தான் சார் இவை பெட்டியை விட்டு வெளியே வரும்."

'எப்போதும் தொங்கவிட்டால் செல்லரித்து விடுகிறது சார்!"...... இப்படிச் சிலர் வாதம்.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

வுத்திறமை 'கரும் கல்விக்கும் இவற்றுக்கும் தொடர்பில்லாத படி செய்துவிட்டபடியால் நம்மிடையே கிராம்டன் ஹார்கிரீவ் போன்ற ஒப்பற்ற மேதாவிகளான தொழில் நிபுணர்கள் தோன்றியதில்லை, எழுத்தறிவுக்குக் கரும் கௌரவத்தை இப்படிப்பட்ட தொழில்களுக்கும் நாம் தந்திருந்தோமானால் இத்தொழில் செய்துவரும் தொழிலாளிகளிடையே மிகச் சிறந்த நிபுணர்கள் தோன்றியிருப்பார்கள். புதுப் புது பொருள்களைக் கற்பனையால் செய்து காணவல்ல வினைஞரும் தோன்றியிருப்பார்கள்.



சற்று சாமார்த்தியமாகப் பேசுவோர் சிலர், என்ன சார்! நான் உலகப்படம், இந்தியா, கதைப்படம் எதையுமே போர்டில் அவ்வப்போது பெரியதாகப் போட்டுக் கற்பித்து விடுகிறேன். போட்டால் மிகப் பெரிய சார்ட்டுகளாகப் போட வேண்டும். அழகிய வர்ணங்களில் கண்கவரக் கூடிய முறையில் இருக்க வேண்டும். நமது சார்ட்டுகளை எந்தப் பையன் சார், பார்க்கிறான்!......என்பர்.

சிலர் அதிகாரிகளைத் திருப்திப் படுத்த-ஒவ்வொரு பாடத்திற்கு அரை டஜன் சார்ட்டுகள் வீதம் அதிக விலை கொடுத்து வாங்கி வைத்துக் கொள்வர். ஆனால் செல்லரித்து விடுமே என அஞ்சிப் பெட்டியில் வைத்திருப்பர்.

சிலர் ஆத்திரம் தீர ஒரு குயர் வெள்ளைக் காகிதம் வாங்கி அவற்றில் வேண்டிய குறிப்புக்களை வரைந்து சுருட்டி வைத்துக் கொள்வர். பாட போதனைக்கு அவற்றைச் சுவரில் அடிக்கவும் முடியாது. ஓலைப்பாய் போல் சுருட்டிக் கொள்வதால் ஆசிரியரே கையில் பிடித்துக் கொண்டு பிள்ளைகளுக்கு எதிரே காட்டி விளக்கி விட்டுப் பிறகு சுருட்டி வைத்து விடுவார். மேற்கண்ட அனுபவங்களிலிருந்து

"சார்ட்டுகள் வரைதல் துன்பம்
காப்பாற்றல் அதனின் துன்பம்
சேகாம் மிகவே துன்பம்
கை சோர்ந்தால் கணக்கில் துன்பம்
கண்காணிப்பாளர் கண்டு குறை சொல்லில்
கணக்கில் துன்பம்.
பள்ளியில் இல்லவே இல்லையென்றால்
எல்லையிலாத துன்பம்"......எனப் பாடவும் தோன்றுகிறது. ஆகவே பொருட் செலவைக்கருதாது சிறிது பிரயாசையுடன் அவசியமான சார்ட்டுகளை ஆசிரியர்கள் தயாரித்தோ; வாங்கியோ-சேகரித்தோ வைத்துக் கொள்வதுடன் அவற்றைத் தினசரி உபயோகித்தல் இன்றியமையாததாகிறது. நாக்கு அறுந்த மணியும், நீர் அற்ற தடாகமும், சந்திரன் இல்லா வானமும் போன்றதே சார்ட்டுகள் காணப்படாத பள்ளியும் எனத் தேர்க.

பயன். குறைந்த நேரத்தில் ஆசிரியர் சிக்கலான ஓர் விஷயத்தை மாணவர்களுக்குப் போதிக்க உதவி செய்வன திறம்பட வரைந்த சார்ட்டுகளேயாம்

உ-ம் உமது கையைக் காகிதத்தின் மேல் வைத்துப் படம் வரை. மீதிப் பாகத்தில் நீல வர்ணம் பூசுக! பளிச்சென்று கை தெரியும். உள்ளங்கையில் சுக விதிகள் என எழுதுக! ஒவ்வொரு விரலும் சுத்த ஜலம், சுத்தக் காற்று, சுத்த உடை, சுத்த உணவு, சுத்தமான வாசஸ்தலம்... என்று குறிக்கட்டும். இதை அட்டையில் ஒட்டுக! தயாகி விட்டது ஓர் சுகாதார சார்ட்டு! மனமுண்டானால் மார்க்கமுண்டு. சிறிது நேரம்:சிந்தனை இவை கூடினால் சிறந்த சார்ட்டு. சிலபஸ் படி அவ்வப்போது தயாரிக்கப்படும் சார்ட்டுகளே சிறந்த பயன் அளிப்பவை. வகுப்புக்கும் பாடத்திற்கும் ஏற்ப சார்ட்டுகளை உடனுக்குடன் தயாரிக்கும் ஆற்றல் ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் உண்டு. சித்திரம் வரையத் தெரியாத ஆசிரியர் தம் கருத்தைக் கூறி அதற்கேற்ப பிறர் உதவி கொண்டு சார்ட்டுகளைத் தயாரிக்க முடியும். சில ஆசிரியர்கள் வெகு அழகாக எழுதும் திறன் பெற்றுள்ளனர். அன்னார் பள்ளிக்கு

14 ஆம் பக்கம் பார்க்க

# கல்வித்தரம் உயருமா?

ஆசிரியர்: **ப. ச. சுப்பிரமணியன்,** அரியானூர், சேலம்.

**‘ம**ன்னனெப்படி’ மன்னுயிரப்படி’ என்பது முடியாட்சி இருந்த நாளிலே. ஆனால் குடியாட்சியைக் குறியாய்க்கொண்ட இந்த நாளிலே— ஜனநாயக எண்ணங்கள் நிறைந்த இந்த இருபதாம் நூற்றாண்டிலே மக்களின் பண்பைப் பொறுத்தே ஆட்சி அமைகின்றது. மக்களின் பண்பு, ஆற்றல், அறிவு இவற்றிற்கு அடிப்படை கல்வி.

“நுண்மான் நுழைபுலம் இல்லான் எழினலம்
மண்மாண் புனைபாவை யற்று”
—குறள்.

நுண்ணிய அறிவு இல்லாதவன், அழகுபடுத்தின மண் பொம்மைக்கு ஒப்பாவான் என்று வள்ளுவர் மிக அழகாகக் கூறியுள்ளார். நுண்ணிய அறிவுத்திறன் கல்வியினாலேயே அமையும். கல்வி என்பது தொழில் அறிவையும் அதை அடிப்படையாகக்கொண்ட எழுத்து அறிவையும் ஏக காலத்தில் அடைய வகை செய்தல்வேண்டும் என்பது ஆன்றோர் ஆய்ந்தறிந்த முடிபு. ‘உயர்வு தாழ்வைப் பொருட்படுத்தாமல் சுய தேவையைப் பூர்த்திசெய்துகொள்ள வேண்டும் என்பதைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் கீழ்க்கண்ட செய்யுளால் விளக்குகிறார்.

---

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

வேண்டிய நீதிகளை அட்டையில் பொறித்து உதவலாம். சிறு வகுப்புக்களில் படமும் வார்த்தையும் கலந்த சார்ட்டுகள் தயாரிக்கலாம். குயில் கூவும், மயில் ஆடும், மாங்காய் புளிக்கும்......என்பன போன்ற வாக்கியங்களைப் படமும் வார்த்தையும் சேர்ந்த சார்ட்டுகள் மூலம் கற்பிக்கலாம். கருத்தில் பசு மரத்தாணி போல் பதிய வைக்கலாம். கோடிட்டவைகளின் படங்களை ஒட்டிப் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களால் எழுதினால் தயாராகி விடும் சார்ட்டு. மேல் வகுப்புக்களில் தமிழ்ப் பாடபோதனைக்குக் கடின பத விளக்கம் சார்ட்டுகள் பல தயாரித்து அவற்றைக் காலண்டர் போன்று ஓர் அட்டையில் தொங்க விடலாம். இடை நேரத்தில் மாணவர்கள் அவற்றை உபயோகிக்க வசதி செய்யலாம். சிலேடை பதங்களுக்கும் ஒரு பொருட் குறித்த பல சொல், இரு பொருட் குறித்த சொற்கள், இவைகளுக்கும் கொட்டை எழுத்துகளில் படங்களுடன் கூடிய சார்ட்டுகள். சிறந்த பள்ளி ஒவ்வொன்றிலும் இருத்தல் அவசியம். “வெண்பா” எழுதும் முறையைப் போதிக்க பிழை, சரி, இரண்டு முறையில் எழுதித் தொங்க விடுதல்; லிகிதம் வரையும் மாதிரி, மணியார்டர் எழுதும் மாதிரி, சரியான படி விலாசம் எழுதும் முறை; பள்ளியின் (ஐந்து அல்லது பத்தாண்டுகள்) வளர்ச்சியைக் காட்டும் ரேகைப் படம்; Graph முதலிய சார்ட்டுகள் பள்ளியில் காணப்படின் பள்ளி, கவர்ச்சிகரமாக விளங்குவதுடன் ஊக்கமுள்ள ஆசிரியர்கள் பள்ளியை திறம்பட நடத்துகிறார்கள் எனச் சான்று பகரும்.



“நாமே நமக்குத் துணையானால்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்
சற்றும் இதற்கு ஐயமில்லை”

அனைத்திற்கும் அடிப்படை, கல்வி என்று கண்ட முடிவால்தான் ஆதிக்கவெறியரும் தங்கள் வெறி நீடித்து நிலைபெறத் தங்களுக்கேற்ப கல்வி முறையைத் தங்கள் தங்கள் அடிமை நாடுகளில் அமைக்கின்றனர். அடிமைவாழ்வில் அநேக ஆண்டுகள் அவதிப்பட்ட நமக்கு ஆங்கில அரசு எத்தகைய கல்வியை அளித்தது? அதன் பயன் என்ன என்பதும் உலகம் அறியும்.

கல்விமுறைக் கேற்பவே சட்டங்களும், நிர்வாக முறைகளும் அமைக்கப்படுகின்றன. குமஸ்தாக் கல்வியைப் புகட்ட விரும்பிய அரசு அதற்கேற்ப, சட்டதிட்டங்களையும் அமைத்தனர். அதே அடிச்சுவட்டை சுதந்திர நாட்டிலே புரட்சிக் கல்வியை அமைக்க விரும்பும் ஜனநாயக சர்க்கார் பின்பற்றுவதுகண்டு அஞ்சுகிறோம்.

கல்விமுறையை மாற்ற விரும்பும் அரசியலார் அதன் உயிர்நாடியான, ஆசிரியர்களின் வாழ்க்கை, அந்தஸ்து அறிவுத்திறன், கல்விக்கூடங்கள், சட்டதிட்டங்கள், நிர்வாகம், இவற்றை உடனடியாகச் செப்பனிடப் போதிய கவனம் செலுத்தாமை கண்டு வருந்துகிறோம். ஆதாரக் கல்வி, செகண்டரிகல்வி முதலியவை பற்றி எங்கும் பேசப்படுகிறது. பெயரளவில் இம் மாகாணத்தில் ஒரு சில பள்ளிகளில் பலதரப்பட்ட நிர்வாகத்தினரின் கீழ் கையாளப்பட்டுவருவதாக அரசாங்க அறிக்கை கூறுகிறது. 1948-49இல் மட்டும் ஆசிரியர் சம்பளம், உபகரணங்கள் பிரயாணப்படி, உபகாரச் சம்பளம், பிற செலவுகள் ஆகியவற்றிற்காகச் சுமார் மூன்று இலட்ச ரூபாய் செலவிட்டதாகவும் சென்னை சர்க்கார் சமர்ப்பித்த அறிக்கை கூறுகிறது. நான்கு ஆண்டுகளில் (1945-49) பல்வேறு ஆசிரியப் பயிற்சிக் கூடங்களில் 394 (செகண்டரி, ஹையர்) ஆசிரியர்கள் பயிற்சிபெற்று பல்வேறு ஜில்லாக்களில் உள்ள 101 ஆதாரப் பள்ளிகளில் பணியாற்றுவதாக அவ்வறிக்கை மேலும் கூறுகிறது. 1949இல் பயிற்சி பெற்று வெளியேறிய 845 ஆசிரியர்களும் (208 பேர் இரு ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்) பல ஜில்லாக்களில் வேலை செய்வார்கள் என அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

அரசாங்கம் தன் பொறுப்பில் ஆதாரப் பள்ளிக்கூடங்களை மிக மிகக் குறைவாகவே நடத்துகிறது. அதுவும் எங்கெங்கு அரசியலாரின் ஆதாரக் கல்வி ஆசிரியப் பயிற்சிக் கூடங்கள் உளவோ அங்குள்ளமாதிரிப் பள்ளிகளைமட்டும் நடத்துகிறது. கடலூர் அடிப்படைக் கல்வி ஆசிரியப் பயிற்சிக் கூடத்தில் (ஆண்கட்கு) கடந்த ஓராண்டாக மாதிரிப் பள்ளியே இல்லை. அங்கு இரண்டு ஆண்டுகள் பயிற்சிபெற்ற (Raw hands) ஆசிரியர்கட்கு மாதிரி வகுப்புகள் நடத்துவதில் ஒருநாள் பயிற்சிகூட அளிக்கப்படவில்லை.

ஜில்லா போர்டு நிர்வாகம், தனிப்பட்ட நிர்வாகம் முதலியன தங்கள் மேற்பார்வையின்கீழ் ஆதாரப் பள்ளிகளை நடத்துகின்றன. தனிப்பட்ட நிர்வாகத்தின் கீழ் நடைபெறும் ஒரு சில பள்ளிகள் தவிர பிறவனைத்தும் பெயரளவில் ஆதாரப் பள்ளிகளாகவே உள.

பழைய முறையில் நடைபெற்ற பள்ளிகள் இன்று ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடங்களாகப் புதுப் பெயரிடப்பட்டுள்ளன. ஆனால், அவற்றின் நிலை என்ன? பள்ளி கண்காணிப்பாளர்கள் தங்கள் விசிட் தவறு

மல் "பள்ளிக்கூட இட வசதி போதாது, தோட்ட வேலைக்கு இடமில்லை, விளையாட இடம் வேண்டும், ஆசிரியர் உள்ளூரில் குடியிருக்க வேண்டும். ரோலும் ஆஜரும் அதிகரிக்கவேண்டும். தோட்ட வேலைக்குத் தண்ணீர் வசதி செய்யப்பட வேண்டும்" என்பது போன்ற மாமூலான குறைகளை விசிட் புத்தகத்தில் பொறித்திருப்பதைக் காணலாம். (இங்கு நாம் தணிக்கை அதிகாரிகளைக் குறை கூறுவதாகக் கொள்ளக்கூடாது. சட்டப்படி அவர்கள் கடமையைச் செய்கின்றனர்) ஜில்லா போர்டு இக்குறைகளை சொந்தக் கட்டிடமானால் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. வாடகைக் கட்டிடமானால் தலைமை ஆசிரியர் மூலம் குறைகளைக் கவனித்து வசதி செய்யாவிடில் கட்டிட வாடகையை நிறுத்திவிடுவதாயும் ஆசிரியர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தாக்கீது அனுப்புவதுடன் சரி. ஆனால் ஷை குறைகள் சிரஞ்சீவியாகவே இருக்கின்றன.

செயல்மூலம், இயற்கையோடு இயைந்த, வாழ்க்கைக்கேற்ற கல்வி புகட்ட தோட்டவேலை மிக மிக அவசியமே. தோட்டவேலைக்கோ இடமில்லை. குடி நீருக்கே வழியில்லாத கிராமங்கள் பல உள. இன்று ஆதாரப்பள்ளியாக உள்ள பல பள்ளிகட்கு ஏன் எல்லாவற்றிற்குமே தோட்ட வேலைக்கு இடமில்லை எனலாம். தோட்டம் என்பது ஆதாரப் பள்ளியில் செப்படி வித்தையாக இருக்க இயலாது. குரோட்டன்ஸ் செடிகளையும், பூச்செடிகளையும் காட்டுவது ஆதாரப் பள்ளிக்கு ஒவ்வாத செயல். வகுப்புக்கு ஒரு ஏக்கர் நிலமாவது வேண்டும். அதற்கேற்ற நீர் வசதி ஏனையவை அளிக்கப்படவேண்டும். இன்றைய பள்ளிகளில் உண்டா? எதிர்கால ஏற்பாடு ஏதாவது உண்டா? பழைய முறையில் இயற்கைப் பாடத்தை வாயால் சொல்லி, புத்தகத்தைக்கொண்டு படிப்பதுண்டு. ஆதாரக் கல்வியிலும், தோட்டமில்லாவிடில் வேறு வழி என்ன? எங்கே கல்வியில் புரட்சி? மூளையில் திணிப்பது பழையமுறைக் கல்வி. மூளையைப் பழக்குவது ஆதாரக் கல்வி. ஷை குறைபாடுகள் உள்ள பள்ளிகளில் ஆதாரக் கல்வி முன்னேறுமா? நாட்டின் கல்வித்தரம் உயருமா?

பல பள்ளிகளில் விளையாட்டென்பதையே தேடிப் பிடிக்கவேண்டிய நிலையில் உளது. விளையாட இடம் விசாலமாய் வேண்டும். பிள்ளை ஒன்றுக்கு 50 ச. அடி இடம் வீதம் எத்தனை கிராமங்களில் உளது? ஆட்டுக்குட்டிகளைப்போல் விளையாடும் காலத்திலும்கூட வகுப்பறைகளிலேயே அடைக்கப்படுவது ஆதாரப் பள்ளியிலும் நடைபெற்றால் கல்வித்தரம் உயருமா?

இம்மாதிரிக் குறைகள் ஒழிந்து கல்வித்தரம் உயரும் வழியே இல்லையா? என்றால் உண்டென்றே கூறுவோம். கல்வித் திட்டத்தால் வரவே இல்லை. செலவுதான் என்பதற்காக எட்டுத் திட்டங்களைப் போட்டு செயலாற்றாமல் வருடக் கணக்கில் அவற்றைப் புனராலோசனை செய்தால் நாம் பெற்ற சுதந்திரம் நிலைக்காது. அடிமை ஆட்சிக்கும் சுதந்திர சர்க்காருக்கும் வேற்றுமையின்றிப் போய்விடும். உருவாக்கிய திட்டத்தை செயலாற்ற வேண்டும். பணமில்லை என்றால் திட்டமிட்டதே தவறு.

---

**ஆசிரியர் பகுதி:**

# கடமை

புலவர்:—**ஐ. நடேசன்,** செயின்ட் ஆன்ஸ், இராயபுரம்.

"**என்** கடன் பணிசெய்து கிடப்பதே" என்றார் சைவ சமய குரவர். மக்கள் யாக்கையின் பயன் அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கே. அவற்றில் முதன்மையாகக் கூறப்பட்டது அறம். மேலே கூறப்பட்ட கடமையே அறம்.

'அறஞ்செய விரும்பு' என ஔவையார் முதன் முதன் கூறினார். அதன் பொருள், எவரும் தத்தமக்கமைந்த கடமையைத் தவறாமல் மேற்கொள்ளல்வேண்டும்; அதற்கு மன விருப்பமே அடிப்படை; மனம் ஒன்றை நாடாதுவிடின் சொல்லும் செயலும் தோன்றுவதில்லை என்பதைக் கருதியே விரும்பு எனச் சொன்னார்.

நம் நாட்டு மக்கள் மூத்தோர் சொல் வார்த்தையமுதம் எனக் கொள்பவர். முன்னோர் மொழியைப் பொன்னேபோல் பேணிக் காப்பவர். கற்றார்கூறும் கருத்தைச் சிரமேற்கொண்டு சேவை செய்பவர். ஆதலால்தான் ஔவை மூதாட்டியாரும் "அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்" என்பதற்கேற்ப மும்முடிமன்னரும் தம் மொழியை ஏற்று நடந்ததேபோல, மற்றையோரும் நடப்பர்என்னும் உறுதி கொண்டே கட்டளைப்பொருளில் 'அறஞ்செய விரும்பு' என்றனர்.

எனவே உலக மக்களை உய்ய வைக்கவே தொண்டேற்றுக் கல்விஊட்டும் ஆசிரியர்கள் தம் கடமையைத் தவறாமற் செய்தே தீரவேண்டும். "இயல்வது கரவேல்" என்றதும் அவ்வம்மையாரின் அரிய மொழியே. அதன்வகை ஆசிரியர், அவரவர் உள்ளக்கரிக்கு மாறாது தங்கள் கடமையைச் செய்யவேண்டும்.

ஒவ்வொரு ஆசிரியரும் தமது கடமை எத்துணைத்து எனக் கருதல்வேண்டும் கடமை என்பது மனிதனின் உயிரோடு தொடர வருவது. அந்த மறப்பது, அல்லது இகழ்ந்து தவறுவது உயிர்க்கே வஞ்சகம் புரிவதாகும். பழத்தில் சுவை பிரிக்க முடியாது. உயிரில் கடமை பிரிக்க முடியாது. கடமை ஒன்றே மனிதனைப் பெருமைப்படுத்துகிறது. சுவையில்லாக் கனியும் மணமில்லாமலரும் எள்ளித் தள்ளப்படுவதேபோல் கடமையைவிட்ட மனிதன் அறிஞரால் கடிந்து ஒதுக்கப்படுவான். அன்றியும் கடவுளன்புக்கும் புறம்பாகிறான்.

இதனை மறவாது ஆசிரியர் கடமையை நிறைவேற்றவேண்டும். ஒவ்வொரு ஆசியர்மீதும் சுமத்தப்பட்ட கடமை என்னும் சுமை உலக அளவினை உடையது. ஏன்! பல உலகங்களின் அளவுக்கு ஈடானது. எப்படி என்றால்

தன்னை வந்தடைந்த ஒரு மாணவன் வழி எத்தனை மக்கள் நாளடைவில் முன்னேறுகிறார்கள். ஒரு மாணவனைக் கருதும்போதே பெருந்தொகை மக்களை ஈடேற்றுகிறோம் எனமுடிந்தால், பற்பல மாணவரை நற்றுறையில் செலுத்தி நலம் பல புரியும் ஆசிரியருடைய பொறுப்பின் அளவை எங்ஙனம் எடைபோட்டுச் சொல்வது. ஆகவேதான் பலவுலகங்களின் அளவினது என்றோம்.

இதுவரையில் இக்கடமையைப் பெரிதாகவும் அரிதாகவும் தள்ளக்கூடாததாகவும் கூறிவந்தது ஏன்? ஆசிரியருள்ளத்தில் பெருங்குறை ஒன்றிடைவிடாது குடியிருக்குமாறு இக்கால நிலை அமைந்துள்ளது. ஆசிரியர் பெருமையுணராத உலகம் எல்லாத் துறையிலும் அலுவல்செய்கிறவர்களுக்கு பெருந்தொகையான சம்பளம் கொடுத்து அறிவுத்துறையில் அரும்பணிபுரியும் ஆசிரியர்க்கு அணுவுக்கும் ஈடாகாத பத்துக்கணக்கில் சம்பளம் கொடுத்து பசிக்கடிமையாக்கியுளது. இதை நோக்கினால் ஆசிரியரைத் தாழ்வுபடுத்தியதாக மனம் புழுங்கவேண்டித்தான் இருக்கிறது.

என்றாலும் உலகில் அறிவு விளக்குத் தாழியும் திரியும் நெய்யுமிட்டுக் கொளுத்திவிடும் ஆசிரியர்களை அணுவாகக் கருதியுள்ள அறியாமையைப் போக்குவதும் அவ்வாசிரியர் கடமையே யாகலின் ஆசிரியர்கள் தங்கள் குறையை மறந்து பணியாற்ற வேண்டும். அங்ஙனம் ஆற்ற வேண்டிய முறையைச் சில வகைகளாகப் பிரித்து எண்ணிக் காட்டுவோம்.

1. ஆசிரியர் மாணவனுக்கு வஞ்சனையின்றிக் கற்பித்தல்.

2. தான் பெறும் சம்பளத்தையே பயனாகக் கருதாமல் உலக நன்மையைத் தன் நன்மையாகக் கருதி அதனையே பயனாகக் கொண்டு உழைத்தல்.

3. வெறுப்பின்றி முழு விழைவோடும் இயல்வது காவாமல் தொண்டாற்றுதல்.

4. எங்கும் எப்பொழுதும் எவர்க்கும் தாமறிந்த எதையும் எடுத்தியம்புதல்.

5. நாமார்க்கும் குடியல்லோம் என்ற முன்னோர் கருத்தே தனதாகக்கொண்டு பிறர்க்கு அஞ்சித் தன் தொழிலைப் புரியாமல் ஏற்றுக்கொண்ட கடமைக்காகத் தொழிலையாற்றுதல். இவைகளே ஆசிரியர்களின் கடமைகளாம்.

பாலர் பகுதி:

# கடவுள் நம்பிக்கை

ஆசிரியர்: **ஆ. திரையன்.**

சிறுவர்களே! "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பது பழமொழி. இந்தப் பழமொழிக்கு ஈடான ஒரு கதைசொல்லி உங்களுக்கு விளக்கவேண்டும். அல்லவா!

பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நம் நாட்டில் கல்வியிற் சிறந்த பெரியோர் பலர் இருந்தார்கள். அவர்களில் ஔவையார் என்பவர் ஒருவர். அவர் சிறந்த கல்வியும் பரந்த நோக்கமும் நிறைந்த பக்தியும் உடையவர்.

எல்லா வகையிலும் சிறந்த ஔவையாரை எல்லோரும் மிக மதித்திருந்தனர். பேரரசர்களும் ஔவையார் சொல்லைத் தட்டி நடக்கமாட்டார்கள். ஔவையார் பக்தி நிறைந்தவர் என்று சொன்னோமல்லவா! பக்தி என்றால் என்ன? பற்று; இதுதான் அன்பு என்றும் சொல்லப்படுகிறது. கடவுட் பற்றுள்ளவர்கள் நாளும் காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்றுபோதிலும் பூசை செய்வார்கள். அப்படியே நமது மூதாட்டி ஔவையாரும் விநாயகக் கடவுளை எப்போதும் வணங்குவது வழக்கம். ஏன் என்று கேட்கிறீர்களா? விநாயகக் கடவுளுக்கு முன்னவன் என்று பெயர். எவரும் விநாயகரைத் தொழுதுதான் எந்தத் தொழிலையும் தொடங்குவார்கள். அப்படித் தொடங்கும் எந்த வேலையும் இடையூறு இன்றி முடியும். ஆகையால்தான் ஔவைப் பிராட்டியாரும் விநாயகக் கடவுளையே பூசித்துவந்தார்.

ஔவையார் காலத்தில் ஒரு பெரியார் இருந்தார். அவர் பெயர் சுந்தரமூர்த்தி நாயனார். அவரும் சிறந்த புலவர், நிறைந்த பக்தியுடையவர். எப்போதும் கடவுள்மீது பாடிக்கொண்டே இருப்பார்! அவர் பாடிய பாடல்களுக்கு தேவாரம் என்று பெயர்.

அதே காலத்தில் சேர நாட்டில் ஒரு அரசர் இருந்தார். அவர் பெயர் பெருமாக் கோதையார். அவரும் சிறந்த பக்தர். சுந்தரமூர்த்தி நாயனாரும் பெருமாக் கோதையாரும் தோழர்கள். இவர்களிருவரும் ஔவையாரிடம் நட்பு கொண்டிருந்தார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனாரும் பெருமாக் கோதையாரும் கைலைக்குப் போக விரும்பினார்கள்; விரும்பியவாறு புறப்பட்டார்கள். எப்படி? சுந்தரமூர்த்தி நாயனார் யானைமீது சென்றார். பெருமாக் கோதையார் குதிரை மீது சென்றார். அவர்கள் போகும்போது ஔவையாரையும் கூட வருமாறு அழைத்தார்கள். ஔவையாரும் போக ஆசைகொண்டார்.

அப்போது ஔவையார் விநாயகருக்குப் பூசை செய்துகொண்டிருந்தார். பூசையை விரைவில் முடித்துவிட்டுப் போகக் கருதினார். அப்படியே பூசையைச்செய்தார். விநாயகர் ஔவையைப் பார்த்து 'என்ன அவசரம்' என்று கேட்டார். ஔவையார் உள்ளதை உரைத்தார். "வழக்கம்போல உன் பூசையைச்செய்" எனக் கட்டளையிட்டார் விநாயகர். அந்தச், சொல்லுக்குக் கீழ்ப்படிந்து ஔவையார் என்றும்போல் முறைப்படி பூசைசெய்து முடித்தார்.

பூசை முடிந்ததும் விநாயகர் தமது தும்பிக்கையால் ஔவையாரைத் தூக்கிக் கைலையில் விட்டார். சுந்தரமூர்த்தி நாயனாரும் பெருமாக் கோதையாரும் கைலையை அடைவதற்குமுன் ஔவையார் போய்ச் சேர்ந்துவிட்டார். நெடுநேரம் கடந்து அவர்களிருவரும் வந்தார்கள். ஔவையாரைக் கண்டார்கள். ஆ! எங்களுக்குமுன் வந்துவிட்டீர்களே! என்றார் அரசர்.

"மதுரமொழி நல்லுமையாள்
மைந்தன் மலர்ப்பதத்தை
முதிரநினைய வல்லார்க்கு
அரிதோ முகில்போல் முழங்கி
அதிர வருகின்ற யானையும்
தேரும் அதன்பின் செல்லும்
குதிரையும்காதம் கிழவியும்காதம்
குலமன்னவனே."

என்பது அப்பாட்டு.

பார்த்தீர்களா? பக்தியின் பயனை. ஆதலால் நாமும் கடவுளை நம்பி எந்தக் காரியத்தையும் செய்யவேண்டும். செய்தால் எல்லா வகையிலும் சிறப்பு உண்டாகும்.

"கற்றதனாய பயனென்கொல்
வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்".
(குறள்).

"வாக்குண்டாம் நல்ல மனமுண்
டாம் மாமலராள்
நோக்குண்டாம்மேனி நுடங்காது—
பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை
யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு".

---

உபாசனை புத்தியாலாவதன்று. நம்பிக்கையுடன் ஆற்றவேண்டுவதொன்று. இந் நம்பிக்கையுடன் தினமும் உபாசனை செய்யவேண்டும். சத்திய ரூபியான கடவுள் எங்கும் உள்ளார். ஆகையால் எல்லா உயிருடனும் தொடர்பு பெறவேண்டும். மானிட சேவை செய்யவேண்டும். இதனால் பயனைக் கருதாப் பணியும் உபாசனையென்றே கருதப்படும்.

மகாத்மா காந்தி அடிகள்.

600 008

# பகவத் கீதை

## ஸாங்க்யயோகம் — பகுத்தறிவுப் படலம்

(A. S. குருசுப்பிரமணியம்)

(முன் தொடர்ச்சி)

(பாரதப்போரில் இரு தானைகளுக்கும் நடுவே நின்ற பார்த்தன் அவ்விருதானைகளிலும் தன் தந்தையரும், மூதாதையரும், மெய்ஞ்ஞான மளித்தோரும், உற்றுருறவினரும் இருத்தலைப் பார்த்து இரக்கமுறு நெஞ்சினனாய், போரினிப் புரியேன் எனத் தேர்த்தட்டின்மேல் அமர்ந்தான்; என அர்ஜுனன் துயர்ப் படலத்தில் முன்னர்க் கண்டோம்.)

அவ்வண்ணம் இரக்கமேலீட்டால் உள்ளம் உருகியவனாய்த் துன்பக் கண்ணீரருவி பொழிய துயருற்று நிற்கும் பார்த்தனை நோக்கி மதுசூதனன் 'அர்ஜுனா, இச் சிக்கலான போர்முனையில் இவ்வுள்ளக் குழப்பத்தை நீ எங்கிருந்து பெற்றனை? இஃது அறிஞர்க்கு ஒவ்வாது; வானாட்டின் வழியடைப்பது; பழிக்கிடமானது, பார்த்தா! பேடியாகாதே, உனக்கு ஒரு சிறிதும் இது தகாது. பகைவரைச் செகுப்போய், இழிவுதரும் உள்ளக் குழப்பமான கோழைத் தன்மையைக் கொன்று வீறுடன் எழுந்து நில்" என்றனன்.

இவற்றைச் செவிமடுத்த அர்ஜுனன் கண்ணனைநோக்கி "மதுசூதனா! நான் வழுத்துதற்குரிய பீஷ்மரையும் த்ரோணரையும் போர்க்களத்தில் கணைகளால் எங்ஙனம் பொருதுவேன்? பொருநரை அழிப்போய், போர்க்களத்தில் பேராசியர்களைக் கொல்லாமல் பிச்சைபுகினும் நன்றேயன்றோ! அன்றி ஆசிரியர்களை மடியச்செய்தால் ஈண்டே குருதி தோய்ந்த பொருளையும் இன்பங்களையும் பெற்றவனாவேன். நாம் கௌரவரை வெற்றிகொள்வது—நம்மை அவர்கள் வாகைசூடுவது, எது சிறந்ததென எண்ண முடியவில்லை. எவரை மாய்த்து உயிர்வாழ இசையோமோ அக் கௌரவர்கள் களத்தில் கடுகி நிற்கின்றனர். இரக்கத்தால் இயற்கை நலன்களை இழந்து சோர்ந்தவனாய்க் கடப்பாட்டில் அறிவு மயங்கினனாய் எப்பணி சிறந்ததென்பதை உன்னைக் கேட்கின்றேன். உறுதியாகக் கூறுவாய். நான் உன்சீடன், புகல் அடைந்தேன், கட்டளை தருக. மாநிலத்தில் மட்டற்ற செல்வமுடைய அரசுபெறினும் அன்றி வானாட்சி அடையினும் புலன்களை வாட்டும் வருத்தத்தை எது அழிக்குமோ அதை நான் காணவில்லை" என்று கூற, இவை யாவற்றையும் ஸஞ்சயன் திருதராட்டிரனுக் கறிவித்தனன்.

இரு தானைகளுக்கும் நடுவே காணும் வருத்தமே வடிவான அர்ஜுனனை நோக்கிக் கண்ணன் புன்முறுவல் பூத்து.

"பார்த்தா! நீ, வருந்தத் தகாதார் பொருட்டு வருந்துகின்றாய்; வித்தகத்திறல் மிகவிளம்புகின்றாய், உயிர் உள்ளோரையோ, அற்றவரையோ கண்டு அறிஞர் வருந்தார்;

நான், நீ, இக்கொற்றவர்கள் ஆகிய் எல்லோரும் ஒரு ஞான்றும் இல்லாமலிருந்ததில்லை. இனிமேலும் நாமெல்லோரும் இல்லாமலிரோம் என்பதுமில்லை; உடலில் உறையும் உட்பொருளான ஆன்மாவுக்கு டஉ

வில் குழவி, இளமை, மூப்புப்பருவங்கள் எங்ஙனமோ அங்ஙனமே வேறு உடலைப் பெறுதலும், அதில் அறிஞன் கலங்குவதில்லை; குந்திமகனே, புலன்கள் தத்தமக்குரிய பொருள்களுடன் கூடும் நிலைகளே, குளிர், வெப்பம், இன்பம், துன்பம், என்னும் உணர்ச்சிகளைத் தூண்டுகின்றன. அவை தோன்றி அழிவன; நிலையற்றன; அவற்றைப் பொறுப்பாயாக, ஆண்மையின் அணிகலத்தோனே, இவைகள், இன்ப துன்பங்களை நிகரெனக் கொண்டவனாய், நிலை நிறுத்திய அறிவுடையவனாய் விளங்கும் எவனொருவனைச் சேராவோ அவனே இறவா நிலையை யடைவான்; இன்மையாவது உண்மையாகாது, உள்ளது இன்மையதாகாது, உண்மையை உணர்ந்தோர் இவற்றின் வேறுபாடுகளை உணர்வர்; ஆன்மா பார்முழுதும் பரவி நிற்கும் பொருள்; அழிவற்றது; யாவராலும் அழிக்கவொண்ணாதது; என்றும் உளதாய் அழிவற்றதாய், அளக்கவொண்ணாததாய் இருக்கும் ஆன்மாவினுடைய வடிவங்கள் இறுதியை யுடையன; ஆன்மா கொல்வானென்று நினைந்தோனும் கொல்லப்படுவான் என உணர்ந்தோனும் உண்மையை அறிகிலார். ஆன்மா கொல்வதுமில்லை, கொல்லப்படுவதுமில்லை. ஆன்மா பிறப்பு இறப்பற்றது, இல்லாதிருந்து தோன்றாதது; என்று மிருப்பது, அழியாதிருப்பது; தொன்மையது; உடல் கொல்லப்படின் ஆன்மா கொல்லப்படுவதில்லை.

பார்த்தா, ஆன்மாவை அழிவற்றதாய், என்றும் உளதாய், பிறப்பற்றதாய், மாறுபாடற்றதாய் எவன் அறிகின்றானோ என்னே! அவன் கொல்வதும், கொல்லப்படுவதும் எதனை? பீறிய போர்வையைப் பெயர்த்துப் பின்னர் வேறியல் போர்வையை விரும்புவாரென ஆறிய உடலில் உறையும் ஆன்மா மாறி மற்றோருடம்பினை மருவும்; ஆன்மாவை, ஆயுதங்கள் வெட்டா. தீ எரிக்காது. நீர் நனைக்காது. வளி உலர்த்தாது; பிளத்தற்கரியது; எரிக்கொணாதது; நனைக்க வியலாதது; உலத்தற்கரியது; அழிவற்றது; அசைவற்றது; நிலைபெற்றது, எங்கும் நிறைவாய் என்றும் உள்ளது; புலன்களுக்குப் புலப்படாதது; புத்திக்கு எட்டாதது; மாற்றமற்றது; ஆன்மாவை இங்ஙனம் அறிந்து நீ இன்னல்மிகு துயரை ஒழிப்பாய், ஆன்மா பிறந்திருக்கும் தன்மையுடைத்தெனை நீ கருதினும் அதற்கும் நீ வருந்தற்குரியாயில்லை.

பிறந்தோன் இறப்பதுறுதியெனில் இறந்தோன் பிறப்பதுறுதியெனில் இத் தவிர்க்கொணாச் செய்கைக்கு நீ வருந்துதல் தகாது.

பாரதா! பொருட்களின் தோற்றம் தெளிவில்லை இடையில் தோற்றமுடையன, ஆயினும் இறுதியில் தெளிவில்லை. இங்ஙனமிருப்பதற்கு வருந்துதல் என்? ஆன்மாவை வியப்பென ஒருவன் காண்கிறான், வியப்பென ஒருவன் கூறுகிறான், வியப்பென ஒருவன் கேட்கிறான் எவரும் இதனைக் கேட்டு அறியவே இல்லை.

அறக்கடப்பாடு (சுதர்மம்) பார்த்தா! எல்லோருடலிலும் உறையும் ஆன்மா இறப்பற்றது, ஆகையால் நீ எவர்பொருட்டும் துயருறல் வேண்டா. உன் அறக்கடப்பாட்டை நோக்குமிடத்து, போரில் புறமுதுகு காட்டிப் பின்னிடுதல் இழிவைத் தரும். அறப்போரைக் காட்டிலும் வீரப்போர் மன்னர்களுக்குச் சிறந்ததில்லை; தற்செயலாய் கிடைக்கப் பெற்றதுமாய், திறந்துகிடக்கும் இன்பபுரி வாயில் போன்றதுமாய்



வாய்த்ததாகிய இதுபோன்ற போரை பேறுபெற்ற வீரப்போர் மன்னர்களே பெறுவார்கள். ஆனால் நீ இவ்வறப்போரை புரியாவிடின் அதனால் உன் அறக்கடப்பாட்டையும், புகழையும் இழந்து தீவினையைச் சார்வாய்; உலகோர் என்றும் உன் அழியாப் பழியை அரற்றுவார்கள், நற்புகழ்பெற்றோனுக்குப் பழிச்சொல் இறப்பைக் காட்டிலும் கொடிது; அச்சத்தால் போரில் பின்னிட்டான் என்று சிறந்த தேராளிகள் உன்னைக் கருதுவர், அவர்களின் நன்மதிப்பைப்பெற்ற நீ இதனால் இழிவையடைவாய்; நின் பகைவர்கள் உன் திறமையை இகழ்ந்து சொல்லொணா அவச்சொற்கள் பல புகல்வர். இதனைவிட மிக்க துன்பமெது? குந்தி மகனே! போரில் கொல்லப்படின் வானுலகெய்துவாய், வாகை சூடினால் மண்ணாள சேர்ச்சிவாய், ஆகையால் போருக்கு வீறுடன் எழுந்து நில், இன்பம் துன்பம், இழப்பு, ஊதியம், வெற்றி, தோல்வி இவற்றிற்கு ஒத்த உள்ளத்தனாய் போருக்கொருப்படுக, இங்ஙனம் செய்யின் பாவத்தை யடையாய்.

**யோகம்.** "ஸாங்க்ய" வழிப்படி இந்நல்லுரை உனக்குக் கூறப்பட்டது, இனி யோகவழி முறைப்படி கூறுகிறேன். கேட்பாயாக, இவ்வறிவைக் கொண்டவன் கருமத்தளையை அறுத்திடுவான். இச்செயலின் முயற்சிக் கழிவில்லை. இடையூறும் வினைகளும் இடைகூடா. இவ்வறத்தின் சிறு பகுதியும் பேரச்சத்தினின்றும் பாதுகாக்கும்; குருகுலக்கொழுந்தே! இதில் உறுதியான புத்தி (அறிவு) ஒன்றே. உறுதியில்லோரின் அறிவு பல கிளைப்பட்டன. முடிவற்றன; அறிவிலிகள் மறைகளின் பொருளின்கண்காணும் கடா விடைகளில் பற்றுடையவராய் வேறு இல்லை என்று கடா விடைகள் கூறுபவராய் அளவற்ற அவாவைக்கொண்ட உள்ளத்தவராய் விண்ணுலகையே பெரிதென்பவராய் இன்ப நுகர்ச்சிக்காகவும், பிறப்பையே தொழிலின் பயனாகக் கொண்டதும் சிறப்பானதும் விரிவானதுமான செய்கைகளைப்பற்றியதான மலர்போன்ற மொழிகளை இனிதே இடைவிடாது கூறுவர்; இன்ப நுகர்ச்சியில் ஆழ்ந்த பற்று கொண்டு அதன்கண் மதிமயங்கும் இவர்கட்கு உறுதியான அறிவு உள்ளத்தில் தோன்றாது. மறைகள் முக்குணங்களைப்பற்றிப் பேசுகின்றன. அர்ஜுனா! நீ முக்குணங்களையும் கடந்து, இருமைகளொழிந்து என்ஞான்றும் உண்மையினின்றும் பிறழாது பொருளை ஈட்டுதல் போற்றல் என்றவைகளில் நெகிழாத உள்ளத்தவனாய் உடலைக் கருதாது உள்ளான்மாவை வயப்படுத்துவாய்; பரந்த நீர் நிலையில் பருகுதற்குரிய கேணியின் பயன் எங்ஙனமோ அங்ஙனமே அறிவுடைய; ஞானமுடைய; அந்தணனுக்கு மறைகளுமுடையன. பார்த்தா! நீ செயலுக்கு அதிகாரி பயனுக்கன்று. வினைப்பயன் கருதாதே, செயல் செய்யாமலுமிராதே.

நடுநிலை தனஞ்சயா! யோகத்தில் உறுதிகொண்டு பற்றற்று வெற்றி தோல்விகளை நிகரெனக்கொண்டு செயல்களைச்செய்க. நடு நிலையே யோகமெனப்படும். நடுநிலை அறிவுடன் பயன் விழையாது செய்யும் தொழிலைவிட, சுயநலச் செயல் நெடுந்தொலைக் கீழ்ப்பட்டது. நடுநிலை அறிவு யோகத்தில் சரண்புக விரும்பு. பயன்பெறத் தொழில் செய்வோர் புல்லியர். நடுநிலை அறிவுடையோன் வாழ்க்கையிலேயே நற்செய்கை தீச்செய்கை

இரண்டையும் துறக்கின்றான். ஆகையால் யோகத்தைப் பயில்வாய். உயர்ந்த வினைத்திறன் யோகமாகும். நடுநிலை அறிவுடன் கூடிய அறிஞர் தொழிற்பயனைத் துறந்து பிறவித்தளையினின்றும் விடுபட்டு இன்பநிலையை உறுதியாய்ப் பெறுவர். எப்பொழுது உன் அறிவு ஆசைக் குழப்பங்களைத் தாண்டிச் செல்லுகின்றதோ அப்பொழுது கேட்கவேண்டியதிலும், கேட்பதிலும் அவாவின்மை அடையும். எப்பொழுது பல பொருளுக்கு பலவாகக் கலக்கமுறும் அறிவு அசைவற்ற ஆன்மாவில் உறுதியாக நிற்கின்றதோ அப்பொழுதே யோகத்தை அடைவாய் எனக் கண்ணன் கழறினான்.

**சமாதி நிலை.** இவற்றைக்கேட்ட பார்த்தன் கண்ணனை நோக்கிக் கேசவா! ஞான உறுதியுடன் ஸமாதியில் நிற்போனுடைய குறிக்கோள் என்ன? அவ்வறிவு உறுதிகொண்டோன் எவ்வாறு உரையாடுவான்? எங்ஙனமிருப்பான்? எப்படி நடப்பான்? என வினவினான். கண்ணன் பார்த்தனை நோக்கி பார்த்தா!. ஒருவன் தன் உள்ளத்தில் எழும் அவாக்கள் அனைத்தையும் துறந்து ஆன்ம அறிவால் தன்னுள் மகிழ்ச்சியடைகின்றானோ அவனே நிலைபெற்ற அறிவுடையோன். துன்பத்தில் துடியாத உள்ளத்தவனாய், இன்பத்தில் அவாமிகு எழாதவனாய், அவா, அச்சம், சினம் தவிர்த்தவனாயின் அவன் நிலைத்த ஞானியாவான். எவன் எவ்விடத்தும் பற்றில்லானாய் நற்செய்கை தீச்செய்கைகளால் ஆவலுறுவதும், வருந்துவதும் யின்றியிருப்பானோ அவனறிவே உறுதியானது. ஆமை தன்னுறுப்போரைந்தையும் தன்னுள் அடக்குமாபோல் தீமைசெய்புலன்களை பொறிகளினின்றும் தன்னுள்ளே செறிய அடக்குகின்றானறிவே உறுதியில் நிலைபெற்றதாகும். உணவை ஒழித்தோனுக்குப் பொருட்கள் நீக்கப்படினும் சுவை நீங்காது. அச்சுவையும் ஆண்டவனைக் காணின் நீங்குகிறது. குந்தியின் செல்வ! முயற்சியும் நல்லறிவும் உடையோனிடத்தும் புலன்கள் எல்லையின்றி செல்லும்போது தம்முடன் உள்ளத்தையும் இழுத்துச் செல்கின்றது. அவற்றைச் செவ்வனே அடக்கி யோகத்தி விருப்போனாய் என்னை முதலாகக் கொண்டு புலன்களைத் தனக்கடிமையாக்குகின்றான் எவனோ அவனறிவே உறுதியானது.

**மனிதன் பொருட்களைக் கருதும்போது அவற்றில் பற்றுதலேற்படுகின்றது. பற்றால் அவா எழ அவாவினின்றும் சினம் தோன்றுகின்றது. சினத்தால் மயக்கம், வெளியாக மயக்கத்தால் நினைவுகள் தவறும் மறப்புகள் உண்டாகின்றன. நினைவுத் தவறுதலால் அறிவு அழிகிறது. அறிவு அழிவால் அவன் அழிகிறான்.**

விருப்பு வெறுப்புகளின்றி புலன்களைத் தன்கீழ் அடக்கி அடிமைப்படுத்திய அறிஞன் உள்ளத் தெளிவைப் பெறுகிறான். உள்ளத்தின் அமைதியால் மனிதனின் எல்லாத் துன்பங்களும் ஒழிகின்றன. தெளிந்த உள்ளத்தோனுக்கு விரைவில் அறிவு (புத்தி) நன்கு நிலைபெறுகின்றது. நிலைபெறாதோனுக்கு அறிவு இல்லை. ஆன்ம சிந்தையில்லை உள்ளத்தில் அமைதியில்லை. அமைதியில்லோனுக்கு இன்பமேது? புலன்கள் அலைகையில் எவ்வுள்ளம் அவற்றைப் பின்பற்றிச்

(அட்டை 3ஆம் பக்கம் பார்க்க)

908919


# வெங்கட்ராமா அண்டு கோ.,

பிரசுரகர்த்தர்கள் :

**1-C, ஆண்டர்ஸன் தெரு சென்னை-1.**

எங்கள் வசம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான கீழ்க்கண்ட எல்லாவித புத்தகங்களும் கல்வியில் தேர்ந்த போதகர்களால் எழுதப்பட்டும், சென்னை அரசாங்கத்தாரால் பாட புத்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது. சீசன் காலத்தில் ஆர்டர்கள் தாமதமாகாமலிருக்க, தங்களுக்குத் தேவையானவைகளுக்கு ஆர்டரை முன்கூட்டியே அனுப்பக்கேட்டுக் கொள்ளுகிறோம்.

1. புதிய முறைத் தமிழக வாசகம் **1** முதல் **5** வகுப்பு வரை
2. ஆரம்ப கணிதம் **3** முதல் **5** வகுப்பு வரை
3. இயற்கைப் பாடமும், தோட்டவேலையும் **4, 5,** வகுப்புக்களுக்குரியது
4. இந்துதேச சரித்திரம் **4, 5,** வகுப்பு வரை
5. ஷை **6** முதல் **8** வகுப்பு வரை
6. தமிழ்மொழிப் பயிற்சிகள் **3** முதல் **5** வகுப்பு வரை
7. தமிழ் நீதி கதா வாசகம் **3** முதல் **5** வகுப்பு வரை
8. தென்னாட்டுப் பேரரசர் இலக்கிய கதைகள்
9. புதுமலர் பூகோளம் **4, 5,** வகுப்பு வரை


(24 ம் பக்கத் தொடர்ச்சி.)

செல்கின்றதோ அவ்வுள்ளம் கடலில் புணையைக்காற்று மோதுதல் போல அறிவைத் தாக்குகின்றது. ஆகையால் வன்றோளாய்! யாண்டும் பொருள்களினின்றும் புலன்களை அடக்க வல்லானெவனோ அவனறிவே நிலைகொண்டது, உறுதிபெற்றது. எல்லோரும் எதில் இரவாகக் கொண்டிருக்கிறார்களோ அதில் உள்ளமடங்கிய முனிவன் விழிப்புடையவனாயிருக்கிறான். உயிர்கள் விழித்திருக்குமவற்றில் முனிவன் இரவாகக் காண்கின்றான். அசையாமலும் யாவற்றையும் தன்னுள் அடக்கியும் நிலை குலையாததுமாகிய கடலில் நீர்த்தொகுதிகள் எங்ஙனம் சேர்கின்றனவோ அங்ஙனமே அவாக்களெல்லாம் அவனை அடைந்தும் எவன் கடல் நிலைபோலிருக்கின்றானோ அவன் அமைதியை அடைகின்றான்; அவாக்களை அவாவுவோன் அதனை அடையான். எவன் எல்லா அவாக்களையும் அழித்து பற்றில்லானாய் "நான்" "என்னுடையது" என்பன இல்லானாய் இருக்கின்றானோ அவனே அமைதியைப் பெறுகின்றான். பார்த்தா! இது பிரம்மநிலை. இதைப்பெற்றோன் பிறகு மயங்குதலில்லை. இறுதிக் காலத்திலேனும் இதை விழைவோன் பிரம்மத்தில்கலந்து போக்குவரவற்ற முக்தி நிலையாகிய பிர்ம்மா நிர்வாணத்தை அடைகிறான் என விளம்பினான் கண்ணன்.

பி. ஜி. பால் அண்டு கம்பெனி, புத்தக வியாபாரிகள்.

எமது புதிய புத்தகங்கள்

---

ஆதாரக் கல்வியின் பாடத்திட்டத்தை அனுசரித்து
திருத்தி அமைக்கப்பட்டவை.

# கிண்டர் கார்டன்
# தினசரிக் கணக்கு

ஆசிரியர்

**S. ஜகன்னாதன்**

கிண்டர் கார்டன் உதவி ஆசிரியர்
டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, சென்னை.

**ராமச்சந்திரன்,** B A. (Hons.), M. Ed.
திருத்தியமைத்தது.

| | | |
|---|---|---|
| **முதற்புத்தகம்** (முதல் வகுப்பு) | அணா | 5 |
| **இரண்டாம் புத்தகம்** (இரண்டாம் வகுப்பு) | அணா | 6 |
| **மூன்றும் புத்தகம்** (மூன்றும் வகுப்பு) | அணா | 10 |

4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை

Edited and Published by Sri A. K. S. Sarma, 87, Acharappan St., Madras.
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint St. Madras—1